# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

விலை: 30
பக்கங்கள்: 28

சுடர் 33 கதிர் 261 ஆடி 29ஆம் நாள் செவ்வாய்க்கிழமை 14 ஓகஸ்ட் 2018 வள்ளுவர் ஆண்டு 2049

## தனிச் சிங்கள விண்ணப்பத்தால் அந்தரித்த அலுவலர்கள்

யாழ்ப்பாணம், ஓக.14

வடக்கு மாகாண சுதேச மருத்துவத் திணைக்களத்தால் அனுப்பப்படிருந்த விண்ணப்பப் படிவம் சிங்களத்தில் இருந்தமையால் அலுவலர்கள் சிரமங்களை எதிர்கொண்டனர் என்று தெரிவிக்கப்பட்டது. >> 23

## செஞ்சோலை படுகொலையின் 12ஆம் ஆண்டு நினைவு இன்று

முல்லைத்தீவு, ஓக. 14

முல்லைத்தீவு செஞ்சோலை சிறுவர் இல்லத்தின் மீதான இலங்கை வான்படையின் குண்டுத்தாக்குதலில் கொல்லப்பட்ட 61 மாணவிகளின் 12 ஆண்டு நினைவு தினம் இன்றாகும்.

2006ஆம் ஆண்டு காலை 6 மணி இலங்கை அரச வான்படையின் இரண்டு கிபிர் செஞ்சோலை சிறுவர் இல்லம் மீது குண்டுத் தாத் தாக்குதலை >> 25

## சிறுமிகளைப் போன்று சிறுவருக்கும் ஆபத்து

*உடன் செயலாற்ற வேண்டும் என்று நல்லூர் பிரதேச சபையில் சுட்டிகாட்டு*

யாழ்ப்பாணம், ஓக.14

யாழ்ப்பாணத்தில் சிறுமிக ளைப் போன்று சிறுவர்க ளும் துர்நடத்தைக்கு உட் >> 22

## கிறீஸ் பூதத்தின்போது அனுபவித்த வேதனையை குள்ள மனிதர்களாலும் மக்கள் அனுபவிக்கின்றனர்

*தடுக்கும் முயற்சில் மக்கள் அனைவரும் ஒன்று திரளவேண்டும் என்றார் பேராயர் இ. டேனியல் தியாகராஜா*

யாழ்ப்பாணம், ஓக. 14

2012ஆம் ஆண்டியே கிறீஸ் பூதம் என்று சொல்லி மக்கள் பல பயங்கரத்துக்கூடான அனுவங்களைச் சுமந்தார்கள். பலவிதமான வேதனைகளை அனுபவித்தார்கள். அந்த வேதனை போன்று இப்போது குள்ள மனிதர்கள் பற்றிய ஒரு அசம்பாவிதம் >> 23

# வாடிகள், படகுகள், வலைகள்
# நாயாற்றில் நேற்றிரவு தீக்கிரை

### தமிழ் - சிங்கள முரண்பாட்டின் விளைவு எனக் குற்றச்சாட்டு



நாயாறு, ஓகஸ்ட் 14

முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள நாயாற்றுக் கரையோரத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த படகுகள், அவற்றின் இயந்திரங்கள், கரையோரம் இருந்த வாடிகள் மற்றும் மீன்பிடி வலைகள் என்பன நேற்றிரவு வேண்டுமென்றே தீ வைத்து எரித்து நாசமாக்கப்பட்டுள்ளன. எரிக்கப்பட்டவை அனைத்தும் தமிழ் மீனவர்களுக்குச் சொந்தமானவை >> 23

see more news in newuthayan.com

## தெல்லிப்பழையில் நான்கு வீடுகள் மீது ஒரே இரவில் கைவரிசை

யாழ்ப்பாணம், ஓக. 14

தெல்லிப்பழைப் பொலிஸ் பிரிவுக்குட் பட்ட பகுதிகளில் கொள்ளைக் கும்பலின் அட்டகாசம் கடந்த இரண்டு நாள்களாக அதிகரித்துள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது. கடந்த சனிக்கிழமை அதிகாலை தெல்லிப்பழைப் பகுதியில் உள்ள நான்கு வீடுகளில் புகுந்த கொள்ளையர் >> 23

### காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பான

## பணியகத்தை கண்காணிக்க பன்னாட்டுக் குழு அவசியம்

### யாழ். மாவட்டப் பொது அமைப்புகள் வலியுறுத்து

யாழ்ப்பாணம், ஓக.14

பலவந்தமாகக் காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பான பணியகம் (ஓ.எம்.பி.) முன்னெடுக்கும் செயற்பாடுகளைக் கண்காணிப்பதற்கு பன்னாட்டுப் பிர திநிதிகளை உள்ளடக்கிய கண்காணிப்புக் குழு ஒன்று கட்டாயம் அமைக் கப்பட வேண்டும் என்று வலியுறுத்தியிருக்கின்றன யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த பொது அமைப்புகள்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையில் >> 25

## எம்மை வசைபாடியபோதும் பிரச்சினைகளைத் தீர்த்தோம்

### தொழிற் சங்கத் தலைவர்களை வளைக்க மகிந்த இப்படிக் கருத்து

கொழும்பு, ஓக.14

எம்மை முன்னர் நீங்கள் திட்டிய சந்தர்ப்பங்கள் உள்ளன. சத்தமிட்ட சந்தர்ப்பங்கள் உள்ளன. ஆனால் நாங்கள் அவற்றுக்குப் பதில்வழங்கிப் பிரச்சினைகளைத் தீர்த்தோம். இப்படி தெரிவித்துள்ளார் முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்ச. கொழும்பில் >> 25

## எதிர்காலம் தொடர்பில் மகிந்த வீட்டில் கூட்டம்

*கூடுகின்றனர் கூட்டு எதிரணியினர்*

கொழும்பு, ஓக.14

எதிர்கால அரசியல் செயற்பாடுகள் தொடர்பாகத் தீர்க்கமான முடிவுகளை எடுப்பதற்காக முன்னாள் அரச தலைவர் தலைமையில் கூட்டு எதிரணியினர் இன்று கூடி ஆராயவுள்ளனர்.

இந்தச் சந்திப்பு கொழும்பில் உள்ள மகிந்த ராஜபக்சவின் இல்லத்தில் நடைபெறவுள்ளது என்று >> 23

## வடக்கு அமைச்சர்கள் பதவி விலகவேண்டும்

### தற்போதுள்ள சிக்கலைத் தீர்க்க ஆளுநர் ஆலோசனை

கொழும்பு, ஓக. 14

வடக்கு மாகாண அமைச்சரவை முடங்கிப்போயுள்ள தற்போதைய நிலையில் இருந்து அதனை மீட்பதற்கு முதலமைச்ச >> 23

## வெடுக்குநாரி ஆதிலிங்கத்தை வழிபட கிடைத்தது அனுமதி

*எனினும் ஆலயத்தில் மாற்றங்களைச் செய்ய தொல்லியல் திணைக்களம் மறுப்பு*

வவுனியா, ஓக. 14

வவுனியா வடக்கு நெடுங்கேணியில் உள்ள வெடுக்குநாரி ஆதிலிங்க ஆலயத்துக்குச் செல்வதற்கு விதிக்கப் பட்டிருந்த தடை நீக்கப் பட்டுள்ளது. எனினும், ஆலயத்தில் மாற்றங்களை செய்யவோ, கட்டடங்களை அமைக்கவோ முடியாதென தொல்லியல் திணைக்களம் குறிப்பிட் >> 23

## ராணுவத்திடமுள்ள காணிகள்; ஆராய திலக் திடீர் வருகை

### வவுனியா, மன்னார் மாவட்டச் செயலர்களை வவுனியாவில் சந்தித்துக் கலந்துரையாடல்

வவுனியா, ஓக.14

இராணுவத்தினர் விடுவித்த காணிகள் உரியவர்களிடம் கையளிக்கப்பட்டதா என்பதை நேரில் கண்காணிக்கவே வவுனியா வந்தேன் என்று தெரிவித்தார் அபிவிருத்துறை அமைச்சர் திலக் மாரப்பன.

நேற்று வவுனியாவுக்குத் >> 25

## சீனாவின் கப்பலைத் தேடி அல்லைப்பிட்டியில் ஆய்வு

யாழ்ப்பாணம், ஓக.14

500 ஆண்டுகளுக்கு முன்னர் மூழ்கியது என்று கூறப்படும் சீனக் கப்பல் ஒன்றைத் தேடி யாழ்ப்பாணம், அல்லைப்பிட்டிப் பகுதியில் தொல்பொருள் திணைக்கள அதிகாரிகள் ஆராய்ச்சிகளை ஆரம்பித்துள்ளனர்.

500 ஆண்டுகளுக்கு முன் >> 25

## மன்னார் அகழ்வுப் பணி 20 வரை இடை நிறுத்தம்

மன்னார், ஓக.14

மன்னார் சதொச வளாகத்தில் மேற்கொள்ளப் பட்டுவந்த அகழ்வுப் பணிகள் எதிர்வரும் 20 ஆம் திகதிவரை இடை நிறுத்தப் பட்டுள்ளன.

இந்த அகழ்வுப் பணிகள் இதுவரை >> 25

## மாநில அரசுகள் இலங்கையுடன் நேரடித் தொடர்பு பேணக் கூடாது

*இந்திய உள்துறை அமைச்சு அறிவுறுத்து*

கொழும்பு, ஓக.14

எச்சரிக்கையுடன் அணுக வேண்டிய நாடுகள் தொடர்பாக இந்திய மத்திய உள்துறை அமைச்சு வெளியிட்டுள்ள பட்டியலில் இலங்கையும் உள்ளடக்கப்பட்டுள்ளது என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

இந்திய மத்திய உள் >> 25

## இந்திய இறையாண்மையை சீண்டிப் பார்க்கிறது இலங்கை

### மீனவர்கள் கைது தொடர்பில் அன்புமணி எம்.பி. அறிக்கை

யாழ்ப்பாணம், ஓக. 14

இலங்கை அரசால் இந்திய மீனவர்கள் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப் பட்டிருப்பதானது, இந்தியாவின் இறையாண்மையை சீண்டிப் பார்க்கும் செயல் என்று தான் கருத >> 23

# கடன் சுமையால் மக்களின் மீது வரி விதிக்க வேண்டி நேரிட்டது

## தலைமை அமைச்சர் ரணில் தெரிவிப்பு

கொழும்பு, ஒக.14

கடன் சுமையுடன் கூடிய பொருளாதாரத்தை பொறுப்பேற்றதன் காரணமாக மக்கள் மீது அதிகளவான பாரத்தை சுமத்தி வரிகளை அதிகரிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது என்று தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.



குருநாகல் மாவட்டத்துக்கான நீர் வழங்கும் திட்டம் தலைமை அமைச்சரால் மக்கள் பாவனைக்கு திறந்து வைக்கப்பட்டது. அந்த நிகழ்வில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் தெரிவித்ததாவது:

கடன் சுமையுடன் கூடிய பொருளாதாரத்தை பொறுப்பேற்றதன் காரணமாக மக்கள் மீது அதிகளவான பாரத்தைச் சுமத்தி வரிகளை அதிகரிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. அதனால் நாங்கள் மக்களின் விமர்சனங்களுக்கும் உள்ளானோம். தற்போது பொருளாதாரத்தை சுமுகமான நிலைக்குக் கொண்டு வந்துள்ளோம். இனிமேல் மக்களிடம் தூற்றுதலுக்குள்ளாக வேண்டிய அவசியம் இல்லை.

நாட்டுக்கு கிடைக்கும் அந்நிய செலாவணியை நாம் பலப்படுத்த வேண்டும். நாட்டின் கடன் சுமை காரணமாக நாட்டின் பொருளாதாரம் சவால் மிக்கதாகக் காணப்பட்டது. அதனை கட்டியெழுப்புவதற்கே கடுமையான முயற்சிகளை முன்னெடுத்தோம். தற்போது சாதகமான நிலமை ஏற்பட்டுள்ளது.

இந்நிலையில் அந்நிய செலாவணியின் ஊடாக கிடைக்கும் வருமானத்தை அதிகரிப்பதற்கு நாம் திட்டமிட்டுள்ளோம். முன்பை விடவும் அந்நிய செலாவணியை எம்மால் அதிகரிக்க முடிந்தது. ஏற்றுமதி வருமானத்தையும் நாம் அதிகரிக்க வேண்டியுள்ளது. ஏற்றுமதி வருமானம் அதிகரிக்கும் போதுதான் நாட்டை சீரான நிலமைக்கு கொண்டு வர முடியும் - என்றார். (ற)

## கொக்குவிலில் இலவச நடமாடும் சேவை இன்று

யாழ்ப்பாணம், ஒக. 14

கால்நடைகளுக்கான இலவச நடமாடும் சேவை இன்று செவ்வாய்க்கிழமை கொக்குவிலில் இடம்பெறவுள்ளது. காலை 9 மணி தொடக்கம் பி.ப. 2 மணிவரை கொக்குவில் வராகி அம்மன் சனசமூக நிலையத்தில் இடம்பெறவுள்ளது. நல்லூர் கால்நடை மருத்துவ அதிகாரி கால்நடைகளுக்கான நோய்ச் சிகிச்சைகள், நாய்களுக்கான விசர்நாய்த் தடுப்பூசி, கோழிகளுக்கான நோய்த் தடுப்பூசி, அக,புற ஒட்டுண்ணிகளுக்கான சிகிச்சை என்பன இடம்பெறவுள்ளன. ஆலோசனையும் வழங்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டது. (4,147)

## மன்னாரில் மாவீரர் துயிலும் இல்லத்தைத் தேடிய பெரும்பான்மையினர்

மன்னார், ஒக. 14

மன்னாரில் உள்ள பண்டிவிரிச்சான் மாவீரர் துயிலும் இல்லைத்தை பெரும்பான்மையின மக்கள் சிலர் தேடிச் சென்றுள்ளனர் என்ற சம்பவம் நேற்று இணையத்தளங்களில் பரவியது.

மடுவில் இம்மாதம் இடம்பெறவுள்ள மடு தேவாலயத்தின் ஆவணி உற்சவத்தை முன்னிட்டு ஏராளமான சிங்கள பக்தர்கள் வருகை அங்கு தந்துள்ளனர். அவர்களில் சிலர் மன்னார் பண்டிவிரிச்சானில் இருந்த மாவீரர் துயிலும் இல்லத்தை பார்வையிட ஆர்வமாக இருந்தனர் என்றும் அதனால் அங்கு சென்று பார்தனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது, எனினும் அந்தத் துயிலுமில்லம் அற்போது அழிவடைந்துள்ளது குறிப்பிடத்தக்கது. (21)

## முன்பதிவுப் பயணச்சீட்டு பணத்தை வழங்க முடிவு

கொழும்பு, ஒக.14

முன்கூட்டிய தொடருந்துப் பயணச் சீட்டுகளைப் பெற்றுப் பணிப் புறக்கணிப்புக் காரணமாக பயணம் செய்ய முடியாமல் போனவர்களுடைய பயண சீட்டுக்கான பணத்தை மீள செலுத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது என்று இலங்கை தொடருந்துச் சேவை தெரிவித்துள்ளது.

கடந்த புதன்கிழமை முதல் நேற்று முன்தினம் வரை நடத்தப்பட்ட பணிப்புறக்கணிப்புக் காரணமாக முன்கூட்டிய தொடருந்துப் பயணச் சீட்டுகளைப் பெற்ற அதிகளவான பயணிகளுக்குத் தங்களது பயணங்களை மேற்கொள்ள முடியாமல் போயிருந்தது.

அவர்களுக்குள் அதிகளவான வெளிநாட்டவர்களும் இருப்பதாக தெரியவந்துள்ளது. அவர்கள் தங்களது பயணச்சீட்டுக்களை வழங்கிப் பணத்தைத் திருப்பி பெற்றுக்கொள்ளக் கூடிய ஏற்பாடுகள் செய்யப்படவுள்ளன என்று தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை, பணிப் புறக்கணிப்பு இடம்பெற்ற காலத்தில் தொடருந்துப் பயணச்சீட்டுக்களைப் பயன்படுத்தி இலங்கை போக்குவரத்து சபைக்குச் சொந்தமான பேருந்துகளில் இலவசமாக பயணிக்க வசதிகள் வழங்கப்பட்டதால் ஏற்பட்ட நட்டத்தை அரசிடம் இருந்து பெற்றுக்கொள்வதற்கு இலங்கை போக்குவரத்து சபை தீர்மானித்துள்ளது.

இந்தக் காலப்பகுதியில் இலங்கை போக்குவரத்துச் சபைக்கு சுமார் 9 மில்லியன் ரூபா நட்டம் ஏற்பட்டுள்ளது என்று இலங்கை போக்குவரத்து சபையின் அதிகாரி பீ.எச். ஆர்.டி சந்திரசிறி தெரிவித்துள்ளார்.

இலங்கை போக்குவரத்துச் சபையின் கோரிக்கை கிடைக்கப்பெற்றவுடன் குறித்த நட்டப்பணத்தை வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என நிதி அமைச்சின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார். (ற)

## தேர்தல் நடத்தும் ஆர்வம் அரசிடம் சற்றும் இல்லை

### பெவ்ரல் அமைப்பு கூறுகின்றது

மாகாண சபைத் தேர்தலை நடத்துவதில் அரசுக்கு அரசியல் ரீதியான ஈடுபாடு இல்லை என்று தெரிவித்துள்ளது தேர்தல் கண்காணிப்பு அமைப்பான பெப்ரல் அமைப்பு.

இது தொடர்பில் அந்த அமைப்பு தெரிவித்துள்ளதாவது

தற்போதைய அரசின் எந்தவொரு அரசியல் கட்சியும் தேர்தல் நடத்துவது தொடர்பில் பொதுத் தீர்மானத்தை எடுக்கவில்லை.

சப்ரகமுவ, கிழக்கு மற்றும் வடமத்திய மாகாணங்களின் ஆட்சிக் காலம் கடந்த வருடம் செப்ரெம்பர் மற்றும் ஒக்டோபர் மாதங்களில் முடிவடைந்துவிட்டது. தற்போது அந்த மாகாணங்கள் ஆளுநரின் கட்டுப்பாட்டின் கீழ் இருக்கின்றன. மத்திய மாகாணத்தினதும், வடமேல் மாகாணத்தினதும், வடக்கு மாகாணத்தினதும் உத்தியோக பூர்வ காலம் முடிவடைய உள்ளன. எதிர்வரும் ஜனவரி மாதம் அனைத்து மாகாணங்களிலும் தேர்தல் நடத்தப்படும் என்று அண்மையில் அரசு தெரிவித்திருந்தது. ஆனால் அது தொடர்பில் எந்தக் கலந்துரையாடலும் இதுவரை நடத்தப்பட்டவில்லை. அரசு தேர்தல் நடத்துவதில் அரசியல் ரீதியான ஈடுபாட்டுடன் இல்லை. என்று தெரிவித்துள்ளது. (ற)

## படைத்தரப்பைச் சேர்ந்த 35 பேருக்கு மைத்திரிபாலவால் புதிய வீடுகள்

ரணவிரு ரியல் ஸ்டார் போட்டிகளில் இறுதிச் சுற்றுக்கு தெரிவான படையினர் 35 பேருக்குப் புதிய வீடுகள் கையளிக்கப்பட்டுள்ளன. அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனா இந்த வீடுகளை நேற்றுக் கையளித்தார்.

ஐந்து கட்டங்களில் நடைமுறைப் படுத்தப்பட்ட ரணவிரு ரியல் ஸ்டார் போட்டிகளில் வெற்றிபெற்றவர்களுக்கு பரிசில்கள் வழங்கும் நிகழ்வில் இறுதிச் சுற்றுக்குத் தெரிவான 35 இராணுவத்தினருக்கு புதிய வீடுகளை வழங்குவதாக அரச தலைவர் வழங்கிய உறுதிமொழியை நிறைவேற்றும் வகையில் இந்த வீடுகள் அன்பளிப்புச் செய்யப்படுகின்றன.

போட்டிகளில் முதலாம் இடத்தை பெற்ற இலங்கை இராணுவத்தின் ஆட்டிலெரிப் பிரிவு வீரர் சம்பத் ஸ்ரீ பலன்சூரியவுக்கு அக்கிராமத்தில் நிர்மாணிக்கப்பட்ட 20 மில்லியன் ரூபா பெறுமதியான புதிய இரண்டு மாடி வீட்டுக்கான உரிமை பத்திரத்தை மைத்திரி வழங்கி வைத்தார்.

காணியற்ற இராணுவத்தினருக்கு 9 வீடுகள் இங்கு நிர்மாணிக்கப்பட்டுள்ளதுடன், ஏனைய வீடுகள் அந்த இராணுவச் சிப்பாயகளைப் பிரதிநிதித்துவப்படுத்தும் பல்வேறு பிரதேசங்களில் நிர்மாணிக்கப்பட்டுள்ளன. அந்த வகையில் 21 புதிய வீடுகள் இலங்கை இராணுவத்தினருக்கும் 9 வீடுகள் கடற்படையினருக்கும் 5 வீடுகள் விமானப் படை உறுப்பினர்களுக்கும் கிடைக்கப்பெற்றுள்ளன.

அனைத்து வீடுகளுக்குமான நிதி அனுசரணை டயலொக் ஆசியாட்டா நிறுவனத்தால் வழங்கப்பட்டுள்ளதுடன், உடல் உழைப்பு பங்களிப்பு முப்படையினரினால் வழங்கப்பட்டுள்ளது. போருக்குப் பிந்திய காலப்பகுதியில் இராணுவத்தினரின் திறமைகளை நாட்டுக்கு பெற்றுக்கொடுக்கும் நோக்குடன் ரணவிரு ரியல் ஸ்டார் நிகழ்ச்சித் திட்டம் நடைமுறைப்படுத்தப்படுகின்றது.

அமைச்சர் மகிந்த சமரசிங்ஹ, இராஜாங்க அமைச்சர் ருவன் விஜேவர்தன, பிரதி அமைச்சர் பாலித தெவரப்பெரும உள்ளிட்ட அமைச்சர்களும் பாதுகாப்பு பணிக்குழாம் பிரதானிகள், முப்படைகளின் தளபதிகள், பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கபில வைத்யரத்ன, பாதுகாப்பு இராஜாங்க அமைச்சின் செயலாளர் சுனில் சமரவீர, டயலொக் ஆசியாட்டா நிறுவனத்தின் பிரதம நிறைவேற்றுப் பணிப்பாளர் சுபுன வீரசிங்ஹ ஆகியோர் இந்த நிகழ்வில் கலந்துகொண்டனர் என அரச தலைவரின் ஊடகப் பிரவு தெரிவித்தது. (21)

## வெலிக்கடைச் சிறைக் கூரையில் ஏறி பெண் கைதிகள் போராட்டம்

கொழும்பு, ஒக.14

வெலிக்கடைச் சிறைச்சாலைக் கூரை மேல் ஏறிப் பெண் கைதிகள் நேற்று ஆர்ப்பாட்டம் நடத்தினர். அதன்பின்னர் பேச்சு நடத்தி சிறைச்சாலை அதிகாரிகள் அவர்களைப் பாதுகாப்பாகக் கீழிறக்கி நிலமையைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்துள்ளனர்.

வெலிகடைச்சிறைச்சாலையின் பெண்கள் பிரிவு சிரேஸ்ட சிறைக் காப்பாளரை இடமாற்றம் செய்தமை தொடர்பில் அதிருப்தியை வெளிப்படுத்திய பெண் சிறைக் கைதிகள், அவரை மீண்டும் பணியில் அமர்த்த வேண்டும் என்று கோரியும், வெளியிருந்து சிறைக்கைதிகளுக்கு கொண்டு வரப்பட்ட உணவுகள் மட்டுப்படுத்தப்படும் என்று கூறப்பட்டுள்ள நிலையில் அதற்கு எதிர்ப்புத் தெரிவித்தும் போராட்டத்தை முன்னெடுத்திருந்தனர்.

அவர்கள் தமது வழக்குகள் இதுவரையில் நீதிமன்றில் விசாரணைகளுக்கு எடுத்துக்கொள்ளப்படவில்லை, மற்றும் தமக்கு பிணையில் செல்ல அனுமதிக்கவில்லை எனவும் கோசம் எழுப்பியவாறு இந்தப் போராட்டத்தை முன்னெடுத்தனர்.

இதனால் வெலிகடை சிறைச்சாலை சூழல் சற்று பதற்ற நிலையில் காணப்பட்டது. எனினும் இப் பிரச்சினை தீவிர நிலையை அடையமுன் சிறைச்சாலை அதிகாரிகளால் நிலமை கட்டுப்பாட்டுக்கு கொண்டுவரப்பட்டு கைதிகள் அனைவரும் கூரையிலிருந்து பாதுகாப்பாகக் கீழிறக்கப்பட்டனர்.

இந்தப் போராட்டத்தில் ஈடுபட்ட பெண் சிறைக்கைதிகளில் அதிகளவானோர் போதைப்பொருள் வியாபாரத்தில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் சிறைபிடிக்கப்பட்டவர்கள் என்று வெலிகட பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அதேவேளை, ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்த பெண் சிறைக் கைதிகளுக்கிடையில் ஏற்பட்ட மோதல் காரணமாக 4 பேர் காயமடைந்துள்ளனர் என்று சிறைச்சாலைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது. காயமடைந்த நான்கு பெண் சிறைக் கைதிகளும் சிகிச்சைக்காக கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ற)

# "நிலமெகவர" நடமாடும்சேவை யாழ்ப்பாணத்தில் ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஓக. 14

அரசதலைவர்பணியகத்தினால்முன்னெடுக்கப்படும்"நிலமெகவர"நடமாடும் சேவை எதிர்வரும் 24ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் ஆரம்பமாகவுள்ளது. சண்டிலிப்பாய் பிரதேசசெயலக பிரிவு மக்களுக்கு சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரியில்24ஆம்திகதியும். மறுநாள்25ஆம்திகதி, உடுவில்பிரதேசசெயலகமக்களுக்கு உடுவில் பிரதேச செயலகத்திலும், 26ஆம் திகதி கரவெட்டி பிரதேச மக்களுக்கு கரணவாய் பொன்னம்பலம் வித்தியாலயத்திலும், 27ஆம் திகதி மருதங்கேணி மக்களுக்கு மருதங்கேணி பிரதேச செயலகத்திலும் நடமாடும் சேவை நடைபெறும்.

செப்ரெம்பர் மாதம் 14 ஆம் திகதி கோப்பாய் பிரதேச மக்களுக்கு கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியிலும், செப்ரெம்பர்15ஆம்திகதிதெல்லிப்பழைபிரதேச மக்களுக்கு தெல்லிப்பழை யூனியன் கல்லூரியிலும்.

யாழ்ப்பாண பிரதேச மக்களுக்கு செப்ரெம்பர் 16ஆம் திகதி யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியிலும், வேலணைப் பிரதேசமக்களுக்குசெப்ரெம்பர்17ஆம் திகதி வேலணை பிரதேச செயலகத்திலும் நடமாடும் சேவை நடைபெறும்.

செப்ரெம்பர் மாதம் 28ஆம் திகதி சாவகச்சேரி பிரதேச மக்களுக்கு சாவகச்சேரிடிறிபேக்கல்லூரியிலும், செப்ரெம்பர் 29ஆம் திகதி சங்கானை பிரதேச மக்களுக்கு வட்டு இந்துக் கல்லூரியிலும், செப்ரெம்பர் 30ஆம் திகதி ஊர்காவற்துறைப் பிரதேச மக்களுக்கு சென் அன்ரனிஸ்கல்லூரியிலும், ஒக்ரோபர் முதலாம் திகதி காரைநகர் பிரதேச மக்களுக்குகாரைநகர்இந்துக்கல்லூரியிலும், நடமாடும் சேவை நடைபெறும். ஒக்ரோபர் 12 ஆம் திகதி நெடுந்தீவுப் பிரதேச மக்களுக்கு நெடுந்தீவு மகாவித்தியாலயத்திலும், ஒக்ரோபர் 13 ஆம்திகதிநல்லூர்பிரதேசமக்களுக்கு யாழ்ப்பாணம்இந்துக்கல்லூரியிலும், ஒக்ரோபர்14 ஆம்திகதிபருத்தித்துறை பிரதேச மக்களுக்கு வடமராட்சி இந்து மகளிர் கல்லூரியிலும் நடமாடும் சேவை நடைபெறும்.

நடமாடும் சேவையில் கொழும்பிலிருந்து திணைக்கள அதிகாரிகள் வரவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (5)

# கேரளக் கஞ்சா கடத்தல் 3 பேருக்கு விளக்கமறியல்

யாழ்ப்பாணம், ஓக 14

யாழ்ப்பாணத்திலிருந்து திருகோணமலைக்கு மூன்றரைக் கிலோ கேரளக் கஞ்சாவை கொண்டு சென்ற ஒரு குடும்பத்தைச் சேர்ந்த மூவரை, இந்த மாதம் 23 ஆம்திகதிவரை விளக்கமறியலில்வைக்குமாறுதிருகோணமலை நீதிமன்ற நீதிவான் சமிலா குமாரி ரத்நாயக்க கடந்த 11 ஆம் திகதி உத்தரவிட்டார்.

மருதங்கேணி, யாழ்ப்பாணம்ஆகியபகுதிகளைச் சேர்ந்த கணவன் மனைவி, மனைவியின் சகோதரி உட்பட 27,28, மற்றும் 31 வயதுடைய மூவரே விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

குறித்த சந்தேக நபர்கள் திருகோணமலை சந்தியில் மூன்றரை கிலோ கேரளக் கஞ்சாவை வைத்துக்கொண்டு நின்றபோது பொலிஸாருக்கு கிடைத்ததகவலின் அடிப்படையில் சந்தேக நபர்களை கைது செய்து திருகோணமலை நீதிமன்ற நீதிவான் முன்னிலையில் முற்ப்படுத்திய போதே விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார். (40)

# மதுபோதையில் சாரத்தியம் உந்துருளி சாரதி கைது

கிளிநொச்சி, ஓக. 14

மதுபோதையில் வாகனம் செலுத்திய நபரையும் வாகனத்தையும் கைப்பற்றியுள்ளதாக தருமபுரம் பொலிஸ் நிலைய தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஏ35 வீதியில் மதுபோதையில் உந்துருளியைச் செலுத்தி சென்ற நபரை பொலிசார் கைது செய்து தருமபுரம் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்தாகவும், மேலதிக விசாரணைகளின் பின்னர், சாரதிக்கு பொலிஸ் பிணை வழங்கப்பட்டுள்ளதுடன், உந்துருளி பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளதுடன்வரும்வெள்ளிக்கிழமைநீதிமன்றில் முற்ப்படுத்துவதற்கான நடவடிக்கையும் எடுக்கப்பட்டுள்ளதாகதருமபுரம்பொலிஸ்நிலைய தகவல்கள் தெரிவிக்கின்றன. (5)

# அதிகரித்துச் செல்லும் வீதி விபத்துக்களை தடுக்க மாவட்டச் செயலரின் சிறப்புக் கலந்துரையாடல்

வவுனியா, ஓக 14

வவுனியா மாவட்டத்தில் தற்போது அதிகரித்துச் செல்லும் வீதி விபத்துக்களை தடுக்கும்நோக்கில்மாவட்டச்செயலரின்ஏற்பாட்டில் நேற்று முன் தினம் சிறப்பு ஏற்பாட்டுக் கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றது.

மாவட்டச் செயலகத்தில் இடம்பெற்ற குறித்த கலந்துரையாடலில், மாவட்டத்தை உள்ளடக்கிய வகையில் பொலிஸார், கல்வி அதிகாரிகள், இலங்கை போக்குவரத்துச் சபை அதிகாரிகள், தனியார் பேருந்து சங்கம், முச்சக்கர வண்டிச் சாரதிகள் ஆகியோருடன்ஓட்டுநர்பயிற்சிக் கல்லூரி உரிமையாளர்கள், மோட்டார் போக்குவரத்துதிணைக்கள அதிகாரிகளும் கலந்துகொண்டனர்.

குறித்தகலந்துரையாடலில்ஓட்டுநர்பயிற்சிக்கல்லூரிஉரிமையாளர்கள்புதியசாரதி அனுமதிப் பத்திரத்தை பெற வருபவர்களுக்கு தெளிவான விளக்கங்களின் பின்பே பயிற்சிக்கு அனுமதிக்க வேண்டும். அதேபோன்றுபாடசாலை மாணவர்களுக்கு பாடசாலை ரீதியாக பொலிஸார் தெளிவூட்ட வேண்டும். அதேபோன்று பொலிஸாரும் சட்டத்தை இறுக்கமாக பேண வேண்டும். அந்த இறுக்கமான நடைமுறைகள் தொடர்பில் உடனடியாக முச்சக்கர வண்டிச் சாரதிகள், தனியார் போக்குவரத்து சபை மற்றும் இலங்கை போக்குவரத்துச் சபை சாரதிகளிற்கும் தெளிவூட்ட வேண்டும்.

இதேநேரம்வவுனியா மாவட்டத்தில் 2017 ஆம் ஆண்டில் 57 பெரும் விபத்துக்கள் இடம்பெற்றுள்ளன. இதில் நான்கு பேர் உயிரிழந்து 51பேர் படுகாயமடைந்து உள்ளதாகவும்தெரிவிக்கப்பட்டது. (105)

# செவிப்புலனற்றோருக்கான விளையாட்டுப்போட்டி

வவுனியா, ஓக 14

செவிப்புலனற்றோருக்கான விளையாட்டுப்போட்டிநேற்று முன்தினம் அகில இலங்கை செவிப்புலன்அற்றோர்இளைஞர்சங்கம், சர்வதேசசெவிப்புலனற்ற இளைஞர் தினத்தை முன்னிட்டு சனி ஞாயிறு தினங்களில், அகிலஇலங்கை ரீதியில் வவுனியா தேசிய கல்வியியல்கல்லூரியில்நடாத்தினர்.

சங்கத்தின் தலைவர் கஜநாதன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வின் பரிசளிப்பு வைபவம் ஞாயிறு மாலை4மணிக்கு நடைபெற்றது.

முதன்மைவிருந்தினராகமீள் குடியேற்றும் புனர்வாழ்வு பிரதி அமைச்சர் காதர் மஸ்தான் கலந்து கொண்டார். விருந்தினர்களாக மாவட்ட சமூக சேவை உத்தியோகத்தர் செ. ஸ்ரீநிவாசன் தேசிய கல்வியியல் கல்லூரியின் உபபீடாதிபதி பரமானந்தம், வவுனியா முன்னாள் பீடாதிபதி சகாப்டீன், தமிழ் பிரதேச சபையின் செயலர் திருமதி கி. சுகந்தி, மாவட்ட விளையாட்டுஉத்தியோகத்தர்பர்சூர், உதைபந்தாட்ட பயிற்றுவிப்பாளர்தே. அமலன், இளைஞர் சேவைகள் மன்ற மாவட்ட இணைப்பாளர், ஸ்ரீதரன், விளையாட்டு உத்தியோகத்தர்கள் விந்துஜன், வசிதரன் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.

இந்த நிகழ்வில் உரையாற்றிய அமைச்சர் காதர்மஸ்தான்:

வரலாற்றில் சாதனைகளின் உச்சங்களை தொட்ட திறமைசாலிகளில் மாற்றுத்திறன் கொண்டவர்கள்பலரும்இருக்கின்றனர். அவர்களதுதிறமைகளையாரும்இலகுவாகமதிப்பிட்டு விட முடியாது. வரலாற்றின் பல்வேறு காலப்பகுதிகளில் மாற்றுத் திறனாளிகள் நிகழ்த்திய இமாலய சாதனைகள் சரித்திரங்கள் சான்று பகர்கின்றன என்றார்

கொழும்பு, கண்டி, மட்டக்களப்பு, திருகோணமலை வவுனியா யாழ்ப்பாணம் ஆகிய இடங்களில்இருந்து100க்கும் அதிகமான செவிப்புலன் குறைந்த மாற்றுத்திறனாளிகள் போட்டிகளில் கலந்து கொண்டார்கள். சிறப்பாக மென்பந்து, உதைபந்து, கபடி போன்ற போட்டிகளும் நடைபெற்றன.

நேற்று முன்தினம் மாலை பரிசளிப்பு நிகழ்வுடன் போட்டிகள் முடிவடைந்தன, கபடி, உதைபந்தாட்டம் ஆகியவற்றில் யாழ் மாவட்ட அணியும், மென்பந்து போட்டியில் கிக்கடுவ அணியும் சம்பியன் கிண்ணத்தை வென்றன. (222)

# உதயதாரகைவிளையாட்டுமைதானத்தை பொதுவிளையாட்டுமைதானமாகமாற்றவும்

கிளிநொச்சி, ஓக 14

கிளிநொச்சி நகரில் அமைந்துள்ள மருதநகர் உதயதாரகை விளையாட்டுமைதானத்தைபொதுவிளையாட்டுமைதானமாகமாற்றவேண்டும்என கரைச்சி பிரதேசசபையின் உறுப்பினர் அருணாசலம் சத்தியானந்தன் கோரியுள்ளார்.

நேற்று கரைச்சி பிரதேச சபையின் ஆறாவது அமர்வு தவிசாளர் அ. வேழமாலிகிதன் தலைமையில் இடம்பெற்றது.

இதன் போது விளையாட்டு மைதானங்கள் தொடர்பில் பிரதேச சபை உறுப்பினர் ப. குமாரசிங்கம் கொண்டு வந்த பிரேரணை ஒன்றின் போது கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இதனை தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சியில்பொதுவிளையாட்டு மைதானம் எதுவும் இல்லை. எனவேஉதயதாரகைவிளையாட்டு மைதானத்தைபொதுவிளையாட்டு மைதனமாக மாற்றுவதன் மூலம், இளைஞர்களுக்கான உடல் வலுவூட்டல்நிகழ்வுகளுக்குபயன்படுத்தலாம், அத்துடன் சபைக்கு வருமானத்தையும் ஈட்டிக்கொள்ள முடியும் எனவே இந்தச் சபையானது அதனை மேற்கொள்ள வேண்டும் எனகேட்டுக்கொள்கிறேன்என்றார்.

இது தொடர்பில் உதயதாரகை விளையாட்டுக்கழகத்துடன்பேசிய போது அவர்களும் சாதகமாக பரிசீலிப்பதாக தெரிவித்துள்ளனர் எனவும் அவர் குறிப்பிட்டார். (214)



## கைதடி குமரநகருக்கு வீதி விளக்குகள்

கொடிகாமம், ஓக. 14

ஜே/290 கிராம அலுவலர் பிரிவிலுள்ள கைதடி குமரநகர் சனசமூக நிலைய கிராமத்துக்கு 85 ஆயிரம் ரூபா நிதி ஒதுக்கீட்டில் வீதி விளக்குகள் பொருத்தப்பட்டுள்ளன.

வடக்கு மாகாண சபை உறுப்பினர்களான கஜதீபன், தர்மலிங்கம் ஆகியோர் இணைந்து இதற்கு நிதி வழங்கியுள்ளனர். கடந்த புதன்கிழமை இவை பொருத்தப்பட்டன என்று சாவகச்சேரிப் பிரதேச சபை உபதவிசாளர் செ.மயூரன் தெரிவித்துள்ளார். (4.159)


## கைதடியில் கருத்தமர்வு

கொடிகாமம், ஓக. 14

தென்மராட்சி வலய சித்த மருத்துவ அதிகாரிகளின் அனுசரணையுடன் கைதடி சரஸ்வதி சனசமூக நிலையம் நடத்தும் 'ஆரோக்கிய வாழ்வில் யோகாசனம்' தொடர்பான கருத்தமர்வு நாளை புதன்கிழமை பிற்பகல் 3 மணிக்கு வைர விழா மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

கிராமிய சித்த மருத்துவ பணிமனை கொடிகாமம் சமூக மருத்துவ உத்தியோகத்தர் பி.தனுராஜ், கிராமிய சித்த மருத்துவ பணிமனை கொடிகாமம் சமூக மருத்துவ உத்தியோகத்தர் திருமதி த.ஜென்ன ஆகியோர் வளவாளர்களாகக் கலந்து கொள்ளவுள்ளனர்.

அனைவரையும் கருத்தமர்வில் பங்குகொண்டு பயனடையுமாறு கைதடி மேற்குச் சனசமூக நிலைய நிர்வாகத்தினர் கேட்டுள்ளனர். (4.159)

ஆவரங்கால் பர்வதவர்த்தனி அம்மை சமேத நடராஜ இராமலிங்க சுவாமி கோவில் வருடாந்தத் தேர்த்திருவிழா நேற்றுமுன்தினம் இடம் பெற்றது. அதில் அம்பாள் அடியார்களுடன் தேரில் வலம்வந்தார். (127)

# 100 பேர் கொண்ட விழிப்புக்குழு மீசாலைக்கு அமைக்கப்பட்டது

**மீசாலை மேற்கு வடக்குப் பிரிவுகளில் இரவு வேளையில் விழிப்புக் குழு உறுப்பினர்களாகப் பணியாற்றக் குறித்த பிரிவுகளைச் சேர்ந்த 100 இளைஞர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது.**

மீசாலை மேற்கு மற்றும் வடக்குப் பிரிவுகளுக்கு விழிப்புக் குழுக்கள் அமைப்பது தொடர்பான கலந்துரையாடல் மீசாலை விக்னேஸ்வரா மகா வித்தியாலய மண்டபத்தில் நேற்றுமுன்தினம் மாலை சாவகச்சேரி நகரசபையின் உதவித் தவிசாளர் அ.பாலமயூரன் தலைமையில் நடைபெற்றது. கூட்டத்தில் 300க்கும் மேற்பட்ட மக்கள் கலந்து கொண்டனர். இந்தப் பிரிவுகளில் குற்றச் செயல்கள் நடைபெறாது தடுக்க இரவு வேளைகளில் பாதுகாப்பை மேற்கொள்ள விழிப்புக் குழுவின் அவசியம் தொடர்பாக நகரசபையின் உப தவிசாளர் அ.பாலமயூரன் உரையாற்றினார்.

அனைத்து மக்களின் பங்களிப்பும் இதற்குத் தேவை. மீசாலை மேற்கு மற்றும் மீசாலை வடக்குப் பிரிவுகள் கனகன்புளியடிச் சந்தி தொடக்கம் மீசாலை புத்தூர் சந்தி வரையான பெரிய பிரதேசம். இந்தப் பிரிவுகளில் 2 ஆயிரத்துக்கும் மேற்பட்ட குடும்பங்கள் வசித்து வருகின்றன. இந்தப் பிரிவுகளில் குற்றச் செயல்கள் இடம்பெறுவதைத் தடுக்கவே விழிப்புக் குழுக்களின் செயற்பாடுகள் அவசியம் என்று உரையாற்றினார்.

கூட்டத்தில் கலந்துகொண்ட 100 இளைஞர்கள் தாமாக முன்வந்து தமது பெயர்களைப் பதிவு செய்தனர். தினமும் 20 பேர் கொண்ட குழுவினர் சுழற்சி முறையில் பணியாற்றுவர் எனவும் அறிவிக்கப்பட்டது.

விழிப்புக் குழுவில் உறுப்பினர்களாக இணைய முடியாத குடும்பங்கள் இரவு வேளையில் பணியாற்றும் உறுப்பினர்களுக்கு இரவு உணவு மற்றும் தேநீர் வசதிகள் செய்து கொடுப்பர் என்று தெரிவிக்கப்பட்டது. இது தொடர்பாகச் சாவகச்சேரி நகரசபை மற்றும் சாவகச்சேரிப் பொலிஸார் ஆகியோருடன் கலந்துரையாடி அடையாள அட்டை பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படுமெனவும் உப தவிசாளர் தெரிவித்தார். பல இடங்களிலும் வாள்வெட்டு, திருட்டு, கொள்ளைகள் இடம்பெற்று வருகின்றன. தென்மராட்சியிலும் இது தொடர்கிறது. இவை தொடர்பில் பொலிஸார் நடவடிக்கை எடுக்கப்படுகின்ற போதும் அது எதிர் பார்த்தளவு வெற்றியளிக்காத நிலையில் விழிப்புக் குழுக்கள் அமைக்க வேண்டியதேவை உள்ளது என்று சுட்டிக் காட்டப்படுகின்றமை குறிப்பிடத் தக்கது. சில வருடங்களுக்கு முன்னர் இத்தகைய குழுக்கள் அதிகமான இடங்களில் சிறப்பாக இயங்கின என்பது குறிப்பிடத்தக்கது. (4.9)

## வரணி ச.நிலையத்துக்கு கணினி, தளபாடங்கள்



யாழ்ப்பாணம், ஓக. 14

வரணி சண்முகானந்தா சனசமூக நிலைய மேம்பாட்டுக்கெனத் தளபாடங்களும், கணினிகளும், நூல்களும் அன்பளிப்பாக வழங்கப்பட்டுள்ளன. வரணி அபிவிருத்தி ஒன்றியத்தின் ஏற்பாட்டில் இவை வழங்கப்பட்டன என்று தெரிவிக்கப்பட்டது. இவற்றை வழங்கும் நிகழ்வு வரணி சண்முகானந்தா சனசமூக நிலையத்தில் நிலையத் தலைவர் வீ.சிவராஜசிங்கம் தலைமையில் இடம்பெற்றது. கலையினூடாகக் கல்வியை மேம்படுத்தி வரணியில் கல்விப்புரட்சி செய்வோம் என்னும் கருப்பொருளில் இந்த நிகழ்வு இடம்பெற்றது. உதவிப் பொருள்களும் வழங்கப்பட்டன. வரணியைச் சேர்ந்த சி.சுரேந்திரன் நிலையத்துக்கென ஒரு தொகுதி நூல்களையும் அதனைப் பாதுகாக்க அலுமாரியையும் வழங்கினார். சி.சிற்றம்பலம் நீண்டகாலமாகப் பாதுகாத்த ஒரு தொகுதி நூல்களையும் நிலையத் தலைவர் வீ.சிவராஜலிங்கம் அலுமாரியையும், ந.சிறிவிஸ்வநாதன் கணினித் தொகுதியையும் கையளித்தனர்.

நிகழ்வில் வரணி அபிவிருத்தி ஒன்றியத் தலைவர் ந.இராசகுமாரன், சாவகச்சேரிப் பிரதேச சபை உறுப்பினர் க.சதீஸ்வரன், பிரதேச சபையின் சனசமூக அபிவிருத்தி அலுவலர் திருமதி செ.ஜெகதீசன் உட்படப் பலர் கலந்துகொண்டனர் என்று தெரிவிக்கப்பட்டது. (4.9)

## தொடருந்து தடைப்பட்டாலும் தபால் பணி பாதிக்கவில்லை

யாழ்ப்பாணம், ஓக.14

தொடருந்து ஊழியர்களின் பணிப்புறக்கணிப்பால் தொடருந்து சேவைகள் பாதிக்கப்பட்டன. ஆனால் தபால்கள் யாவும் மாற்று வழிகளில் வழமை போன்று இடம்பெற்றன என்று தெரிவிக்கப்பட்டது என்று யாழ்ப்பாணத் தலைமைத் தபாலகம் தெரிவித்தது. யாழ்ப்பாணத்தில் சேர்க்கப்படும் தபால்கள் தபால் வாகனம் மூலமாக அநுராதபுரத்துக்கு அனுப்பப்பட்டு அங்கிருந்து கொழும்புக்கும், கொழும்பிலிருந்து அனுப்பப்பட்ட தபால்கள் அநுராதபுரத்துக்கு எடுக்கப்பட்டு அங்கிருந்து வடக்குக்கும் கொண்டுவரப்பட்டன என்று தெரிவிக்கப்பட்டது.

தொடருந்து சேவை இடம்பெறாவிட்டாலும் தபால் சேவைகளில் எந்தவிதப் பாதிப்பும் இல்லை என்றும் தபால் திணைக்களத்தினர் தெரிவித்தனர். (4.17)

# மாணவர்களுக்கு காந்தி ஜெயந்தி தினப் பேச்சுப் போட்டிகள்

யாழ்ப்பாணம், ஓக. 14

அகில இலங்கை காந்தி சேவா சங்கம் 149ஆவது காந்தி ஜெயந்தி தினத்தை முன்னிட்டு மாணவர்களுக்கான பேச்சுப்போட்டி நடத்தவுள்ளது. அகில இலங்கை காந்தி சேவா சங்கம் மகாத்மா காந்தியடிகளின் 149ஆவது ஜெயந்தி தினத்தை 2018 ஒக்ரோபர் 2ஆம் திகதி. அதனை முன்னிட்டு பாடசாலை மாணவர்களுக்கான பேச்சுப்போட்டியொன்றை வடக்கு மாகாண ரீதியில் நடத்தவுள்ளது. இரு பிரிவுகளாக நடத்தப்படவுள்ள இந்தப் போட்டியில் தரம் 10மற்றும் 11இல் கல்வி கற்கின்ற மாணவர்கள் இடைநிலைப் பிரிவிலும், தரம் 12மற்றும் தரம் 13இல் கல்வி கற்கின்ற மாணவர்கள் மூத்த பிரிவிலும் பங்குகொள்ள முடியும்.

**இடைநிலைப் பிரிவுக்கான தலைப்பு**

1.மகாத்மா காந்தி இன்று இருந்திருந்தால் (5 நிமிடம்)

2.இந்திய சுதந்திரப் போராட்டமும் மகாத்மா காந்தியும் (5 நிமிடம்)

**மூத்தபிரிவுக்கான தலைப்பு**

1.காந்தியக் கொள்கைகளில் இன்றைய இளைய தலைமுறையினர் (7 நிமிடம்)

2.மகாத்மா காந்தியின் உப்புச் சத்தியாக்கிரகமும் சுயராஜ்ஜியக் கொள்கையும் (7 நிமிடம்)

மேற்படி பிரிவுகளில் பங்குகொள்ளும் மாணவர்கள் தமது பிரிவுக்கு வழங்கப்பட்ட இரு தலைப்புகளில் ஏதாவது ஒரு தலைப்பில் பேசமுடியும். இந்தப் போட்டியில் பங்குபற்ற விரும்பும் மாணவர்கள் தமது முழுப்பெயர் தமிழ் மற்றும் ஆங்கிலத்தில், சொந்த முகவரி, மாவட்டம், கல்வி கற்கும் பாடசாலை, கற்கும் தரம், போட்டிப்பிரிவு, பேச விரும்பும் தலைப்பு, தொலைபேசி இலக்கம் ஆகிய விவரங்கள் அடங்கியதாக சுயமாகத் தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவத்தைப் பாடசாலை அதிபரின் உறுதிப்படுத்தலுடன் இணைப்பாளர், காந்தி ஜெயந்தி தின பேச்சுப் போட்டி - 2018, அகில இலங்கை காந்தி சேவா சங்கம், காந்தி நிலையம், D8, உருத்திரபுரம், கிளிநொச்சி என்ற முகவரிக்கு எதிர்வரும் 20ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைக்க வேண்டும்.

ஒவ்வொரு பிரிவிலும் முதலாம் இடத்தைப் பெறும் மாணவருக்கு தங்கப் பதக்கமும், இரண்டாம் மூன்றாம் இடத்தைப் பெறுவோருக்கு பெறுமதியான பரிசில்களும் காந்தி ஜெயந்தி தின விழாவில் வைத்து வழங்கப்படும்.


போட்டியில் பங்குபற்ற விண்ணப்பிப்போருக்குப் போட்டி நடைபெறும் காலம், இடம் மற்றும் போட்டி விதிமுறைகள் என்பன கடிதம் மூலமாக அறிவிக்கப்படும். போட்டி நடுவர்களின் தீர்ப்பே இறுதியானது.

வெற்றி பெற்றோரின் பெயர் விவரங்கள் பத்திரிகையில் அறிவிக்கப்படும் என்று சங்கப் பொதுச் செயலர் எம். ஷாந்தன் சத்திய கீர்த்தி, போட்டி இணைப்பாளர் ந.கணேசமூர்த்தி ஆகியோர் அனுப்பிய செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டது. (4)

## யாழ்.பல்கலையில் காண்பியக் காட்சி

யாழ்ப்பாணம், ஓக.14

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் இளம் ஓவியர்களான கீதா கந்தவேள், சுந்தரம் அனோஜன், மனோகரன் பிரசாத், சிவஞ்யானம் கிருஸன் ஆகிய 'நான்கு ஓவியர்களின் காண்பியக்காட்சி' நாளை புதன்கிழமை தொடக்கம் எதிர்வரும் புதன்கிழமை வரை இடம்பெறவுள்ளது. பல்கலையின் புதிய கலைப்பீட கட்டடத் தொகுதியிலுள்ள கலைக் கூடத்தில் நுண்கலைத் துறை மற்றும் கலை வட்டத்தின் ஏற்பாட்டில் இது இடம்பெறுகிறது. காண்பிய ஓவியத்துறையில் ஆர்வமுடையவர்கள் கலந்து கொள்ளுமாறு நுண்கலைத் துறைத் தலைவர் தா.சனாதன் கேட்டுள்ளார். (113)



யாழ்ப்பாணம் அளவெட்டி தெற்கு பெரியபுலம் சிறிமுத்துமாரியம்மன் ஆலய தேர்த் திருவிழா அண்மையில் இடம்பெற்றது. (36)

# திருமணமான சில மாதங்களிலேயே குழந்தை பிறக்குமென்று எண்ணாதீர்

## நல்லூர் சபையில் உறுப்பினர் காட்டம்

யாழ்ப்பாணம், ஒக. 14

சபை தெரிவு செய்யப்பட்டு மூன்று நான்கு மாதங்கள்தான் ஆகின்றன. அதற்கிடையில் எல்லாவற்றையும் செய்ய வேண்டும் என்றால் எப்படிச் செய்வது? உறுப்பினர் முன்வைக்கும் குற்றச்சாட்டு திருமணமாகியவுடன் குழந்தை பிறக்க வேண்டும் என்று எதிர்பார்ப்பதுபோலவே இருக்கின்றது.

இவ்வாறு நல்லூர் பிரதேச சபையின் அமர்வில் நேற்று கருத்து முன்வைக்கப்பட்டது.

நல்லூர்ப் பிரதேச சபையின் அமர்வு சபை மண்டபத்தில் தவிசாளர் தா.தியாகமூர்த்தி தலைமையில் நேற்று இடம்பெற்றது. அதில் பல விடயங்கள் பற்றியும் கதைக்கப்பட்டது.

நல்லூர்ப் பிரதேச சபை உறுப்பினர் ஒவ்வொருவருக்கும் 10 இலட்சம் ரூபா அபிவிருத்திக்கு ஒதுக்கித் தரவேண்டும் என்று முன்வைக்கப்பட்ட கோரிக்கை தவிசாளரால் நிராகரிக்கப்பட்டது. அதற்கான சட்ட ஏற்பாடுகள் இல்லை என்றும் சுட்டிக்காட்டினார்.

நேற்றைய அமர்வில், உறுப்பினர் திருமதி சு.வாசுகி குறித்த விடயத்தை பிரேரணையாக முன்மொழிந்தார்.

சபை உறுப்பினர்களான எமக்கு ஒரு மில்லியன் ரூபா நிதி எமது வட்டாரத்தின் அபிவிருத்திக்கு என்று ஒதுக்கித் தரவேண்டும். வட்டாரத்தில் வாழ்வாதார உதவிகளை வழங்க இந்த நிதியை எமக்கு தனித்து ஒதுக்கித் தரவேண்டும் என்று கோரினார்.

இதனை நிராகரித்த தவிசாளர், சபையின் வட்டாரத்துக்கு நிதி ஒதுக்கீடு செய்ய முடியுமே தவிர சபையின் உறுப்பினர்களுக்கு என்று நிதி ஒதுக்கீடு செய்ய முடியாது. இது தொடர்பான விளக்கத்தைச் சபைச் செயலர் கூறுவார் என்று தெரிவித்தார்.

சபைச் செயலாளர் விளக்கமளிக்கையில்,

சபையின் சட்ட ஏற்பாட்டின்படி வருடாந்த வரவு செலவுத்திட்டத்தில் அபிவிருத்திக்கு நிதி ஒதுக்கீடு செய்யப்படும். தனி உறுப்பினர்களுக்கு என்று நிதி ஒதுக்கீடு செய்ய முடியாது. உங்கள் வட்டாரத்துக்கு ஒதுக்கும் நிதியை வைத்து நீங்கள் வேலைத்திட்டங்களைச் சமர்ப்பிக்கும்போது அவற்றை நிறைவேற்றிக் கொள்ள முடியும் என்றார்.

இதன் பின்னர் கருத்துத் தெரிவித்த உறுப்பினர் கிரிதரன், நாம் சபைக்குத் தெரிவானதிலிருந்து இன்றுவரை ஆக்கபூர்வமாக எதனையும் செய்யவில்லை. வெறுமனே மின்குமிழ்கள் பொருத்தியதும், பழுதான மின்குமிழ்களை மாற்றியதையும்தான் செய்துள்ளோம் என்று கூறினார்.

இதன்போது எழுந்த உறுப்பினர் இராசலிங்கம், சக உறுப்பினரின் கருத்து திருமணமாகியவுடன் குழந்தை பிறக்க வேண்டும் என்று எதிர்பார்ப்பதுபோலவே இருக்கின்றது என்று காட்டமாகத் தெரிவித்தார்.

மூன்று நான்கு மாதங்களில் எல்லாம் செய்யமுடியாது. இந்தச் சபையின் காலம் முடியும்போது நாங்கள் என்ன செய்துள்ளோம் என்பதைப் பார்த்துவிட்டுக் கதையுங்கள் என்று காட்டமாகத் தெரிவித்தார். அந்த விவகாரம் நீண்டு செல்லாதவாறு தவிசாளர் நிறைவுக்குக் கொண்டுவந்தார். (4,8)

## நாகசதுர்த்தி

யாழ்ப்பாணம், ஒக.14

நீர்வேலி கந்தசுவாமி கோவிலில் இன்று செவ்வாய்க்கிழமை நாக சதுர்த்தி உற்சவம் இடம்பெறும்.

காலையில் அபிசேகம் இடம்பெறும். கடைசி ஆடிச் செவ்வாய் உற்சவமும் நடைபெறும். மாலை 4மணிக்கு நாக சதுர்த்தி விழா இடம்பெறும் என்று தெரிவிக்கப்பட்டது. (4,17)

## பொதுக் கூட்டம்

யாழ்ப்பாணம், ஒக. 14

நுணாவில்மேற்கு சிறிபத்திரகாளி சமேத வீரபத்திரர் ஆலய பரிபாலன சபை ஆண்டுப் பொதுக் கூட்டம் நாளை புதன்கிழமை மு.ப. 11 மணிக்கு ஆலய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

புதிய பரிபாலனசபைத் தெரிவும் நடைபெறவுள்ளதால் பொதுச்சபை அங்கத்தவர்கள் அனைவரும் தவறாது கலந்துகொண்டு புதிய பரிபாலனசபைத் தெரிவுக்கு ஒத்துழைப்பு நல்குமாறு செயலாளர் க.விஜயவாசன் கேட்டுள்ளார். (4,159)

## நட்ட மரங்களை பராமரித்திருந்தால் பசுமை நகராக தற்போது இருக்கும்

### இனியாவது செய்யவேண்டும் என்று தவிசாளர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஒக. 14

யாழ்ப்பாணத்தில் கடந்த காலங்களில் நட்ட மரங்கள் அனைத்தும் உரிய முறையில் பராமரிக்கப்பட்டிருந்தால் தற்போது பசுமை நகராக இருந்திருக்கும். இனிவரும் காலங்களிலாவது நாம் மரக்கன்றுகளை நடும்போது உரியமுறையில் பராமரிக்கவேண்டும்.

இவ்வாறு நல்லூர் பிரதேச சபைத் தவிசாளர் தா.தியாகமூர்த்தி தெரிவித்தார்.

நல்லூர்ப் பிரதேசசபையின் அமர்வு சபை மண்டபத்தில் தவிசாளர் தலைமையில் நேற்று இடம்பெற்றது. குளங்களுக்கு அண்மையில் மரங்கள் நட்டாலும் பராமரித்தல் தொடர்பாக தீர்மானம் ஒன்றை முன்மொழிந்து கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இதனை தெரிவித்தார்.

நல்லூர்ப் பிரதேச சபைக்கு உட்பட்ட குளங்களுக்கு அண்மையில் மருத மரங்கள் நட உத்தேசித்துள்ளோம். எமது சபையில் எல்லைக்குட்பட்ட பகுதியில் 35 குளங்கள் காணப்படுகின்றன. ஒவ்வொரு குளத்துக்கும் 6 மருத மரங்கள் வீதம் நடத் தீர்மானித்துள்ளோம். மரங்களை நடுவது முக்கியமல்ல. அவற்றைப் பராமரிக்க வேண்டும். எனவே மரத்தை சுற்றிக் கூடு அமைத்துப் பாராமரிப்பதுடன் குளங்களுக்கு அண்மையில் நடுவதால் தண்ணீர்ப் பிரச்சினை ஓரளவு குறைவாக இருக்கும் என்று நினைக்கின்றேன்.

மரங்களை நடுவதற்காக நாம் எமது சபையின் அதிக நிதியை செலவழிக்கும் நிலை உள்ளதால், இது தொடர்பாக யாழ்ப்பாண மாவட்ட செயலருடன் பேசியுள்ளேன். நடுவதற்கான மரங்களை வழங்குவதாக உறுதி அளித்துள்ளார். எனவே பராமரிக்கும் பணியை நாம் மேற்கொள்வோம் - என்றார். (4,8)

## நல்லூர் பிரதேச சபைக்கு கொடி அமைக்கப்படும்

யாழ்ப்பாணம், ஒக. 14

நல்லூர்ப் பிரதேச சபைக்கு என்று பிரத்தியேகமாக மஞ்சள் மற்றும் பச்சை நிறம் அடங்கிய கொடி அமைக்கப்படவுள்ளதாக சபைத் தவிசாளர் தெரிவித்தார்.

நல்லூர்ப் பிரதேச சபையின் நேற்றைய அமர்வில் தவிசாளர் தா.தியாகமூர்த்தி இந்த அறிவித்தலை விடுத்தார்.

நல்லூர்ப் பிரதேச சபைக்கு என்று பிரத்தியேகமான கொடிகள் எவையும் இல்லை. எனவே நாம் கொடி அமைப்பது தொடர்பில் ஆராய்ந்துள்ளோம். அதில் மஞ்சள் மற்றும் பச்சை நிறத்திலான கொடிகளை அமைப்பது என்று தீர்மானித்துள்ளோம். மஞ்சள் நிறம் மகிமையையும், பச்சை நிறம் பசுமையை குறிக்கும் வகையில் தெரிவு செய்துள்ளோம் என்றார்.

இதன்போது கருத்துத் தெரிவித்த சபை உறுப்பினர், கொடியை அமைக்கும்போது இலட்சினையையும் உள்ளடக்க வேண்டும் என்று கோரிக்கை விடுத்தார். இதனை ஏற்ற தவிசாளர் அடுத்த அமர்வில் இலட்சினை தொடர்பில் தீர்மானிக்கப்படும் - என்றார். (4,8)



## அனலைதீவு மாணவர்களுக்கு அறநெறி வகுப்புகள் ஆரம்பம்

அனலைதீவு, ஒக. 14

அனலைதீவு பிரதேச ஆரம்பப் பிரிவு மாணவர்களுக்கான அறநெறி வகுப்புகள் கடந்த 10ஆம் திகதி அனலைதீவு பொதுநோக்கு மண்டபத்தில் ஆரம்பிக்கப்பட்டது.

கனடாவில் உள்ள அனலைதீவு கலாசார ஒன்றியத்தின் உதவியில் அனலைதீவு வடக்கு மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத்தின் ஏற்பாட்டில் அறநெறி வகுப்புகள் ஆரம்பித்து வைக்கப்பட்டன.

சங்கத்தலைவி திருமதி யோ.சிவலிங்கம் தலைமையில் நடைபெற்ற நிகழ்வுக்கு அனலைதீவு கலாசார ஒன்றியத்தின் கனடாக் கிளையின் காப்பாளர் பே.கணபதிப்பிள்ளை முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்டு மங்கல விளக்கேற்றி ஆரம்பித்து வைத்தார் என்று தெரிவிக்கப்பட்டது. (4,9)

## காற்றாலை அமைக்க மூடியுள்ள விதிகளைத் திறக்கக் கோரிக்கை

தென்மராட்சி, ஒக. 14

தென்மராட்சி தெற்கு மறவன்புலவுப் பகுதியில் காற்றாலை அமைப்பதற்காக நிறுவனத்தினரால் மூடப்பட்டுள்ள வீதிகளைத் திறக்க நடவடிக்கை எடுக்குமாறு சாவகச்சேரிப் பிரதேச சபைத் தவிசாளரிடம் கோரப்பட்டுள்ளது. அந்தப் பிரதேச மக்கள் இவ்வாறு கோரியுள்ளனர்.

அதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அவர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

மறவன்புலவுப் பிரதேசம் நெற்செய்கை நிலமும் கடற்பிரதேசமும் இணைந்த அழகான கிராமம். பிரதேசத்தில் சுயதேவைப் பூர்த்தியோடு வாழ்ந்துவரும் கிராம மக்களின் போக்குவரத்துப் பாதைகள் அனைத்தும் மணல் பாதைகளாகவே நீண்டகாலமாக உள்ளன.

இந்தப் பிரதேசத்தில் காற்றாலை உற்பத்தியை மேற்கொள்ளவிருந்த வாயுசக்தி நிறுவனத்தினர் இந்தப் பகுதியில் உள்ள மணற்காடு வீதியின் கிளை வீதிகள் மூன்றை மூடி அடைத்துள்ளனர்.

இந்த நடவடிக்கையானது பிரதேசத்தின் முதன்மைத் தொழிலாகக் கொண்ட நெற்செய்கையாளர்கள், தென்னைச் செய்கையாளர்கள் மற்றும் கடற்றொழிலாளர்கள் ஆகியோரின் தொழில்களைப் பாதிக்கும் செயற்பாடாக அமைந்துள்ளது என்று பிரதேச மக்கள் கூறுகின்றனர்.

பிரதேச மக்களின் எதிர்ப்பால் மறவன்புலவு கிராமத்தை அண்டிய பகுதியில் காற்றாலை அமைக்கும் திட்டம் இடைநிறுத்தப்பட்டுள்ளது.

எனவே மூடப்பட்டுள்ள பாதைகளைத் திறக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று பிரதேச சபையின் மறவன்புலவு வட்டார உறுப்பினர் தி.தங்கவேலு ஊடாகப் பிரதேச சபைத் தவிசாளரைக் கோரியுள்ளோம் எனவும் தெரிவித்தனர்.

இந்த விடயத்தை அந்த உறுப்பினர் கடந்த வாரம் நடைபெற்ற சபையின் அமர்வில் தீர்மானமாக முன்வைத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (4,9)

## கொக்குவில் தபால் நிலையத்துக்கு வசதிகள் செய்து கொடுக்கவேண்டும்

யாழ்ப்பாணம், ஒக. 14

கொக்குவில் சந்தைக் கட்டடத்தில் இயங்கும் தபால் நிலையத்துக்கு அடிப்படை வசதிகள் செய்து கொடுக்கப்பட வேண்டும் என்று சபை உறுப்பினர் இராசலிங்கம் கோரிக்கை விடுத்தார்.

சபையின் நேற்றைய அமர்வில் இந்தக் கோரிக்கை முன்வைக்கப்பட்டது.

கொக்குவில் தபால் நிலையம் இதுவரை 9 இடங்களுக்கு மாற்றப்பட்டுள்ளது. தற்போது எமது சந்தைக் காணியில் உள்ள கட்டடத்தில் இயங்கி வருகின்றது. மலசலகூட வசதிகூட இல்லை. அந்த வசதிகளை உடனடியாக ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும் என்றார்.

இதனை ஏற்றுக்கொண்ட தவிசாளர் உடனடியாக அனைத்து நடவடிக்கையும் எடுக்கப்படும் - என்றார். (4,8)




## கிளிநொச்சி – முறிகண்டிப் பிள்ளையார் கோவில் வளாகத்தில் குப்பைகள்

கிளிநொச்சி ,ஓக 14
உலகப் புகழ்பெற்ற முறிகண்டிப் பிள்ளையார் கோவில் வளாகத்தில் குப்பைகள் குவிந்து காணப்படுகின்றது.
இந்தப்பகுதியில் குப்பைகளை அகற்றஒவ்வொரு கடைக்கும் 350 ரூபாவீதம் பணம் அறவிட்டு வரும் புதுக்குடியிருப்புப் பிரதேச சபை. ஆலயவளாகத்தில் குவிந்து கிடக்கும் குப்பைகளை அகற்ற அக்கறை கொள்ளவில்லை எனக் கூறப்படுகிறது.
இது தொடர்பாகப் புதுக்குடியிருப்புப் பிரதேச சபை தவிசாளரிடம் உதயன் தொடர்புகொண்டு கேட்டபோது: கழிவகற்றலில் தமதுசபை ஒருபோதும் காலம்தாழ்த்துவதோ, அல்லது அகற்றாமல் விடுவதோ இல்லை . ஆனால் நேற்று (நேற்று முன் தினம்) ஞாயிற்றுக்கிழமை என்ற காரணத்தால் கழிவகற்றலில் தாமதம் ஏற்பட்டது. இருப்பினும். உரிய ஒழுங்குப்படி மக்கள் கழிவுகளை வீசாமையே பொலித்தீன் பைகள் உள்பட கழிவுகள், வீதியிலும் . கோவில் வளாகத்திலும் சிதறிக்கிடப்பதற்கு காரணம் - என்றார் .
உரிய முறைப்படி கழிவுகளை உரியகுப்பைக்கூடைகளில் போடுவதால் கழிவுகள் வெளியே சிந்துவதும், கோவில் வளாகத்தில் போடுவதையும் தவிர்க்க முடியும் - என்றார். எமது பிரதேசங்களில் மக்கள் குப்பைகளை உரிய இடங்களில் போடாமை மிகப்பெரும் அசுத்த சூழலுக்கு வழி வகுக்கும் ஒரு முக்கிய காரணியாக உள்ளது.
வெறுமனே பிரதேச சபைகளைக் குற்றம் சொல்லும் மக்கள் தமது சுகாதாரத் தன்மையை தாமே பேணுவதற்கு முன்வரவேண்டும் அப்போதுதான் நாடும் வீடும் சுத்தமாக இருக்கும் என்பது, உண்மையான விடயம். (222)

## கலந்துரையாடல்

கிளிநொச்சி,ஓக 14
2018 ஆம் ஆண்டுக்கான சிறு தொழில் முயற்சியாளர்களுக்கான அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் .
இளம் தொழில் முயற்சியாளர்களுக்கான அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் ஆகியவை.
கிளிநொச்சி மாவட்டச் செயலக சிறு தொழில் முயற்சி அபிவிருத்திப் பிரிவினால் நடத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.
இதற்குத் தகுதியானவர்களைத் தெரிவு செய்வதற்கான நேர்முக தேர்வு எதிர்வரும் 20 ஆம் திகதி காலை 9 மணிக்கு மாவட்ட செயலக சிறு தொழில் முயற்சி அபிவிருத்திப் பிரிவில் நடைபெறவுள்ளது.
இதில் சிறு தொழில் முயற்சியில் ஈடுபடும் ஆர்வம் உள்ளவர்கள் பங்குபற்ற முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.
மேலதிக தகவலுக்குக் கரைச்சிப் பிரதேச சிறு தொழில் முயற்சி அபிவிருத்திப் பிரிவின் உத்தியோகத்தரைத் தொடர்பு கொள்ளுமாறும் கேட்கப்பட்டுள்ளது . (222)



## விபத்தை ஏற்படுத்தி விட்டு சாரதி தப்பி ஓட்டம்

மன்னார் ,ஓக 14
கடந்த 12 ஆம் திகதி மன்னார் கறுக்காக்குளம் வீதியில் மோட்டார் வாகனமும், டாட்டா வாகனமும் ,மோதியதில் மோட்டார், வாகனத்தில் பயணித்த இருவர் படு காயமடைந்து, மன்னார் பொது மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.இவர்களைத்தாக்கிவிட்டுத் தப்பிச்சென்ற டாட்டா வாகனமும் அதன் சாரதியும் மின்கம்பத்தில் மோதுண்டது டன்.வாகனச்சாரதி தப்பிச் சென்றுள்ளார். (244)

# தமிழ் மக்கள் நாட்டைவிட்டு வெளியேற அரசின் இனப்படுகொலையே காரணம்

### தந்தை செல்வாவின் மகன் செ.சந்திரகாசன்



**மன்னார்,ஓக.14**
**தமிழ் மக்கள் நாட்டைவிட்டு வெளியேற 1983 ஆம் ஆண்டு இலங்கை அரசு செய்த இனப்படு கொலையே காரணம் என ஈழ ஏதிலியர் மறுவாழ்வுக் கழக நிறுவுநரும் தந்தை செல்வாவின் மகனுமாகிய செ.சந்திரகாசன் தெரிவித்துள்ளார்.**

கடந்த காலங்களில் நாட்டில் ஏற்படுத்தப்பட்ட கடும் போர் காரணமாக நாட்டைவிட்டு புலம் பெயர்ந்து, வெளிநாடுகளுக்கு. சென்றிருந்தவர்கள் தாயகம் திரும்பியவர்களுக்கான பிறப்பு அத்தாட்சிப் பத்திரம் மற்றும் குடியுரிமைச் சான்றிழ்கள் வழங்கும் நடமாடும் சேவை மன்னார் நகர சபை மண்டபத்தில் நடைபெற்றது.
இந்த நிகழ்வில் கலந்து கொண்ட அவரிடம் கேட்கப்பட்ட கேள்விக்கே அவர் இவ்வாறு பதிலளித்தார்.
தமிழ் மக்கள் அமைதி வழியில் போராடினார்கள். 1983 ஆம்ஆண்டு ஜூலைக் கலவரமானது ஓர் இனப்படுகொலை. இலங்கை அரசு தலைமையில் நடத்தப்பட்ட படுகொலை ,அதன்பிறகுதான் மக்கள் சொந்த நாட்டை விட்டு வெளியேறினார்கள். இல்லாவிட்டால் அவர்கள் பாதுகாப்பாக அருகில் உள்ள தமிழ்ப் பிரதேசங்களுக்குச் சென்று விட்டு மீண்டும் கலவரம் முடிந்த பின் தமது வீடுகளுக்குத் திரும்பிவரும்வழமை இருந்தது.
1983ஆம் ஆண்டுக்குப் பிறகுதான் தமிழ் மக்கள் இடம்பெயர்ந்து வெளிநாடுகளுக்குச் செல்லும் நிலமை ஏற்பட்டது. வசதி படைத்தவர்கள், வெளிநாட்டுத் தொடர்பில் இருந்தவர்கள், மேற்கத்தேய நாடுகளுக்குச் சென்றனர்.
வசதி இல்லாதவர்கள் உயிரைக் காப்பாற்றிக் கொள்வதற்காகப் படகுகள் மூலம் இந்தியாவுக்குச் சென்றார்கள். இந்தியாவுக்குச் சென்ற மக்கள் நிச்சயம் தாயகம் திரும்புவார்கள் என்ற சிந்தனை எனக்குள் இருந்ததால், அவர்களுக்காகச் சேவை செய்வதற்காக 1983 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் ஆரம்பிக்கப்பட்ட பயணம் முப்பத்தைந்து வருடங்களாக ஈழ ஏதிலியர் மறுவாழ்வுக் கழகத்தின் பணி தொடர்கிறது - என்றார் .
ஈழ மக்கள் தமது நாடு திரும்புவதற்கான முதற்கட்ட வேலை இந்திய அரசால் ஏற்றுக்கொள்ளப்பட்டு, படகுச் சேவை ஆரம்பிக்கும் நிலை உள்ளது என்று கருத்துத் தெரிவித்த சந்திரகாசனிடம்,
தற்போதைய அரசியல் சூழலில் வட. மாகாண முதலமைச்சர் தெரிவு இழுபறியாக இருக்கின்றது. முதலமைச்சர் விக்னேஸ்வரனா? அல்லது மாவை சேனாதிராசாவா பொருத்தமானவர் யார் என்று கேட்கப்பட்ட கேள்விக்கு, இது ஒரு மனித நேயப் பணி. இதில் அரசியல் கருத்துக் கூறுவதை நான் விரும்பவில்லை என்றாலும், மக்களின் தீர்வு முதன்மை யானது. அத்துடன் நான் அரசியலில் இறங்கும் போது சுடச்சுட பதில் தரப்படும் என்று அவர் தெரிவித்தார். (213)



## மடு யாத்திரை செல்வோருக்கு தண்ணீரும் உணவும் வழங்கல்

முல்லைத்தீவு ,ஓக. 14
மடுத்தேவாலயத்தின் பெருநாளை முன்னிட்டு, முல்லைத்தீவு மாவட்டத்தின் பல பகுதிகளில் இருந்தும், நடை பயணம் செய்யும் அடியவர்களுக்கான சிற்றுண்டி, குடிதண்ணீர் ,குளிர்பானம் வழங்கும் நடமாடும் சேவையை வன்னிக்குறோஸ் நிறுவனத்தின் நிறைவேற்றுப்பணிப்பாளர் மருத்துவ கலாநிதி சி.சிவமோகனின் பணிப்பின் பேரில்,வன்னிக்குறோஸ் நிறுவனத்தின் கிளை அமைப்புக்கள் ஒன்றிணைந்து கடந்த 11ஆம் திகதி காலை 10 மணி தொடக்கம் மாலை 4 மணிவரை ஒட்டுசுட்டானில் இருந்து வவுனிக்குளம் வரை 600க்கும் மேற்பட்ட அடியவர்களுக்கு சிற்றுண்டி, குடிதண்ணீர் , குளிர்பானம் ஆகியவையை நடமாடும் சேவை ஊடாக வழங்கினர். இந்தப் பணியில் வன்னிக்குறோஸ் மகளிர் பேரவையின் முல்லை மாவட்டத்தின் தலைவி சு.வளர்மதி, ஒட்டுசுட்டான் பிரதேச தலைவி சத்தியவாணி ,கலாசார பேரவையின் நிர் வாகத்தினரும் வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (222)






## பொது மயானம் துப்புரவுப் பணி

மன்னார் ,ஓக 14
மன்னார் பொது மயானம் துப்புரவுப் பணிகள் நேற்று முன் தினம் காலை முதல் மன்னார் நகர சபையின் தலைவர் ஞானப்பிரகாசம் அன்ரனி டேவிட்சன் தலைமையில் நகர சபையின் சக உறுப்பினர்கள் மற்றும் பொது மக்களும் இணைந்து துப்புரவு பணியில் ஈடுபட்டனர்.
இதன்போது மன்னார் பொது மயானத்தின், உள்ளக பகுதிகள், முழுமையாகச் சுத்தம் செய்யப்பட்டுத் தூய்மையாக்கப்பட்டுள்ளது. மன்னார் நகர சபைத் தலைவர் தலைமையில் அனைத்து உறுப்பினர்களும் இணைந்து பொது மக்களின் உதவியுடன் மேற்கொண்ட துப்புரவுப் பணிகள் தொடர்பில் பல்வேறு தரப்பினரும் மகிழ்ச்சி தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (56)

## 'மகிழம்பூவும் அறுகம் புல்லும்' நூல் வெளியீடு

வவுனியா ,ஓக 14
லண்டன் வாழ் படைப்பாளி தீபுதிலகை எழுதிய 'மகிழம்பூவும் அறுகம் புல்லும்' நூலின் வெளியீட்டு நிகழ்வு நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை வவுனியா சுத்தானந்த இந்து இளைஞர் மண்டபத்தில் நடைபெற்றது. வவுனியா தமிழ் விருட்சம் அமைப்பு, எஃப்.எம்.ஈ ஊடகக் கல்லூரி, வள்ளுவர்புரம் செல்லமுத்து வெளியீட்டகம் என்பவற்றின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக முகாமைத்துவக் கற்கைகள் பீடத்தின் பீடாதிபதி பேராசிரியர் தி.வேல்நம்பி தலைமையில் நடைபெற்றது.



நூலின் முதற்பிரதியை வவுனியா கலை இலக்கிய நண்பர்கள் வட்டத்தின் தலைவர் தமிழ்மணி அகளங்கன் நூலினை வெளியிட முதற்பிரதியினை வவுனியாவினைச் சேர்ந்த ஞானப்பிரகாசம் ஜெயகௌரி பெற்றுக்கொண்டார்.
இந்நிகழ்வில் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன், தமிழ் விருட்சம் அமைப்பின் தலைவர் சந்திரகுமார், செயலர் மாணிக்கம் ஜெகன், கவிஞர்கள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர். (110)



## தினச்சந்தையின் வியாபாரிகள் தற்காலிக கடைகள் அமைத்துத் தருமாறு கோரிக்கை

வவுனியா.ஓக 14

வவுனியா நகரில் காணப்படும் மரக்கறிச் சந்தையில் 18 பேர் வரை மரக்கறி வியாபாரம் செய்து வருகின்றனர். குறித்த கட்டடத் தொகுதியை உடைத்துப் புதிய சந்தைத் தொகுதி ஒன்றை 2.5 மில்லியன் ரூபா பெறுமதியில் அமைப்பதற்கு வவுனியா நகர சபை தீர்மானித்துள்ள துடன். இது தொடர்பில் வவுனியா நகரசபையினால் குறித்த வர்த்தகர்களுக்குத் தெரியப்படுத்தப்பட்டிருந்தது.இந்த புதிய மரக்கறிச் சந்தை அமைப்பதற்கு ஆறு மாத காலம் தேவை என்பதனால் அதுவரையிலும் வியாபார நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்காக.இந்த வியாபாரிகளுக்கு அந்த பகுதிக்கு அருகிலேயே புதியதொரு இடம் வழங்கப்பட்டிருந்தது.

இருந்த போதும்இந்த விடயத்தில் வியாபாரிகளே கொட்டகைகளை அமைக்க வேண்டும் என்று வியாபாரிகளுக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டிருந்தது.

எனினும் அந்தக் கொட்டகைகளை அமைப்பதற்கு தம்மிடம் போதுமான வசதிகள் இல்லாமையினால். நகரசபையே கொட்டகைகளை அமைத்துத் தரும் பட்சத்தில், தாம் அவ்விடத்துக்குச் சென்று வியாபாரத்தில் ஈடுபட முடியும் என தெரிவித்து வந்தனர்.

அத்துடன் குறித்த சந்தைக்கான மின்சாரத்தினையும், நகரசபை துண்டித்துள்ளமையினால் வியாபாரிகள் இரவு வேளைகளில் வியாபாரத்தில் ஈடுபடுவதிலும் சிக்கல் நிலையை எதிர்கொண்டு வருகின்றனர்.

இது தொடர்பாக நகரசபை தலைவரை தொடர்பு கொள்ள முயற்சித்தபோது முடியாமல் போனதுடன் உபநகரபிதாவான வே. குமாரசாமி(சுதந்திர கட்சி) தெரிவிக்கும் போது தற்காலிக கொட்டகை அமைப்பது தொடர்பாக நாம் தனிநபராகத் தீர்மானம் எடுக்க இயலாது எனினும் எதிர்வரும் நகரசபை அமர்வில் குறித்த விடயம் தொடர்பாக அனைத்து உறுப்பினர்களுடன் ஆராய்ந்து நல்லமுடிவு ஒன்றும் எடுக்கப்படும் என்று கூறினார்.

குறித்தவிடயம் தொடர்பாக மீள் குடியேற்றப் பிரதி அமைச்சர் கே.கே.மஸ்தான் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் ஆகியோர் நேரடியாகச்சென்று குறித்த சந்தை வியாபாரிகளின் நிலைமைகளைக் கேட்டறிந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது. (110)

## அரசியல்வாதிகள் அனைவரும் பதவி விலகி அரசுக்குக்கான எதிர்ப்பைத் தெரிவியுங்கள்

### நெடுங்கேணி கமக்கார அமைப்புக்களின் தலைவர் வைரமுத்து பூபாலசிங்கம்

**வவுனியா ,ஓக 14**

**இந்த நாட்டிலே நில உரிமை , தொழில் உரிமை , வாழ்வுரிமை. என்பனவற்றை என்றோ இழந்து விட்ட நாம் எஞ்சியிருந்த சொற்ப உரிமைகளில் தற்போது மத உரிமையையும் இழந்து தவிக்கின்றோம் இதனைத் தடுத்து நிறுத்துவதற்கு தமிழர் தரப்பில் பலமான ஒருவர் இல்லையா என நெடுங்கேணி கமக்கார அமைப்புக்களின் தலைவர் வைரமுத்து பூபாலசிங்கம் கேள்வி எழுப்பினார்.**

முல்லைத்தீவு மாவட்டம் கோவில்குடியிருப்பு பொது நோக்கு மண்டபத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களின் தலைமையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற குறைகேள் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் தொடர்ந்தும் உரையாற்றுகையில் :

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அரச தலைவருடன் பேசி இவற்றினைத் தீர்த்து வைக்க வேண்டும். அவ்வாறு தீர்க்க முடியாவிடின் தத்தை செல்வாவைப் போன்று அனைவரும் ஒட்டுமொத்தமாகப் பதவி விலகி இந்த அரசுக்கு எமது எதிர்ப்பை தெரிவிக்க வேண்டும்.

எமது பூர்வீக நிலங்கள் முல்லைத்தீவு மாவட்டத்திலும் வவுனியா மாவட்டத்திலும் புதுப் புது பெயர்களில் திட்டங்கள் போடப்பட்டுப் பல திணைக்களங்கள் ஊடாக பறிபோய்கொண்டு இருக்கிறது.

இதனால் இனியும் பொறுமை காக்க முடியாது. எனவே அனைவரும் வீதியில் இறங்க முன்வர வேண்டும். அதற்குக்கூட்டமைப்பும்முழுமையான ஒத்துழைப்புத் தந்து எம்மோடு வீதியில் இறங்க வேண்டும். இறங்குவீர்கள் என நம்புகின்றேன்.

தினம் தினம் எல்லைப் பகுதிகளில் ஏதோ ஒரு பிரச்சினை .அத்தோடு மீனவன் கடலிற்கு இறங்க முடியவில்லை. அப்படியே இறங்கினாலும் தடை செய்யப்பட்ட தொழில் காரணமாக எமது மீனவன் வெறும் கையோடு வருகிறான் . இப்படி இருக்க அவர்களது குடும்பமும் இங்கிருந்து ஓடவேண்டும் என்றா எதிர்பார்க்கின்றனர்.

1983ஆம் ஆண்டுமுதல் இடம்பெயர்ந்த எமது பூர்வீக நிலங்களின் காணி அனுமதிப் பத்திரம் பெட்டியில் எம்மிடம் பத்திரமாக உள்ளது.

ஆனால் அந்த இடத்திற்குச் சிங்கள மக்களுக்கு காணி உறுதி வழங்கப்படுகின்றது என்றால். நாம் இந்த நாட்டு மக்கள் இல்லையா?, வெடுக்குநாறி சிவன் ஆல்யத்தை நேற்றுமுன்தினம் இறுதியாக தரிசித்தோம். இனி அதனைப் பார்க்க முடியுமா என்பதே பெரும் கேள்விக் குறியாக மாறி விட்டது. அதற்கும் தொல்பொருள் திணைக்களம் ஆப்பு வைத்து விட்டது.

இதற்கு மேலும் எம்மால் என்ன செய்ய முடியும். என்ன செய்ய வேண்டும் என ஆட்சியாளர்கள் எதிர்பார்க்கின்றனர்.

குறித்த விடயங்கள் தொடர்பில் நாம் நிச்சயமாக உடன் அரசத்தலைவருடன் பேசவேண்டும் . அதேநேரம் உங்களது போராட்ட முடிவினை நாம் தடுக்க மாட்டோம். மாறாக எமது பூரண ஒத்துழைப்பு உண்டு. அதனை முன் கூட்டியே அறியத் தந்தால் நிச்சயமாக நாமும் பங்குகொள்வோம். ஏனெனில் கேட்டுக் கேட்டு எமக்கும் புளித்து விட்டது. அதனால் போராடித்தான் நாமும் பெறவேண்டியுள்ளது. அந்த முடிவிற்கும் நாமும் தள்ளப்படுகின்றோம்.

அதே நேரம் மக்கள் போராட்டங்களே பிரச்சினைகளின் தீர்வினையும் விரைவு படுத்தும் எனக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

குறித்த சந்திப்பில் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான . எம்.ஏ.சுமந்திரன் . சாந்தி சிறீஸ்கந்தராசா . இ.சாள்ஸ் நிர்மலநாதன் . சிவமோகன் ஆகியோருடன் வடக்கு மாகாண சபை உறுப்பினர் ப. சத்தியலிங்கம் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். (105)

## அரசியல் தீர்வும் ,பிரதேச அபிவிருத்தியும் எமது இரண்டு கண்களுக்குச் சமமானது

### பச்சிலைப்பள்ளி பிரதேச சபைத் தவிசாளர்

கிளிநொச்சி ,ஓக 14



அரசியல் தீர்வை அடைந்து கொள்வதும் பிரதேச அபிவிருத்தியை ஏற்படுத்துவதும் எமது இரு கண்கள் எனப் பச்சிலைப் பள்ளிப் பிரதேச சபைத் தவிசாளர் சுப்பிரமணியம் சுரேன் தெரிவித்தார்.

கடந்த வெள்ளிக்கிழமை சபையின் மாதாந்தப் பொதுக்கூட்டத்தில் தலைமைதாங்கி உரையாற்றும் போதே மேற்க்கண்டவாறு தெரிவித்தார்.

நாம் எமது அரசியல் உரிமைகளைப் போராடி பெற முயற்சித்தவேளை; எமது போராட்டங்கள் அரசினால் தொடர்ச்சியாக நசுக்கப்பட்டது. ஒடுக்கப்பட்டது ஆனாலும் நாம் எம்மால் இயன்ற எல்லை வரை கொண்டுநடாத்தினோம் .கொண்டுநடாத்திக்கொண்டிருக்கின்றோம் ,அதுபோல் எமது பிரதேச அபிவிருத்திகளையும் நாம் கரிசனையுடன் முன்னெடுக்கவேண்டும்.

தமிழர்களாகிய நாம் போராடித்தான் எமது உரிமைகளைப் பெறவேண்டும் இது எமது கடந்தகால அனுபவங்களிலிருந்து நாம் கற்றுக்கொண்ட பாடம் ,மாறி மாறி ஆட்சிக்கு வரும் சிங்கள பேரினவாத அரசு தமது பௌத்த மேலாதிக்க சிந்தனைகளை. தமிழர் மீது திணிக்கின்றது. எப்போது பௌத்த மேலாதிக்க சிந்தனையிலிருந்து அரசுகள் விடுபடுகின்றதோ. அப்போதே அவர்கள் தமிழர்களுக்கான தீர்வை வழங்குவர்.

அதுவரை நாம் ஜனநாயகரீதியாகப் போராடவேண்டும் , அத்துடன் எமக்கான வடக்கு கிழக்கு இணைந்த சுயநிர்ணய உரிமையுடனான தீர்வு வரும்வரை எல்லோரும் ஒற்றுமையுடன் பயணிக்கவேண்டும் எனத் தெரிவித்தார். (6)

## தமிழ் இனத்தின் இலட்சியப் பயணத்தை சிங்களப் பேரினவாதிகள் சிதைக்கின்றனர்

### நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன்


கிளிநொச்சி.ஓக .14

தமிழ்த்தேசிய இனத்தின் இலட்சியப்பயணத்தை சிதைக்க சிங்களப்பேரின வாதிகள் கடும் முயற்சியில் ஈடுபட்டு வருகின்றனர் என. தமிழ்த்தேசியக்கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் பூநகரி முக்கொம்பன் சின்னப்பல்லவராயன்கட்டு மக்களுடனான சந்திப்பின் போதே நாடாளுமன்ற உறுப்பினர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்:

தமிழர் நீண்டகாலமாக ஓர் இலட்சியத்துக்காகவே போராடி வருகின்றோம் .அகிம்சை ரீதியாகவும் ஆயுதரீதியாகவும் நாம் எமது உரிமைக்காகவே போராடி வந்துள்ளோம். தற்போது போரடியும் வருகின்றோம்.நாம் ஒரு தேசிய இனம் எமக்கு என்று தனித்துவமான மரபுகள். கலைகள். பண்பாடுகள் உண்டு.

அவற்றை நாம் எவரிடமும் தாரை வார்த்துக் கொடுக்க முடியாது. அண்மைக்காலமாக சிங்கள அதிகார வர்க்கத்தில் உள்ள தலைமைகள் பலரும் ,அதிகாரத்தைக் கைப்பற்ற நினைப்பவர்களும் இவ்வாறான கருத்துக்களை கொண்டிருக்கிறார்கள் என்பதை செய்திகள் வாயிலாக அறிய முடிகிறது. அண்மையில் வடக்கு மக்கள் அபிவிருத்திக்காக , தமிழ் மக்கள் போராட்டம் நடாத்த வேண்டும் என்று வடக்கு ஆளுநர் ரெஜினோல்ட் கூரே கருத்தினை வெளியிட்டிருந்தார்.



அவரின் கருத்துக்கு பின்னால் நாம் எமது உரிமைகள் பற்றிச் சிந்திக்காது.நாம் இந்த மண்ணிலேயே அடிமைகளாகவும் தாங்கள் தருகின்ற எலும்புத்துண்டுகளைக் கௌவிக்கொண்டு திரிய வேண்டும் என ஆசைப்படுகிறார்கள்.

அதற்காக அவர் கடந்தகால ஆட்சியில் அவர்கள் எலும்புத்துண்டுகளை கௌவ்விக்கொண்டு திரிந்தவர்களைத் துணைக்கு அழைத்துக் கொண்டு செல்கிறார்.

ஆனால் எமது மக்கள் விழிப்பாகவும் இலட்சியப்பயணத்தடத்தை தவறிவிடாமல் பயணித்துக் கொண்டே இருக்கிறார்கள் என நாடாளுமன்ற உறுப்பினர் சி . சிறீதரன் மேலும் தெரிவித்தார்.

குறித்த நிகழ்வில் வடக்குமாகாண உறுப்பினர் சு.பசுபதிப்பிள்ளை கரைச்சி பிரதேசசபைத் தவிசாளர் அ. வேழமாலிகிதன் பொது அமைப்புக்களின் பிரதிநிதி கள். பொது மக்கள் எனபலரும் கலந்து கொண்டனர். (105)

*மடுத்திருவிழா*

## கடைகள் போடுவதில் முறுகல் சாள்ஸ் நிர்மலநாதனால் தீர்வு

மன்னார்.ஓக .14

மடுக்கோவில் திருவிழாவை முன்னிட்டு பக்தர்களின் உணவு மற்றும் இதர தேவைகளை பூர்த்தி செய்து கொள்வதற்காக. நானாட்டான் பிரதேச சபையால் கடந்த வாரமளவில் வியாபாரம் செய்வதற்கென மடுச்சந்தியில் தற்காலிக இடம் வழங்கப்பட்டிருந்தது

ஆனால் கடைகள் வழங்கப்பட்ட நாளில் இருந்து அங்கு வியாபாரிகளுக்குள் முறுகல் நிலை ஏற்பட்ட வண்ணமிருந்ததாக அறியமுடிந்தது.

குறித்த இடத்தில்வியாபாரம்செய்வதற்கு உள்ளூர் வியாபாரிகளுக்கு முன்னுரிமை வழங்க வேண்டும் என உள்ளூர் வியாபாரிகள் நானாட்டான் பிரதேச சபைத் தலைவரைக் கேட்டுக்கொண்டமைக்கு அமைவாக அவர்களுக்கு முன்னுரிமை அடிப்படையில் கடைகள் வழங்கப்பட்டது.

வெளியிடங்களில் இருந்து வரும் சிங்கள வியாபாரிகளும் தங்களுக்கும் இடம் வழங்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டமைக்காக ஒரு சிலருக்கு இடம் வழங்கப்பட்ட போதும்.

விஷமிகளின் தூண்டதலால் ஒரு சில சிங்கள வியாபாரிகள் தொடர்ந்தும் குழப்பம் விளைவித்தபடி இருந்தனர். இது ஒரு இனமுறுகலைத் தோற்றுவிக்கும் என்பதால் நானாட்டான் பிரதேச சபை தலைவர் இந்த விடயம் தொடர்பாக வன்னிமாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதனுக்குத் தெரியப்படுத்தினார். சம்பவ இடத்திற்கு சென்ற சாள்ஸ் சம்பந்தப்பட்ட வியாபாரிகள் அனைவரையும் அழைத்து பேச்சுவார்த்தை நடத்தி .சிறிய முறுகல் நிலைகள் எவ்வாறு பெரிய பிரச்சனைகளை உருவாக்கும் என்பதை தெளிவுபடுத்தியதன் பின். தற்காலிகமாக அனைத்து வியாபாரிகளுக்கும் மடுச்சந்தியில் வியாபாரம் செய்ய அனுமதியளிக்கப்பட்டதாக நானாட்டான் பிரதேச சபைத் தவிசாளர் தி.பரஞ்சோதி தெரிவித்தார்.

இந்த சந்திப்பில் மடுப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி , பூமலாந்தான் கிராம அலுவலர் , நானாட்டான பிரதேச சபை உறுப்பினர் மற்றும் வியாபாரிகளும் கலந்து கொண்டனர். (213)

# படையினர் வீதியை டோசரால் உழுது தென்னங்கன்றுகள் நட்டுவருகிறனர்

## தடுத்து நிறுத்துமாறு பொதுமக்கள் கோரிக்கை

*யாழ்ப்பாணம், ஓக. 14*

*வலி. வடக்குப் பிரதேசத்தில் வீதி அபிவிருத்தி அதிகார சபைக்குச்சொந்தமான முதன்மை வீதிகளில்ஒன்றான கட்டுவன் -மயிலிட்டி வீதியில் குறிப்பிட்ட தூரம் படையினரின்கட்டுப்பாட்டில்உள்ளது. அந்த வீதியைப்படையினர் கொத்திச் சீரழித்து அந்த இடங்களில் தென்னங்கன்றுகள் நடுகின்றனர்என்று தெரிவிக்கப்படுகிறது. அதனைநிறுத்தி வீதியை விடுவிக்குமாறு கோரப்படுகிறது.*



வலி . வடக்குப் பகுதியில் கடந்த ஏப்ரலில் 643 ஏக்கர் காணித்துண்டுகள் படையினரால் விடுவிக்கப்பட்டன. அதில் மயிலிட்டி- கட்டுவன் வீதியின் ஒரு பகுதி விடுவிக்கப்பட்டபோதிலும் சிறு பகுதி படையினரின் பிடியில் காணப்பட்டது. இன்றுவரையில் தனியார் காணிகளின் ஊடாகவே போக்குவரத்து இடம்பெறுகின்றது.

அந்தவீதியைவிடுவிக்குமாறுகோரப்பட்டது. குறித்த வீதி முழுமையாக விடுவிக்கப்படும் என்று முன்னர் வாக்குறுதிவழங்கப்பட்டது.

ஆனால் சுமார் 200 மீற்றர் நீள வீதிப் பிரதேசத்தில் உள்ள வளைவைப் பயன்படுத்திய படையினர் வீதியின் ஒருபுறம் சுமார் 40 சதுர அடி பரப்பும் வீதியின்மறுபுறம்சுமார்3ஏக்கர்நிலப்பரப்பையும் படையினர் விடுவிக்கவில்லை.

அங்கு வீதியின் ஒருபுறமுள்ள சுமார் 40அடிநீளமானபகுதியும்வீதியையும் படையினர் டோசர் மூலமாக உழுது நடுவீதியில்தென்னைச்செய்கையில் ஈடுபட்டுள்ளனர்.

வடக்கு- தெற்கு நோக்கியுள்ள குறித்த வீதியின்மேற்குத்திசைமுழுமையாக விடுவிக்கப்பட்டபோதும் கிழக்குத் திசை படையினரின் பாதுகாப்பு வேலிக்குள்அகப்பட்டுள்ளது. வீதியின் மேற்குத் திசையில் வெள்ள வாய்க்கால் காணப்பட்டது.

அவையும்படையினரின்பிடியில்உள்ளன. அதனால்விடுவிக்கப்பட்ட நிலங்களில் எந்தவிதமான அபிவிருத்தியும் செய்ய முடியாது நில உரிமையாளர்கள் திணறுகின்றனர். வெள்ளவாய்க்கால், வீதி என்று அபகரித்துள்ள சிறு பகுதியான 3 ஏக்கர் நிலப்பரப்பைப் படையினரிடமிருந்து விடுவிக்க உரியவர்கள் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று நில உரிமையாளர்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

குறித்த வீதியை விடுவிக்குமாறு தமிழ்த்தேசியக்கூட்டமைப்பின்நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சோ. சேனாதிராசாபடையினருக்குக்கடிதம் எழுதியுள்ளார் என்றும் அதற்குரிய பதில்இன்னும்கிடைக்கவில்லைஎன்றும்தெரிவிக்கப்பட்டது. (4.105)

# குடத்தனை, இமையாணனுக்கு ரூ. 47மில்லியனில் குடிதண்ணீர்

## விரைவில் நடவடிக்கை என்கிறது சபை

யாழ்ப்பாணம், ஓக. 14

யாழ்ப்பாண மாவட்டத்தில் குடத்தனை மற்றும் இமையாணன் பகுதி மக்களுக்கான தண்ணீர் விநியோகத்துக்கு 47 மில்லியன் ரூபா கிடைத்துள்ளதாக யாழ்ப்பாண மாவட்ட நீர் வழங்கல்வடிகாலமைப்புச் சபையின் முகாமையாளர் ஏ.ஜெகதீசன் தெரிவித்தார். இது பற்றி அவர் மேலும் தெரிவித்ததாவது:

குடத்தனை மற்றும் இமையாணன்பகுதிமக்களுக்குத் தண்ணீர் வழங்க வேண்டிய தேவைஉள்ளது. ஒவ்வொரு குடும்பத்துக்கும் தண்ணீர் இணைப்புகள் தனித்தனியாக வழங்கவுள்ளோம். இதற்காக யாழ்ப்பாண மாவட்ட செயலர்47மில்லியன்ரூபாவை ஒதுக்கியுள்ளார். அதன்படி வேலைகள் விரைவில் ஆரம்பமாகவுள்ளன.

குடத்தனைப் பகுதியில் நீர்த்தாங்கி ஒன்று அமைக்கப்பட்டு அதன் ஊடாக 60 குடும்பங்கள் தண்ணீர் பெறக்கூடிய தனிக் குழாய் இணைப்புகள்வழங்கப்படவுள்ளன. அதேபோன்று இமையாணன் பகுதியிலும் தண்ணீர்க் குழாய் பொருத்தப்படவுள்ளது. இதன்மூலமாக 200குடும்பங்கள் பயன்பெறுவர். மக்களுக்குக் குடிதண்ணீர் வழங்குவதற்கான பணிகள்விரைவில்ஆரம்பிக்கப்படும்-என்றார். (4,7)

# சாவகச்சேரி மருத்துவமனைக்கு 100மின்வலுவில் மின்பிறப்பாக்கி

சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் அமைக்கப்பட்டுவரும் விபத்துச் சத்திர சிகிச்சைக் கூடத்துக்கு மின்சாரம் வழங்கவென 100 மின்வலு கொண்ட மின்பிறப்பாக்கி நேற்றுமுன்தினம்பொருத்தப்பட்டுள்ளது.

மைய சுகாதரா அமைச்சு இந்த மின்பிறப்பாக்கியை வழங்கியது. அதனை மின்சார சபையினர் நேற்றுமுன்தினம் உரிய இடத்தில் அமைத்து ஒழுங்கு செய்துள்ளனர்.

மருத்துவமனையில்ஏற்கனவேபொருத்தப்பட்டுள்ள மின்பிறப்பாக்கிமின்சாரம் தடைப்படும்வேளைகளில் பயன்படுத்தப்பட்டு வருகிறது. மருத்துவமனையின் நிர்வாக அலகு, 10 விடுதிகள், குருதி சுத்திகரிப்பு நிலையம், மருத்துவர்களுக்கான விடுதிகள் உள்ளிட்ட மருத்துவமனை கட்டடங்களுக்கும்மின்சாரம் வழங்கப்பட்டு வருகிறது. அந்தமின்பிறப்பாக்கிமூலமாகப் பெறப்படும் மின்சாரம் புதிதாக அமைக்கப்பட்டுவரும்விபத்துசத்திரசிகிச்சைப்பிரிவுக்குப்போதாது. மருத்துவமனை நிர்வாகத்தின்வேண்டுகோளின் பிரகாரம் புதிய மின்பிறப்பாக்கி இலங்கை மின்சார சபையால் பொருத்தப்பட்டுள்ளது. விபத்து சத்திர சிகிச்சைக்கட்டடங்களுக்கு மின் இணைப்பு வழங்குவதற்கானநடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றனஎன்றுதெரிவிக்கப்பட்டது. (4.9)

# பதிவு செய்யாதவர்கள் பதிவுசெய்யவும்

யாழ்ப்பாணம், ஓக. 14

யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களில் உள்ள முஸ்லிம்கள்பள்ளிவாசல்களில்தமது விவரங்களைப்பதிவுசெய்யுமாறு அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமா யாழ்ப்பாணம் கிளிநொச்சி மாவட்டக்கிளை கோரியுள்ளது.

வர்த்தகம் மற்றும் கல்வி, வேலைவாய்ப்புகள், திருமணம் உள்ளிட்ட நோக்கங்களுக்காகப்பல்வேறு இடங்களில்முஸ்லிம்கள் குடியிருக்கின்றனர். அத்தகையவர்கள் தமது விவரங்களைத்தமக்குஅண்மையில்உள்ளபள்ளிவாசல்களில் வழங்கவும். சமய, சமூக ரீதியான விடயங்களில் இவர்களுக்குரியபங்குகள், உரிமைகள் இல்லாமல்போய்விடுகின்றன என்று அந்தக் கிளை கோரியுள்ளது. (4)

# உலகத்தமிழ்பண்பாட்டுமையம் யாழில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது

யாழ்ப்பாணம், ஓக. 14

உலகத் தமிழ் பண்பாட்டு மையம் யாழ்ப்பாணத்தில் அண்மையில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இவ்வமைப்பானது சமூக சேவை ஒழுங்கமைப்புச் சட்டத்தின்கீழ் JF/VN/VOL/2018/38 என்னும் பதிவிலக்கத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது. இந்த அமைப்பின் தலைவராக யாழ்ப்பாணப் பல்கலைக்கழகப் பேராசிரியர் தி.வேல்நம்பி, செயலாளராக யாழ்ப்பாணம் யூனியன் கல்லூரி அதிபர் தி.வரதன், பொருளாளராக வலி. மேற்குபிரதேசசபையின்திட்டமிடல் உதவியாளர் செ.ரமேஸ், ஊடகப் பொறுப்பாளராக ஆசிரியர் நி.கஜிதரன் ஆகியோர் உள்ளடங்கலாக 21 உறுப்பினர்கள் கொண்ட நிர்வாக சபை தெரிவு செய்யப்பட்டது.

தமிழர்களின்கலை, இலக்கியம்சார் பாரம்பரிய விடயங்களைப் பேணிப் பாதுகாப்பதோடுஅவைசார்ந்தவெளியீடுகள், நூல்கள் மற்றும் ஆவணங்களைப்பாதுகாப்பதற்காக ஆவணக் காப்பகம் ஒன்றை நிறுவியுள்ளதாகவும் அந்த அமைப்புக் கூறுகிறது. தமிழ்ப் பேசும் மக்களின் வாழ்வாதாரவிடயங்களைவலுப்படுத்திகற்றலுக்குஇடர்படும் மாணவர்களுக்குத் தேவையான உதவிகள், வலுவிழந்தோருக்கான உதவிகள், பெண் தலைமைத்துவ வறிய குடும்பங்களை இனங்கண்டு வாழ்வாதார உதவிகளைப் பெற்றுக் கொடுத்தல், தொழிற் பயிற்சி மற்றும் உளவள ஆலோசனைகளை வழங்குதல் உலகெங்கிலும் வாழும் தமிழர்களைத் தொடர்புபடுத்தலும் ஒருங்கிணைத்தலும், தமிழ்மொழியறிவை வளர்க்கவும், உயர்அறிவுஊட்டவும் பாடுபடுதல். உலகத் தமிழ்ப் பண்பாட்டு ஆயவு மாநாடுகளை நடத்துதல் போன்ற இன்னோரன்ன நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டு இந்த அமைப்பு செயற்படுகின்றது.

இந்த அமைப்பு அரசியல் சார்பற்றதோடு வலிந்துதவும் தன்னார்வுத் தொண்டமைப்பாகவும் செயற்படும் என்று அதன் ஊடக இணைப்பாளர் நி.கஜிதரன் அனுப்பியசெய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (4)

# அனுமதியின்றி மணல் ஏற்றிய டிப்பர் சாரதிக்கு ரூ.50,000 தண்டம்

சாவகச்சேரி, ஓக. 14

அனுமதிப்பத்திரமின்றி மணல் எற்றிச் சென்ற டிப்பர் வாகனச் சாரதிக்குச் சாவகச்சேரி நீதிமன்று 50 ஆயிரம் ரூபா தண்டம் விதித்தது.

தென்மராட்சியில் முதன்மைச் சாலை வழியாக வந்த டிப்பர் வாகனத்தைச் சோதனையிட்ட பொலிஸார் அனுமதிப் பத்திரமின்றிமணல்ஏற்றிச்சென்றமையைக் கண்டறிந்தனர். சாரதிக்கு எதிராகநீதிமன்றில்வழக்குத்தொடுக்கப்பட்டது. அவர் மீதான வழக்கு சில நாள்களுக்கு முன்னர் நீதிமன்றில் விசாரணைக்கு வந்தது. சாரதி தன் மீதான குற்றத்தை ஒப்புக்கொண்டார்.

அத்னையடுத்துஅவருக்கு50ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டது. மணலைப் பறிமுதல் செய்யு மாறும் மன்று உத்தரவிட்டது. (4.9)

# உள்ளூராட்சி உதவியாளர்களின் சம்பளத்திட்டம் உரியவாறில்லை

## சீர்ப்படுத்துமாறு முதலமைச்சரிடம் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஓக. 14

வடக்கு மாகாண சபையில் கடமையாற்றும் உள்ளூராட்சி உதவியாளர்களது சம்பள அளவு திட்டம் மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுத்தீர்மானத்துக்குஅமைவாக அமையவில்லை என்று மாகாண சபை உறுப்பினர் சபா.குகதாஸ் தெரிவிக்கிறார்.

எனவே வடக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுஅனுமதித்தவகுப்பு-IIபதவிக்கான எம்.என் 5 சம்பள அடிப்படையிலும் ரீ.ஏ-3-6 வகுப்புக்கான சம்பள அடிப்படை எம்.என்-7சம்பளஅடிப்படையில்ரீ.ஏ-3-8-2 வழங்க வடக்கு மாகாண முதலமைச்சர் நடவடிக்கைஎடுக்கவேண்டும்என்றும்அவர் கோருகிறார்.

இது தொடர்பில் முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரனுக்குக் கடிதம் அனுப்பியுள்ளார் என்றும் தெரிவிக்கப்பட்டது. அதில் மேலும் தெரிவிக்கப்பட்டதாவது:

வடக்கு- கிழக்கு மாகாணத்தில் 1999 ஆம் ஆண்டுதொடக்கம்54உள்ளூராட்சிஉதவியாளர்கள் கடமையாற்றுகின்றனர். இவர்களில் 21உள்ளூராட்சி உதவியாளாகள உள்ளூராட்சிஅமைப்பின்கீழ்ப்பணியாற்றுகின்றனர். இதன்பிரகாரம்வடக்குமாகாணபொதுச்சேவை ஆணைக்குழு 18 வருடங்களின் பின்னர் பதவி உயர்வு விடயத்தை முன்னிலைப்படுத்தியது. இதனைத் தொடர்ந்து மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு பதவிஉயர்வைஅனுமதித்துவடக்குமாகாண உள்ளூராட்சி அமைச்சின் செயலருக்கு வழங்கியது. அதன்படி பதவி உயர்வுகளை வழங்கிப்பொதுச்சேவைஆணைக்குழுவுக்கு அறிக்கையிடுமாறுகோரியிருந்தது. ஆனால் வடக்கு மாகாண பொதுசேவை ஆணைக்குழுவின்அனுமதியைமீறி, வடக்குமாகாண ஆளுநர், வடக்கு மாகாண முதலமைச்சர் ஆகியோருக்குத்தெரியாமல்திட்டமிட்டுஉள்ளூராட்சிஉதவியாளர்களதுசம்பளம்குறைக்கப்பட்டுள்ளது. எனவேவடக்குஉள்ளூராட்சி அமைச்சுமாகாணபொதுச்சேவைஆணைக்குவின் அனுமதியின்படி உரிய நடவடிக்கை எடுக்குமாறு மாகாண சபை உறுப்பினர் கோரியுள்ளார்-என்றுள்ளது. (4.50)

## மடுத் திருவிழாவுக்கு சிறப்புப் பேருந்து சேவை

யாழ்ப்பாணம், ஓக 14

மன்னார் மடுத் திருவிழாவுக்கான சிறப்புபேருந்துசேவையைஇலங்கை போக்குவரத்துச் சபை இன்று செவ்வாய்க்கிழமையும், நாளை புதன் கிழமையும்மேற்கொள்ளவுள்ளது.

மேற்படி இரு தினங்களிலும் யாழ்ப்பாணம், பருத்தித்துறை, வவுனியா, கிளிநொச்சி, முல்லைத்தீவு மற்றும் மன்னார்பேருந்துநிலையங்களில்இருந்து பயணிகளின் வருகைக்கு ஏற்ப பேருந்து சேவை இடம்பெறும் என்று இலங்கை போக்குவரத்துச் சபையின் வடபிராந்திய செயலாற்றும் முகாமையாளர் தெரிவித்துள்ளார்.

## கஞ்சா வழக்கில் தேடப்பட்டவர் கைதாகி மறியலில்

சாவகச்சேரி, ஓக. 14

36கிலோகஞ்சாபோதைப்பொருளைக் கடத்திய குற்றச்சாட்டில் நீதிமன்றால் பிடியாணை பிறப்பிக்கப்பட்டுத் தேடப்பட்டு வந்தவர் கைது செய்யப்பட்டார். அவரை எதிர்வரும் 17ஆம் திகதிவரை விளக்கமறியலில்வைக்கசாவகச்சேரி நீதிமன்று உத்தரவிட்டது.

கச்சாயைச் சேர்ந்த குறித்த நபரைக் கொடிகாமம் பொலிஸார் நேற்றுமுன்தினம் கைதுசெய்தனர்.

அவர்சாவகச்சேரிநீதிமன்றில்முற்படுத்தப்பட்டபோதுவிளக்கமறியல்உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

வரைவிளக்கமறியலில்வைக்குமாறு பதில் நீதிவான் செ. கணபதிப்பிள்ளை உத்தரவிட்டார்.

சாவகச்சேரிகச்சாய்வீதியிலுள்ளசிறிய வீடொன்றில்கடந்தநவம்பரில்36கிலோ கஞ்சாவைப்பொலிஸார்மீட்டிருந்தனர். அதனுடன் தொடர்புடைய குற்றச்சாட்டில்முன்னர் 6பேர்கைதுசெய்யப்பட்டனர். அவர்கள் இன்றுவரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். 7ஆவது சந்தேக நபராக கச்சாய் நபர் என்று நீதிமன்றில் தெரிவிக்கப்பட்டது. அவரைக் கைது செய்ய நீதிமன்று பிடியாணை பிறப்பித்தது. பொலிஸாரால் தேடப்பட்டுவந்தநிலையில்நேற்றுமுன்தினம்கைது செய்யப்பட்டார். (4,9)

## கொழும்பு அமைச்சின் உத்தரவிலேயே மருத்துவ அதிகாரிக்கு இடமாற்றம்

யாழ்ப்பாணம், ஓக. 14

கொழும்பு சுகாதார அமைச்சு உத்தரவிட்டதன் பின்னரே பருத்தித்துறைஆதாரமருத்துவமனையிலிருந்து, மருத்துவ அதிகாரி இடமாற்றம் பெற்றுச் செல்ல அனுமதிக்கப்பட்டார்.

வடக்கு மாகாண சுகாதார சேவைகள் திணைக்களப் பணிப்பாளர் மருத்துவர்ஆ. கேதீஸ்வரன்இந்தத் தகவலைநேற்றுத்தெரிவித்தார்.

அவரைவடக்குமாகாணசுகாதார சேவைகள் பணிப்பாளர் இடமாற்றம் செய்யவில்லை. அதற்கான அதிகாரமும் மாகாண சுகாதாரப் பணிப்பாளருக்கு இல்லை. பருத்தித்துறை மருத்துவமனையிலிருந்துமகப்பேற்றுநிபுணர்எவரும் இடமாற்றம் செய்யப்படவில்லை. மகப்பேற்றுப் பிரிவிலுள்ள மருத்துவ அதிகாரியே இடமாற்றம் செய்யப்பட்டார். அவர் 2015ஆம் ஆண்டு வருடாந்த இடமாற்றம் செய்யப்படவேண்டியிருந்தவர் என்று பணிப்பாளர் கேதீஸ்வரன் நேற்றுசெய்திக்குறிப்பில்தெளிவுபடுத்தியுள்ளார்.

இதுதவிரபருத்தித்துறைமருத்துவமனையிலிருந்து குறித்த மருத்துவரை விடுவிக்குமாறு கோரியும் அந்த மருத்துவமனை அத்தியட்சகர்விடுவிக்கமறுத்துவந்தார். அதனால் கடந்த வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணத்திலுள்ள போதனா மருத்துவனை தவிர்ந்த ஏனைய மருத்துவமனைகளின்மருத்துவர்கள் அரைநாள் சுகவீன விடுப்புப் போராட்டம்செய்வதுஎன்றுஅதற்கு முதல்நாளான வியாழக்கிழமை அறிவித்தனர்.

அந்த விடயம் கொழும்பு சுகாதார அமைச்சின்கவனத்துக்குக்கொண்டு செல்லப்பட்டது. இந்த நிலையில் கொழும்பு அமைச்சிலிருந்து விடுத்தஉத்தரவின்படியேபருத்தித்துறை மருத்துமனையிலிருந்து மருத்துவ அதிகாரி இடமாற்றத்துக்கு விடுவிக்கப்பட்டுள்ளார். (4)



*வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த நல்லூர்க் கந்தசுவாமி கோவிலின் திருவிழாவை முன்னிட்டு ஆலய வெளி வீதி புனித பிரதேசமாக்கப்பட்டு வீதியைச் சுற்றி சிவப்பு வெள்ளை நிறத்தில் சீலை கட்டப்பட்டுள்ளது. (17)*

## எலிப் புழுக்கையுடன் உப்பு

### வர்த்தகருக்கு 12,000 ரூபா தண்டம்

சாவகச்சேரிஓக. 14

வர்த்தக நிலையத்தில் திகதி காலாவதியானதயிர்க்குவளை(ஜோக்கட்), எலி கடித்த, எலிப் புழுக்கையுடன் காணப்பட்டஉப்புப்பைக்கற் என்பனவற்றை விற்பனைக்கு வைத்திருந்த வர்த்தகருக்கு சாவகச்சேரி நீதிமன்று 12 ஆயிரம்ரூபாதண்டம் விதித்தது.

எழுதுமட்டுவாழ்பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் காணப்பட்ட பலசரக்கு விற்பனை நிலையங்களில் சாவகச்சேரி சுகாதார திணைக்களத்தினர் சில நாள்களுக்கு முன்னர் திடீர் பரிசோதனைநடத்தினர்.

அதன்போது மிருசுவில் பகுதியில் உள்ள வர்த்தக நிலையத்தில் திகதி காலாவதியான தயிர் மற்றும் எலி சேதமாக்கிய உப்புப் பைக்கற் ஆகியவற்றை விற்பனைக்கு வைத்திருந்தமை தெரியவந்தது. வர்த்தகருக்கு எதிராக வழக்குப் பதிவு செய்தனர்.

சாவகச்சேரிநீதிமன்றில்வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்டது. வர்த்தகர் குற்றத்தைஒப்புக்கொண்டார். அதையடுத்து இரண்டுகுற்றங்களுக்குமாக 12ஆயிரம்ரூபாதண்டம்விதிக்கப்பட்டது. (4,9)

*யாழ்ப்பாண சிறைச்சாலையில்*

# கட்டடப் பணிகளை நிறுத்த வழக்குத் தாக்கல் செய்யவும்

*பிரதேச அபிவிருத்திக்குழுக் கூட்டத்தில் தீர்மானம்*

யாழ்ப்பாணம், ஓக. 14

யாழ்ப்பாணச் சிறைச்சாலை வளாகத்தில் இடம்பெறும் கட்டடப் பணிகளை நிறுத்துவதற்கு வழக்குத் தாக்கல் செய்ய வேண்டும் என்று நேற்றைய ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

யாழ்ப்பாண பிரதேச செயலகத்தின் ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் இணைத்தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான மாவை. சோ. சேனாதிராசா தலைமையில் செயலக கேட்போர் கூடத்தில் நேற்று நடைபெற்றது. அதில் இந்தத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

யாழ்ப்பாண சிறைச்சாலைக்குரிய காணி இராஜ வீதியில் அமைந்துள்ளது. சிறைச்சாலை பண்ணையில் அமைந்துள்ளது. அது அனுமதி இன்றிஅமைக்கப்பட்டுள்ளது. தற்போதுமேலதிக கட்டடப் பணிகள் இடம்பெறுகின்றன. யாழ்ப்பாண நகரில் அது அமைக்கப்பட வேண்டிய தேவை இல்லை. அதனை மருத்துவம் சார்ந்த வேலைகளுக்குப் பயன்படுத்தலாம். சிறைச்சாலை இராஜவீதிக்கு மாறவேண்டும். மேலதிக எந்தக்கட்டட நடவடிக்கைகளும் மேற்கொள்ளக் கூடாது என்று மாகாண சபை உறுப்பினர்கள், மாநகர சபை உறுப்பினர்கள் உள்ளிட்ட பலர் கருத்துகளை வெளியிட்டனர்.

தற்போதுஅமைக்கப்படும்கட்டடம்சிறைக்கைதிகளுக்கானது. முன் பக்கம் அமைக்கப்படும் கட்டடம் கழிவு மீள் சுழற்சி செய்யப்படும் கட்டடம். சிறையில் தற்போது 600 கைதிகள் உள்ளனர் என்று சிறைச்சாலை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். மலசலகழிவுகள்பண்ணைக்கடலுக்குள் நேரடியாகவிடப்படுவதாகவும்சுட்டிக்காட்டப்படுகிறது" என்று அந்த உறுப்பினர்கள் கூறினர்.

இது தொடர்பில் நீதி அமைச்சிடம் கலந்துரையாடப்படும்என்றுமாவைசேனாதிராசாதெரிவித்தார். அங்கு தற்போது நடைபெறும் கட்டடப் பணிகளை மாநகர சபை ஊடாக நிறுத்த வேண்டும். அதற்குரியசட்ட ஆலோசனைகளைப்பின்பற்றி வழக்குத் தொடுக்க வேண்டும் என்று சபையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

### அரச தலைவர் செயலகம்

அரசதலைவர்செயலகத்தால்நடைமுறைப்படுத்தப்படும் சகல செயற்றிட்டங்கள் தொடர்பாகவும் மாவட்ட, பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில்விளக்கமளித்தல்வேண்டும்என்று செயலகத்தால் அறிவிக்கப்பட்டுள்ளதாகப் பிரதேச செயலர் தெரிவித்தார்.

### சிறப்புக் கடன் திட்டம்

16 வகையான கடன்களைக் குறைந்த வட்டி வீதத்தில்வழங்குவதற்குநல்லிணக்கஅமைச்சு முன்வந்துள்ளது. சுயதொழில் முயற்சியாளர்களை ஊக்குவிப்பதற்காக இந்தக்கடன் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இந்தக் கடன்களைப் பெறுவதில் பல்வேறு சிக்கல் காணப்படுகிறது என்று மாகாண சபை உறுப்பினர்கள் சபையில் சுட்டிக்காட்டினர்.

கடன் பெறுவதற்கான சாட்சி கையெழுத்திடுவதற்கு அதிக நிபந்தனைகள் விதிக்கப்படுகின்றன. இதனால் கடன்களை மக்கள் பெற்றுக்கொள்ள முடியவில்லைஎன்றும்அவர்கள்தெரிவித்தனர். அதன்போதுகருத்துத்தெரிவித்தஇணைத்தலைவர், கடன்பெறுவதைஉறுதிப்படுத்துவதற்குவங்கிகள் கடுமையான நடைமுறைகளைப் பின்பற்ற முடியாது. கடன் எடுக்கும் வங்கியில் கணக்கு வைத்திருக்கும் வேறு நபர்கள் கையெழுத்திட முடியும் என்ற வகையில் நாடாளுமன்ற அமர்வில் விவாதிக்கப்பட்டுவருகின்றது. இலகு கடன் பெறநடவடிக்கைஎடுக்கப்படும்என்றுஇணைத்தலைவர் மாவை சேனாதிராஜா தெரிவித்தார்.

### நுண் நிதி கடன்கள்

இளம் பெண்களை இலக்காகக் கொண்டு எமது பிரதேசத்தில்வீடுதேடிச்சென்றுநிதிநிறுவனங்கள் கடன் வழங்குகின்றன. கடன் பெறுபவர்களின் ஒருலட்சம்ரூபாவரையானகடன்கள்தள்ளுபடி செய்யப்படும். அதற்கேற்ற வகையில் பிரதேச செயலகம் ரீதியாக பாதிக்கப்பட்டவர்களின் விவரங்கள் சேகரிக்கப்பட்டுவருகின்றன.

ஆனால் எங்கு, எந்த நிறுவனத்தில் கடன் பெற்றார்கள்என்றுசொல்வதற்குபெரியஎண்ணிக்கையில்எவரும்முன்வரவில்லை. இதுவரைசுமார் 16பேர்கடன்தொடர்பாகஎமக்கு அறியத்தந்துள்ளனர். ஏனையவர்களும் தாம் பெற்ற கடன் தொடர்பில்அறிவிக்கமுன்வரவேண்டும்என்று பிரதேசசெயலக அதிகாரிகள் தெரிவித்தனர்.

### 32 நுண்நிதி நிறுவனங்கள்

இங்கே 32 நுண்நிதி நிறுவனங்கள் உள்ளன. ஆசை வார்த்தைகளைக்கூறி மக்களுக்குக் கடன் வழங்குகின்றனர். அதனைச் செலுத்த முடியாமல் மக்கள் திண்டாடுகின்றனர். இதைக் கட்டுப்படுத்தவேண்டும். வங்கிகளில்வழங்கும் கடன்கள் மக்களுக்கு இலகுவாகச்சென்றடைய வழிவகைகள் செய்ய வேண்டும். இதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கூட்டத்தில் சுட்டிக்காட்டப்பட்டது.

### அனுமதின்றி 90 கட்டடங்கள்

யாழ்ப்பாணம் பிரதேச செயலக எல்லைக்குள் இதுவரைஅனுமதிபெறாது90கட்டடங்கள் உள்ளன. இவற்றில் யாழ்ப்பாணம் மாநகர சபைக்கும் பங்குள்ளது. ஆகவே நடவடிக்கை எடுக்க வேண்டும்என்று செயலக அதிகாரிகள் கேட்டுக்கொண்டனர்.

### நல்லபிள்ளைக்கு நடிக்காதீர்கள்

அனுமதி பெறாது அமைக்கப்பட்ட 23 கட்டடங்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று யாழ்ப்பாண மாநகர முதல்வர் இ. ஆனோல்ட் தெரிவித்தார்.

பெரியகட்டடங்கள்கூட அனுமதிபெறாமல்இங்கு அமைக்கப்பட்டுள்ளன. கட்டடவேலைஆரம்பிக்கப்படும்போது உடனே அறியத்தர வேண்டும். கட்டட வேலைகள் நிறைவடைந்தபின்னர் கூறினால் என்ன செய்வது? மக்கள் நலன்கருதி குடியிருப்புகள் அமைக்க வேண்டிய தேவை இருந்தால் அவர்களுக்கு மாற்று நடவடிக்கை எடுக்க நாம் தயாராக உள்ளோம். அதேபோன்று கரையோரப் பிரதேசத்தில் அமைக்கப்பட்ட அனுமதி பெறாதகட்டடங்கள் இடிக்கப்படும். அதற்கு முன்னர்மாற்றுவழிகள் செய்வோம். அதற்கு அனைவரும் ஒத்துழைப்புத் தர வேண்டும். எங்கு என்னவேலைகள்நடக்கின்றனஎன்றுஎல்லோருக்கும் தெரியும். அதை எமக்கு தெரியப்படுத்த வேண்டும். யாரும் நல்ல பிள்ளைக்கு நடிக்க வேண்டாம் - என்றார்.

### நிதியீட்டம் போதாது

பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட பகுதிகளில் 3 ஆயிரத்துக்கும் அதிகமான பெண் தலைமைத்துவக் குடும்பங்கள் வாழ்கின்றன. அவர்களுக்கான வாழ்வாதாரத்தை வழங்குவதற்கு நிதி ஈட்டங்கள் போதாமல் உள்ளன. இயற்கை இறப்பு மூலமாகக் கணவனை இழந்தவர்கள் சுமார் 2ஆயிரம், பிரிந்தவர்கள் 400, காணாமல் ஆக்கப்பட்டோர் 37, போரால் பாதிக்கப்பட்டோர் 105 பேர், பெண் தலைமைத்துவக் குடும்பங்களாக உள்ளனர். இவர்களுக்கு உதவிகள் வழங்க நிதி போதாமல் உள்ளன என்று பிரதேச செயலக அதிகாரிகள் தெரிவித்தனர்.

### முன்னாள் போராளிகள்

முன்னாள்போராளிகள் 70க்கும்அதிகமானவர்கள் உள்ளனர். அவர்களுக்கு என். வி. கியூ மட்டத்தை நிறைவு செய்வதவர்கள், புதிதாக வேலைக்கு இணைந்தவர்களுக்கான 10ஆயிரம் ரூபா வழங்கும் திட்டம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. ஆனால் அமைச்சு கூறும் நிபந்தனைகளின்படி குறைந்த எண்ணிக்கையான முன்னாள் போராளிகளுக்கே இது வழங்கக்கூடியதாக உள்ளது என்று பிரதேச செயலக அதிகாரிகள் தெரிவித்தனர். (4,7)



## வர்த்தக நிலையத்தில் தீ உரிமையாளர் உயிரிழப்பு

கொழும்பு. ஓக.14

வர்த்தக நிலையத்தில் ஏற்பட்ட தீ விபத்தினால் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

வர்த்தக நிலைத்தின் உரிமையாளரான மீரறேமந்தகுமார் (வயது48 ) என்பவரே உயிரிழந்தார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் பதுளை- கொக்கோவத்தைப் பகுதியில் நேற்று முன்தினம் அதிகாலை இடம்பெற்றுள்ளது.

வாகன உதிரிபாகங்கள் விற்பனைசெய்யும் இரு வர்த்தக நிலையங்களும்

முற்று முழுதாகத் தீக்கிரையாகியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஒரு கோடி ரூபாவுக்கு மேல் சேதங்கள் ஏற்பட்டுள்ள நிலையில் தீ ஏற்பட்டதற்கான காரணம் இதுவரைக் கண்டுபிடிக்கப்படவில்லை என்றும் பொலிஸார் தெரிவித்தனர். (ரி2)

# எவரின் உதவியும் பெறாது ஆட்சி அமைப்பார் மகிந்த

## அடித்துக் கூறுகிறார் வாசுதேவ



கொழும்பு.ஓக.14

முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்சவுக்குத் தற்போது மக்கள் ஆதரவு உண்டு. அதனால் சீனாவின் ஆதரவைக்கொண்டு ஆட்சியைக் கைப்பற்ற வேண்டிய அவசியம் எமக்கு இல்லை. இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

விடயம் தொடர்பில் அவர் தெரிவித்ததாவது.

ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்த 2015 ஆம் ஆண்டு தேசிய அரசு அமெரிக்காவை நாடியதைப் போன்று நாங்கள் கடந்த வாரம் ஆரம்பித்த அரசைக் கவிழ்க்கும் போராட்டத்துக்கு சீனாவை நாடவில்லை.

சீனா எமது நாட்டு உள்ளக அரசியல் விவகாரங்களில் தலையிடவில்லை சீனாவின் ஆதரவைக் கொண்டு தான் மீண்டும் ஆட்சியைக் கைப்பற்ற வேண்டிய அவசியம் எமக்கு இல்லை ஏனெனில் மக்கள் ஆதரவு தற்போது மகிந்த பக்கமே.

தொடருந்துத் தொழிற்சங்கங்கள் மேற்கொண்டு வந்த போராட்டத்தின் பின்னணியில் மகிந்த ராஜபக்ச, நாமல் ராஜபக்ச, பசில் ராஜபக்ச ஆகியோரே காணப்படுகின்றனர் என்று பிரதியமைச்சர் ரஞ்சன் ராமநாயக்க குறிப்பிட்டுள்ளமை அரசின் இயலாமையை வெளிப்படுத்தியுள்ளது. இந்த விடயத்துக்கும் மகிந்தவின் குடும்பத்துக்கும் தொடர்பு உண்டு என்ற விடயத்தை இவரால் ஆதார பூர்வமாக நிரூபிக்க முடியுமா?

பொய்யான கருத்துக்களைக் குறிப்பட்டு மக்களைச் சொற்ப நேரத்திற்கு அரசியல் ரீதியில் திசை திருப்பி விட இதுவொன்றும் மூன்று மணிநேரத் திரைப்படமல்ல என்ற விடயத்தை இவர் புரிந்து கொள்ள வேண்டும் - என்றார். (ரி2)

## மிகப் பலவீனமான ஆட்சியாளர் மைத்திரி

### இப்படிச் சொல்கிறார் வீரவன்ச

கொழும்பு.ஓக.14



ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் அநுராதபுரத்தை ஆட்சி செய்த 5 ஆம் மகிந்தனைப் போன்று. அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவும் பலவீனமான ஆட்சியாளர். இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார்.

பத்தரமுல்லை நகரசபை மண்டபத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற கருத்தரங்கு ஒன்றில் உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் தெரிவித்ததாவது.

கடந்த மூன்று ஆண்டுகள் என்பது நாடு அதளபாதாளத்துக்குக் கொண்டு செல்லப்பட்ட ஆண்டுகள். இவ்வாறான நிலையில், தான் நாட்டை ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் இருந்த நிலைமைக்குக் கொண்டு செல்லப் போவதாக அரச தலைவர் கூறுகிறார்.

அவர் கூறியது சரியானது. ஆயிரம் ஆண்டுகள் பின் நோக்கி அவர் நாட்டை இட்டுச் சென்று கொண்டிருக்கின்றார். கி.பி 1018 ஆம் ஆண்டில் ராஜராஜன் என்ற சோழ மன்னன் நாட்டைக் கைப்பற்றினான்.

அப்போது மைத்திரிபால சிறிசேனவைப் போன்ற பலவீனமான மன்னன் ஆட்சி செய்தான். கி.பி 1017 ஆம் ஆண்டில் 5 ஆவது மகிந்தன் அநுராதபுரத்தை ஆட்சி செய்தான். அவன் அநுராதபுரத்தை ஆட்சி செய்த அரசர்களில் மிகவும் தோல்வியான அரசன்.

அவன் நாட்டு மக்கள் மீது அதிகளவில் வரிகளை விதித்தான். இறுதியில் மக்கள் வரி செலுத்துவதை நிறுத்திக் கொண்டனர். இதனால், திறைசேரி காலியானது.

நாட்டின் பொருளாதாரம் வீழ்ச்சியடைந்தது. மக்கள். அரசன் மீது அதிருப்தி கொண்டனர். நாட்டின் பாதுகாப்பு கேள்விக்குறியானது. நாட்டின் இந்த நிலைமையை கண்ட ராஜராஜன் என்ற சோழ மன்னன். 5 ஆம் மகிந்தனை ஆட்சியில் இருந்து விரட்டி விட்டு அநுராதபுரத்தைக் கைப்பற்றினான்.

இன்றும் நவீன 5 ஆம் மகிந்தன். இந்தியா. நாட்டின் அனைத்தையும் கைப்பற்றிக் கொள்ளும் சூழ்நிலையை ஏற்படுத்தியுள்ளார்.

மத்தல வானூர்தித் தளம். காங்சேன்துறைத் துறைமுகம். பலாலி வானூர்தித் தளம். திருகோணமலைத் துறைமுகம், கொழும்புத் துறைமுகத்தின் கிழக்கு முனையம் போன்ற அனைத்தையும் புரோக்கரும். ஜோக்கரும் இணைந்து இந்தியாவுக்கு வழங்கத் தயாராகி வருகின்றனர்.

சிகிரியக் குன்றை இந்தியாவுக்கு வழங்கி முன்னேற்றப் போவதாகப் புரோக்கர் தலைமை அமைச்சர் கூறுகிறார். அவருக்கு அருகில் செல்ல வேண்டாம் உங்களையும் இந்தியாவுக்கு விற்று விடுவார். எல்லாவற்றையும் இந்தியாவுக்கு வழங்கிய பின்னர், எதிர்காலத்தில் துட்டகைமுனு மன்னன் பிறந்து வந்தாலும் நாட்டைக் காப்பாற்ற முடியாதுஎன்றார். (ரி2)

## உரிமைகள் கிடைத்தால் மட்டுமே நாட்டின் மீது ஆதரவு மேலோங்கும்

கொழும்பு, ஓக.14

இந்த நாட்டில் உள்ள அனைத்து மக்களும் வேறுபாடு அற்ற வகையில் சகல உரிமைகளையும் அனுபவிக்கும் பட்சத்தில் தாய் நாட்டின் மீதான ஆதரவும், அபிமானமும் மேலோங்கும். இவ்வாறு அமைச்சர் கயந்த கருணாதிலக தெரிவித்தார்.

இந்திய அரசின் நிதி உதவியின் ஊடாகப் பூண்டுலோயா டன்சினன் தோட்டத்தில் அமைக்கப்பட்டுள்ள மகாத்மா காந்திபுரம் கிராமத்தைப் பயனாளிகளுக்குக் கையளிக்கும் நிகழ்வில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் தெரிவித்ததாவது,

இன ஐக்கியத்தோடும், உரிமைகளைப் பெற்றவர்களாகவும் வாழக் கூடிய இலங்கையாகளை உருவாக்க வேண்டும் என்பதே தலைமை அமைச்சரின் கொள்கையாகும்.

150 வருடங்களுக்கு மேலாக இந்த நாட்டில் மலையகப் பிரதேசங்களில் வாழும் தொழிலாளர்கள், அவர்களின் மூதாதையர்களும், நீங்களும் இந்த மண்ணோடு போராடி மண்ணுக்கும் நாட்டுக்கும் தேயிலையின் ஊடாகப் பெருமையைச் சேர்த்துள்ளீர்கள்.

இங்குள்ள தலைவர்கள் பலர் குடியுரிமை பற்றி அவ்வப்போது பேசுவார்கள். ஆனால் காணியும், வீட்டு உரிமையும் கிடைத்திருக்கும் இந்த நாளே குடியுரிமை கிடைத்த நாளாக நான் கருதுகின்றேன்.

பெருந்தோட்ட மக்கள் எத்தனையோ தேயிலை மரங்களை உருவாக்கி மரங்களை நடுகை செய்து இலட்சக்கணக்கான கிலோ கொழுந்தைக் கொய்து கொடுத்திருந்தாலும் அவர்களுக்கு இந்த அரசு வழங்கியுள்ள காணி உரிமையில் இந்திய அரசின் நிதி உதவியுடன் வழங்கியுள்ள வீட்டு உரிமையின் ஊடாக அவர்களின் வீட்டுக்கு அருகில் ஒரு மரம் நடும் உரிமை இன்று தான் கிடைத்துள்ளது.

வீடுகளுக்கும், காணிகளுக்கும் உறுதிப் பத்திரம் வழங்கப்பட்டுள்ளதால் எதிர்காலத்தில் இந்த வீடுகளைப் பெரிதாக்கலாம். வியாபார நிலையங்களை உருவாக்கலாம், தொழில் ஒன்று பெற்றுக்கொள்ளும் இடமாகவும் மாற்றலாம். இவ்வாறு சுதந்திரமாக செயல்படுவதற்குத் தலைமை அமைச்சர் ரணிலின் வேண்டுகோளுக்கமைவாக காணி உறுதி பத்திரமும் வழங்கப்படும்என்றார். (ரி2)

## புதிய உப தலைவர் சமரசிங்க தலைமையில் கூடியது சம்மேளனம்

கொழும்பு. ஓக.14

இலங்கை சுதந்திர அரச தொழிற்சங்க சம்மேளனத்துடன் தொடர்புடைய தொழிற்சங்கப் பிரதிநிதிகளுடனான கூட்டம் கடந்த வெள்ளிக் கிழமை இடம்பெற்றது.

அரச தொழிற்சங்க சம்மேளனத்தின் புதிய உப தலைவர், அமைச்சர் மகிந்த சமரசிங்க தலைமையில், அமைச்சின் கேட்போர் கூடத்தில் இந்தக் கூட்டம் நடைப்பெற்றது.

கூட்டத்தின்போது எதிர்காலத்தில் முன்னெடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள், தற்போதுள்ள தொழிற்சங்கங்கள் எதிர்கொள்கின்ற பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பாக இதன்போது கலந்துரையாடப்பட்டது.

சிறிலங்கா சுதந்திரக் கட்சி தொழிற்சங்கத்தின் பிரதான செயலர் டப்பிள்யு. ரோய் த மெல், மூத்த உப தலைவர் டி.ஏ.எஸ்.அபேவீர மற்றும் பன்னாட்டு விடயங்கள் தொடர்பான செயலர் கலாநிதி எரிக்ஜயலத் உள்ளடங்கலான தொழிற்சங்கப் பிரதிநிதிகள் பலர் இக் கூட்டத்தில் கலந்துக்கொண்டார்கள்.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியுடன் இணைந்த இலங்கை சுதந்திர அரச தொழிற்சங்க சம்மேளனத்தின் புதிய உப தலைவராக சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் உபதலைவர், துறைமுகங்கள் மற்றும் கப்பல் துறை அமைச்சர் மகிந்த சமரசிங்க நியமிக்கப்பட்டார். கடந்த மாதம் 12 ஆம் திகதி கூடிய மத்திய குழுக் கூட்டத்தின்போதே, அமைச்சர் ஏகமனதாக நியமிக்கப்பட்டார். (ரி2)



# வீண் செலவு செய்வதில் கூட்டரசு ஈடுபடுகிறதா?

## அஜித் எம்.பி. விளக்கம்

கொழும்பு, ஓக. 14
அரசு வீண்செலவுகளைச் செய்வதால்தான் பொருளாதார நெருக்கடிஏற்பட்டுள்ளதாகமக்கள்விடுதலைமுன்னணியினர்தெரிவிக்கும்குற்றச்சாட்டானது உண்மைக்குப்புறம்பானது என்று நாடாளுமன்ற உறுப்பினர் அஜித் பி.பெரேரா தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில்அவர்செய்தியாளர்களிடம்மேலும்தெரிவித்ததாவது:

கூட்டரசின் இரண்டு தலைவர்களும் செலவீனங்களைக் குறைத்தேநிர்வாகத்தைமுன்னெடுக்கின்றனர். அரசதலைவர் மைத்திரிபால சிறிசேன ஒரு குடும்பத்தை நிர்வகிக்கும் தலைவரைப்போன்றேநாட்டின்நிர்வாகத்தைமேற்கொள்கின்றார்.

குறிப்பாக அரசதலைவர் உத்தியோகபூர்வ வெளிநாட்டுப் பயணங்களின்போது பிரத்தியேகமான விமானங்களில் பயணிப்பதில்லை. பொதுமக்கள்பயன்படுத்தும்விமானங்களில் மக்களோடு மக்களாகப் பயணிக்கின்றார்.

அதுமட்டுமன்றி, கடந்த மூன்று வருடங்களாக அரசு எவ்விதமான விளம்பரங்களுமின்றி மக்களுக்குப் பெருமளவில் அபிவிருத்திப் பணிகளை மேற்கொண்டுள்ளது என்பதை மக்கள் விடுதலை முன்னணியினர் கவனத்திற் கொள்ள வேண்டும் - என்றார். (4)

# முடியாது என்ற பந்தியை நீக்கிவிட்டு மகிந்தவை அரசதலைவராக்குவோம்

## குமாரவெல்கம எம்.பி. இப்படிக் கூறுகிறார்



*கொழும்பு, ஓக. 14*
*அரசியலமைப்பின் 19ஆவது திருத்த வரைவில், அரசதலைவராக 3ஆவது முறையாகப் போட்டியிட முடியாது என்ற பந்தியை நீக்க நடவடிக்கை எடுத்து, மகிந்த ராஜபக்சவை மீண்டும் அரசதலைவர் பதவிக்குக் கொண்டுவரும் முனைப்புகளை மேற்கொண்டு வருகிறோம்.*

இவ்வாறுகூட்டுஎதிர்க்கட்சியின்நாடாளுமன்ற உறுப்பினர் குமார வெல்கம தெரிவித்துள்ளார்.

இதுகுறித்துசெய்தியாளர்களிடம்அவர் கருத்துத் தெரிவிக்கையில் மேலும் கூறியதாவது:

முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்சவை விட, பசில் ராஜபக்சவேஅரசியலுக்குமிகவும்தகுதியான நபர்.

கூட்டு எதிர்க்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் என்ற வகையில் நெஞ்சை நிமிர்த்தி நிற்கும் நிலைமையைஉருவாக்கியவர்பசில்ராஜபக்சதான். தற்போது சிறிலங்கா மக்கள் முன்னணியின் வெற்றிக்கும் காரணம் பசில் ராஜபக்சதான் என்றும் அவர் கூறியுள்ளார்.

**கோத்தா சரிவரார்**

கோத்தபாய ராஜபக்ச அரசதலைவர் வேட்பாளராகப்போட்டியிடுவதையோ, நாட்டின் தலைமைத்துவத்துக்கு வருவதையோ நான் ஏற்றுக்கொள்ளவில்லை.

முன்னாள் பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ச எனது உறவினர் என்றபோதிலும்ஜனநாயகத்தின்மீது நம்பிக்கை கொண்டவன் என்ற வகையில், கோத்தா அரசதலைவர் பதவிக்கு வருவதை நான் விரும்பவில்லை.

எவ்வாறாயினும் ஏற்றுக்கொள்ளக் கூடியஜனநாயகவேட்பாளரைப்பெயரிடுவதுமகிந்தராஜபக்சவின்பொறுப்பு. அப்படியான தலைவருக்கு அதிக பட்ச ஒத்துழைப்பை வழங்கத் தயாராக இருக்கிறேன் - என்று அவர் மேலும் கூறினார். (4)

# கூட்டு எதிர்க்கட்சியினர் தமக்குள் வெட்கமின்றி அடிபடுகின்றனர்

## அமைச்சர் மகிந்த அமரவீர கிண்டல்

கொழும்பு, ஓக. 14
தலைமை அமைச்சர் பதவியைப் பெற்றுக்கொள்ளப்போவதாகக் கூறிவந்தவர்கள் தற்போது வெட்கமில்லாமல் எதிர்க்கட்சித் தலைவர் பதவிக்கு அடிபிடிப்படும் நிலைமைக்குச் சென்றுள்ளனர் என்று அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்தார்.

கம்பாந்தோட்டையில்நேற்றுமுன்தினம்இடம்பெற்றகூட்டம் ஒன்றில் உரையாற்றும் போதே அவர் இதனைக் கூறியுள்ளார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

கூட்டு எதிர்க்கட்சியில் இருப்பவர்கள் எதிர்க்கட்சித் தலைவர் பதவிக்காகத் தற்போது ஒருவரோடு ஒருவர் மோதிக்கொள்கின்றனர். அதேபோல், கூட்டு எதிர்க்கட்சி குற்றம் சுமத்தும் வகையில்தேசியவளங்கள்எதனையும்தற்போதையஅரசு பன்னாடுகளுக்கு விற்பனை செய்யவில்லை. எமது தரப்பினர் அரசில் அங்கம் வகிக்கும்வரை அதற்கு இடமளிக்கப்பட மாட்டாது.

நாட்டின் ஏற்றுமதி வீழ்ச்சியடைந்துள்ளதாகக் குற்றஞ்சுமத்துகின்றனர். ஆனால், இலங்கையின் வரலாற்றில் கடந்த வருடம்தான் அதிகளவில்ஏற்றுமதிநடைபெற்றுள்ளது. இந்த வருடம் நாட்டின் ஏற்றுமதியைக் கடந்த வருடத்தைவிட அதிகரிக்க அரசு எதிர்பார்த்துள்ளது என்று மகிந்த அமரவீர மேலும் தெரிவித்தார். (4)

# தொடருந்து பணிப்புறக்கணிப்பால் இ.போ.சவுக்கு ஒரு கோடி நட்டம்

கொழும்பு, ஓக. 14
பணிப் புறக்கணிப்பால் தொடருந்துத் திணைக்களத்துக்கு மாத்திரமன்றி இலங்கைப் போக்குவரத்துச் சபைக்கும் இழப்பு ஏற்பட்டுள்ளது. இவ்வாறு சுமார் ஒரு கோடி ரூபா இழப்பு ஏற்பட்டுள்ளது என்று இலங்கைப் போக்குவரத்துச் சபையின் தலைவர் ரமால் சிறிவர்தன தெரிவித்துள்ளார்.

தொடருந்து ஊழியர்களின் பணிப் புறக்கணிப்பு இடம்பெற்ற நாள்களில் பணச் சீட்டைகள் (பருவகாலச் சீட்டைகள்) கொண்ட ரயில் பயணிகள், இலங்கை போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பேருந்துகளில் இலவசமாகப் பயணித்தனர். நாள் ஒன்றுக்கு 80 ஆயிரம் கிலோ மீற்றருக்கும் அதிகமாகத் தூரத்துக்கு இலங்கைப் போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பேருந்துகள் பயணிக்க நேரிட்டன. அதனால் இந்த இழப்பு ஏற்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

தொடருந்து ஊழியர்கள் பொறுப்பற்ற வகையில், திடீரென தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபட்டமையால் இலட்சக்கணக்கான பயணிகள் பெரிதும் பாதிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. கடந்த நான்கு நாள்களாகத் தொடருந்து ஊழியர்கள் தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபட்டனர். அரசதலைவரின் வாக்குறுதியையடுத்து நேற்றுமுன்தினம் போராட்டத்தைக் கைவிட்டுப் பணிக்குத் திரும்பியமை குறிப்பிடத்தக்கது. (4)

# கடற்கரையில் ஒதுங்கும் காலாவதியான மருந்துகள்

கொழும்பு, ஓக. 14
காலாவதியான ஆயிரக்கணக்கான மருந்து வகைகள் புத்தளம் கடற்கரையில்கரையொதுங்கியுள்ளதாகக்கூறப்படுகிறது.


மருந்துகள்போத்தல்களிலும், பொலித்தீன் பொதிகளாகவும் பொதியிடப்பட்டுள்ளன. அவைஅனைத்தும்இந்தியாவில் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது அவற்றின் மேலுறைகள் காட்டுகின்றன. இந்த மருந்துகளை இந்தியா கவனவீனமாகக் கடலில் வீசியெறிந்த மருந்துகளாக இருக்கலாம் என்று இந்தியா ருடே என்ற பத்திரிகை குறிப்பிடுகிறது. இந்த மருந்துகளின் தாக்கம் கடல்வாழ்உயிரினங்களைப்பாதிக்கக் கூடும் என்று புத்தளம் பகுதியிலுள்ள மீனவர்கள்கருதுகின்றனர். அதனால் தங்களின் வாழ்வாதாரம் பறிபோகும் சாத்தியங்களும் ஏற்படலாமென்று மீனவர்கள்கவலைகொண்டுள்ளனர் என்று அறியமுடிகிறது.

எப்படி இந்த மருந்துகள் இலங்கைக் கடற்கரையில் ஒதுங்கின என்று ஆராயவுள்ளதாக நீர்வள அதிகாரிகள் தெரிவித்துள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது. (4)

# சிறைச்சாலைக்குள் இனி சிறப்புப் பொலிஸ் பிரிவு

சிறப்புப்பொலிஸ்பிரிவொன்றைச்சிறைச்சாலைக்குள் அமைக்கநீதிமற்றும்சிறைச்சாலைகள்மறுசீரமைப்பு அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது. கலைக்கப்பட்ட சிறைச்சாலைப்புலனாய்வுமற்றும்பாதுகாப்புப்பிரிவுக்குப்பதிலாக இந்தப்பிரிவு இருக்கும்என்று தெரிவிக்கப்பட்டது. திறமையான மற்றும் ஒழுக்கமுடைய, ஊழல் குற்றச்சாட்டுக்களுடன்தொடர்புபடாத இளம்அதிகாரிகளைக் கொண்டு இந்தப் புதிய பொலிஸ் பிரிவு அமையவுள்ளது. நீதி மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சர் தலதா அத்துக்கோரளவின் ஆலோசனைகளுக்கு அமைய இந்தப்பிரிவு ஆரம்பிக்கப்படவுள்ளது என்று மேலும் தெரிவிக்கப்படுகிறது.

சிறைச்சாலைகளுக்குள் அமைக்கப்பட்டிருந்த புலனாய்வுப் பிரிவைக் கலைப்பதற்கு நீதி மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சு அண்மையில் நடவடிக்கைகளை முன்னெடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (4)




# முகாமில் வீணை வாசித்ததால் 3 சிப்பாய்கள் மருத்துவமனையில்

இராணுவ வீரர்கள் இருவருக்கிடையில் ஏற்பட்ட போத்தல் தாக்குதலில் மூன்று இராணுவ விரர்கள் காயமடைந்தனர். அவர்கள் தியத்தலாவ அரச மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

தியத்தலாவை இராணுவ முகாமில் தாக்குதல் நேற்றுமுன்தினமிரவு இடம்பெற்றுள்ளது.

நித்திரை வேளையில், இராணுவச் சிப்பாய் ஒருவர் வீணைவாசித்துக்கொண்டிருந்தார் என்றும் அதனைநிறுத்தும்படி பிறிதொரு இராணுவசிப்பாய் கூறினார் என்றும் அது தொடர்பாக ஏற்பட்ட தர்க்கமே மோதலாகியது. பிறிதொரு இராணுவச்சிப்பாய் இந்தமோதலைத்தடுக்க முற்பட்டபோது மூவரும் காயங்களுக்குள்ளாகினர் என்றும் ஆரம்ப விசாரணைகளில் தெரிய வந்துள்ளது. (4)

# சிறைச்சாலை கூரைமேல் ஏறி பெண் கைதிகள் போராட்டம்

கொழும்பு, ஓக. 14
வெலிக்கடைச்சிறைச்சாலையில்கைதிகளாக உள்ள 10 பெண்கள் சிறைச்சாலைக் கூரை மேல் ஏறிநின்று போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

தாங்கள்சிறையில்அடைக்கப்பட்டுபல மாதங்கள் கடந்துவிட்டன. தங்களுக்கு எதிராகக் குற்றச்சாட்டுக்களை விசாரிப்பதற்கான நடவடிக்கைகள் எதையும் நீதிமன்றம் எடுக்கவில்லை.

அந்த விசாரணைகளைத் துரிதப்படுத்துமாறு கோரியே நேற்றுமுன்தினம் தொடக்கம் அவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது.

இந்த 10 சிறைக்கைதிகளும் சிறைச்சாலைக் கூரைமேல் ஏறி அங்கிருந்தவாறு அவர்கள் இந்தக்கோரிக்கையைவிடுத்துள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது. (4)

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

# நல்லிணக்கமா நலிந்த இணக்கமா?

ஆட்சியில் உள்ள தலைவர்களால் வடக்கு கிழக்கில் நல்லிணக்கம் என்கிற பெயரில் முன்னெடுக்கப்பட்ட அபிவிருத்தித் திட்டங்களின் தற்போதைய நிலைமை பிணக்குகளின் கூடாரம் என்பதுதான். அதாவது நல்லிணக்கம் நலிந்த இணக்கமாக மாறிவிட்டது.

அரசதலைவர் மைத்திரிபால சிறிசேனவசம் இருந்தது தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்க அமைச்சு. அதேசாரப்பட மற்றொரு அமைச்சர் தேசிய ஒருமைப்பாடு மும்மொழிகள் அமைச்சு என்கிற பெயரில் அமைச்சர் மனோ கணேசன் வசமும் இருந்தது. அண்மையில் இடம்பெற்ற அமைச்சரவை மாற்றத்தின்போது இந்த இரு அமைச்சுக்களையும் ஒன்றாக்கி அதனை மனோ கணேசனின் கைகளில் கொடுத்துவிட்டார்கள். அதன் பின்னர்தான் ஆரம்பித்தது பிரச்சினை.

தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்க அமைச்சுக்கு ஆயிரத்து 750 மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டிருந்தது. அமைச்சு மாற்றம் இடம்பெறும் வரை இந்த அமைச்சு அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவின் வசம் இருந்ததால் எந்தப் பிரச்சினைகளும் இல்லாமல் வடக்கு, கிழக்கில் பல திட்டங்கள் இந்த அமைச்சின் கீழ் தொடங்கப்பட்டன. அவ்வாறு தொடங்கப்பட்ட திட்டங்களின் பெறுமதி கடந்த ஜூன் மாதம் வரையில் சுமார் ஆயிரத்து 250 மில்லியன் ரூபாய்.

ஜூன் மாதத்தில் அமைச்சு மாற்றம் இடம்பெற்று அமைச்சர் மனோ கணேசனிக் கட்டுப்பாட்டின் கீழ் இந்த அமைச்சு வந்தபோது, ஏற்கனவே தொடங்கப்பட்ட திட்டங்களுக்கான நிதி தேவைகளைக் கவனத்தில் கொண்டு ஆயிரம் மில்லியன் ரூபாயை இதே அமைச்சின் ராஜாங்க அமைச்சரான ஏ.எச்.எம். பௌசியும் 750 மில்லியன் ரூபாயை மனோ கணேசனும் கையாளலாம் என்று அரசதலைவர் பிரித்தொதுக்கினார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

அமைச்சர் மனோ கணேசனோ தனக்கு ஒதுக்கப்பட்ட 750 மில்லியன் ரூபாய் நிதியில் தான் புதிய திட்டங்களுக்குத்தான் நிதி ஒதுக்குவேனே தவிர ஏற்கனவே தொடங்கப்பட்ட திட்டங்களுக்கு எந்த நிதியும் தரமாட்டேன் என்று அடம் பிடிக்கிறார். ஆனால் ஏற்கனவே ஆயிரத்து 750 மில்லியன் ரூபாய்க்கான திட்டங்கள் தொடங்கப்பட்ட நிலையில், அமைச்சர் பௌசிக்கு என ஒதுக்கப்பட்ட ஆயிரம் மில்லியன் ரூபாய்களை முழுமையாகச் செலவிட்டால்கூட போதாது. அமைச்சர் மனோவின் ஒதுக்கீட்டில் இருந்து 250 மில்லியன் ரூபாய் விடுவிக்கப்பட வேண்டும். அதற்கு அடியோடு மறுக்கிறார் அவர்.

மறுபுறத்தில் அமைச்சர் பௌசியோ தனக்கு ஒதுக்கப்பட்ட நிதியில் தானும் சில புதிய திட்டங்களை, குறிப்பாகக் கிழக்கில் தொடங்க வேண்டும் என்று விரும்புகிறார். அதற்கு அவருக்குப் பணம் வேண்டும். எனவே அவர் வசம் இருக்கும் ஆயிரம் ரூபாய் நிதியில் மேற்கொள்ளப்பட வேண்டிய கொடுப்பனவுகளைக்கூடச் செய்யாமல் காலத்தைத் தாழ்த்தி வருகின்றார் அவர்.

ஏற்கனவே ஆயிரத்து 250 மில்லியன் ரூபாய் நிதிக்கான திட்டங்கள் தொடங்கப்பட்டுவிட்டதால் எஞ்சிய 500 மில்லியன் ரூபாய் நிதியை ஆளுக்கு அரைவாசியாகப் பிரித்து புதிய திட்டங்களைச் செயற்படுத்த வேண்டும் என்பது அமைச்சர் பௌசியின் எதிர்பார்ப்பு. ஆனால், இதற்கு இணக்கிப்போக அமைச்சர் மனோ கணேசன் தயாராக இல்லை. அமைச்சர்களின் இந்தப் பிரச்சினையில் ஏற்கனவே செய்யப்பட்ட வேலைகளுக்கும் கொடுப்பனவுகளை மேற்கொள்ள முடியாமல் அதிகாரிகளோ திணறிப்போய் நிற்கிறார்கள். எந்த அமைச்சரைக் கேட்டாலும் நிதியை வழங்க மறுக்கும் நிலையில் திறைசேரியை நாடினால் அங்கிருந்தும் பதில் இல்லை என்பதுதான் இன்றைய நிலை.

தொடங்கப்பட்ட ஆயிரத்து 250 மில்லியன் ரூபாய் திட்டங்களில் 611 மில்லியன் ரூபாய் திட்டங்கள் யாழ்ப்பாணத்திலேயே மேற்கொள்ளப்பட்டன என்பதால் இந்த மாவட்டம் தான் அதிகம் பாதிப்படைந்துள்ளது. இந்தத் திட்டங்களுக்குரிய 266 மில்லியன் ரூபாய் நிதி கிடைக்கவேண்டியிருக்கிறது. அதைத் தருவதற்கு அமைச்சர்கள் இருவரும் ஆளையாள் மாறிமாறிக் கைகாட்டி வருவதால் திட்டங்கள் இடைநடுவில் நிற்கும் நிலை ஏற்பட்டுள்ளது.

நல்லிணக்கத்தின் பேரால் வந்த அபிவிருத்தித் திட்டங்களுக்கே இந்த நிலை என்றால், நல்லிணக்கத்தின் நிலை எப்படியிருக்கும்? மக்களே தீர்மானித்துக்கொள்ளுங்கள்.





தமிழ்த் தலைவன் மு.கருணாநிதி - 06

# உயிர் தமிழுக்கு! உடல் மண்ணுக்கு...

தேவநாயகம் தேவானந்த்

திராவிடமுன்னேற்றக்கழகம் 'திராவிடஸ்தான்' பிரிவினை கோரிக்கையுடன் இந்தித் திணிப்பு எதிர்ப்பையும் தனது போராட்டங்களாக முன்னிலைப்படுத்தியது. பின்னர் அந்தபிரிவினைக் கோரிக்கையைக் கைவிட்டது. 1963ஆம் ஆண்டு இந்திய சீனப் போர் நடைபெற்றபோது. அரசமைப்பின் 16வது திருத்தம் கொண்டுவரப்பட்டது. அதன்படி பிரிவினை தடுப்புச்சட்டம் கொண்டு வரப்பட்டது. இந்தப் பின்னணியில் தி.மு.க தனது திராவிடஸ்தான் பிரிவினைக் கோரிக்கையைக் கைவிட்டது.

இருப்பினும் தனது ஹிந்தித் திணிப்பு எதிர்ப்பு நிலைப்பாட்டைத் தொடர்ந்தது. இருபது ஆண்டுகளுக்கு மேலாக தீவிரமாகப் பேணிவந்தது. 1963ஆம்ஆண்டு அலுவல்மொழிச் சட்டம் நிறைவேற்றப்பட்டபோது. இந்த எதிர்ப்பு மேலும் வலுவடைந்தது. பெரும்பான்மையினரால் பேசப்படும் மொழியே அரச மொழியாக வேண்டும் என்று அப்போது வாதிடப்பட்டது. இந்திய நாடாளுமன்றத்தில் கடுமையான விவாதங்கள் நடைபெற்றன. சி.என். அண்ணாத்துரை சுவையான, தீர்க்கமான விவாதங்களை முன்வைத்தார்.. இந்தி பெரும்பான்மையினரால் பேசப்படுகிறது என்ற காரணத்துக்காக அந்த மொழியை அரச மொழியாக ஏற்றுக்கொள்ள முடியாது என்று வாதிட்டார். அப்போது இந்தியத் தேசியப்பறவையாக மயில் அறிவிக்கப்பட்டிருந்தது. பெரும்பான்மை என்ற கூற்றுக்கு அண்ணாத்துரை பதிலுரைத்தார். "எண்ணிக்கைகளால் முடிவுகள் எடுக்கப்படுமானால். இந்தியாவின் தேசியப் பறவை மயிலாக இருக்காது. காகமாகத்தான் இருக்கும்" என்றார்.



## ஹிந்திமொழித் திணிப்புக்கு எதிரான போராட்டங்கள் தீவிரமடைந்தன

ஒரு இனத்தின் மொழியில் முதலில் கை வைத்து, அதை வீழ்த்திவிட்டு, அதற்குப் பிறகு அந்த மொழிக்குரியவர்களை, அந்தமொழியால் உயர்ந்தவர்களை, அந்தமொழியால் தங்களை வருத்திக் கொண்டவர்களை வீழ்த்திவிட கொஞ்சம் கொஞ்சமாக, சிறிதுசிறிதாக சூழ்ச்சிவலை பின்னப்படுகிறது என்பதை அண்ணா உணர்ந்தார் .அதனால், மொழிப் போராட்டத்தைத் தீவிரப்படுத்தி னார். தமிழ்ப் பண்பாட்டிலே ஆரியம் புகுந்து அதனைச் சிதைத்ததுபோல, மொழியில் ஆரியச்சொற்கள் அதிகம் இடைச்செருகப்பட்டன என்று கருதிய, தி.மு.கவினர். தமிழ் மொழியையும் தமிழ்ப் பண்பாட்டையும் கண்டறிந்து பேணிப்பாதுகாக்க முயன்றனர். தமிழ்மொழியில் சமஸ்கிருதம் மூலம் ஹிந்தியைத் திணிப்பதாகத் தமிழகத் தலைவர்கள் கருதினர்.

ஹிந்தித் திணிப்புஎதிர்ப்பு இயக்கத்தினர், தமிழ் மீது ஹிந்திமற்றும் சமஸ்கிருத திணிப்பை மேற்கொள்ள பிராமணர்களே முயற்சி செய்வதாக எண்ணினார்கள். பாடப் புத்தகங்களில் சமஸ்கிருத மொழிச்சொற்கள் அதிகளவில் பயன்படுத்தப்பட்டன. மொழிப்போராட்டக்காரர்கள், பிராமணர் நிரம்பிய தமிழ்நாடுகாங்கிரஸ்கட்சியினரை வடநாட்டு ஹிந்தி ஆதிக்கவாதிகளின் கைக் கூலிகள் என்றனர்.

## ஹிந்திமொழித் திணிப்புக்கு எதிராக தி.மு.கவினருடன் பெரியாரும் தீவிரமாகச் செயற்பட்டார்

ஹிந்தித் திணிப்புஎதிர்ப்பு உணர்வைத் திராவிடர் கழகமும் பெரியாரும் உயிரூட்டிவந்தனர். அரசு ஹிந்திக்கல்வியைக் கட்டாய பாடமாக்கத் துணியும்போதெல்லாம், ஹிந்தித் திணிப்பு எதிர்ப்புபோராட்டங்கள் நடத்தி அதனைத் தடுப்பதில் வெற்றி கண்டனர். பின்னர் ஹிந்திப் பாடம் 1950/51 கல்வியாண்டிலிருந்து விருப்பப் பாடமாகமாற்றி அமைக்கப்பட்டது.

இந்திய அரசமைப்புநிர்ணய மன்றம் விடுதலைபெற்ற இந்தியாவின் அரசமைப்புச் சட்டத்தை உருவாக்கும் நோக்கத்துடன் அமைக்கப்பட்டது. மொழிகள் குறித்த விவாதம் இம்மன்றத்தில் தீவிரமாக நடைபெற்றன. அரசமைப்பை எந்தமொழியில் எழுதுவது, மன்றத்தின் நடவடிக்கைகள் நடத்தப்பட வேண்டியமொழி, புதிய குடியரசுக்கான 'தேசியமொழி' போன்ற விடயங்கள் மிகவும் சூடாக விவாதிக்கப்பட்டன. ஹிந்திமொழி எதிர்ப்பாளர்கள், ஆங்கிலமே அரச மொழியாக நீடிக்க வேண்டுமென்று வாதிட்டனர். அப்போது ஒன்றுபட்ட இந்தியா வேண்டுமா? இந்தி இந்தியா வேண்டுமா? என்ற கோஷங்கள் முன்வைக்கப்பட்டன. அப்போது 'இந்திஆதரவாளர்களுக்கு எவ்வாறு ஆங்கிலம் அந்நிய மொழியோ, அதேயளவில் இந்தி பேசாதவர்களுக்கு இந்தியும் அந்நிய மொழியே எனப் பரப்புரை செய்தார்கள். இதேகால கட்டங்களில் இலங்கையில் தனிச்சிங்களச் சட்டம் கொண்டுவரப்பட்டபோது; ஒருமொழி, இரு நாடு; இரு மொழிஒரு நாடு, என்ற கருத்தை இடதுசாரிகள் முன்வைத்தமை நினைவுக்கு வருகின்றது.

## டால்மியாபுரப் போராட்டத்தில் கருணாநிதி தீவிரமாகச் செயற்பட்டார்

திராவிட முன்னேற்றக் கழகம் இந்தித் திணிப்பு எதிர்ப்புக் கொள்கையை தொடர்ந்துவரித்துக் கொண்டது. தி.மு.கவினர் 1953ஆம் ஆண்டு 'டால்மியாபுரம்' என்ற ஊரின் பெயரைத் தமிழில் 'கல்லக்குடி' என்று மாற்ற வேண்டும் என்று போராட்டம் நடத்தினர். 'டால்மியாபுரம்' என்னும் பெயர் தென்னாட்டின் மீது வட இந்தியா செலுத்தும் ஆதிக்கத்தை நினைவுபடுத்துவதாக அவர்கள் கூறினர். மு. கருணாநிதியும் பிற திமுக தொண்டர்களும் டால்மியாபுரம் தொடருந்து நிலையப் பெயர்ப்பலகையில் இருந்த இந்தி எழுத்துக்களை அழித்து தொடருந்துப் பாதையில் படுத்து வண்டிப் போக்குவரத்தைத் தடுத்தனர். அப்போது காவலர்களுடன் நடந்த கைகலப்பில் இருவர் மரணமடைந்தனர். கருணாநிதி உட்பட ஏனையவர்கள் கைதுசெய்யப்பட்டுச் சிறைசென்றனர். அப்போதுதான் 'உயிர் தமிழுக்கு: உடல் மண்ணுக்கு' என்ற கோசம் முனைப்புப் பெற்றது. குடியரசு நாளை துக்க நாளாக அறிவித்து போராட்டங்கள் நடந்தன. கலவரங்கள் நடைபெற்றன. பலர் இறந்தார்கள். அதற்கு 'தமிழ் எங்கள் உயிர்' என்ற உணர்ச்சிமிகு பேச்சுக்கள் காரணமாக அமைந்தன.

(தொடரும்)

# மகிந்த தரப்புப் பரப்புரைச் செயற்பாடுகள் கூட்டு அரசுக்குப் பெரும் சவாலானவை

ஆங்கில மொழி மூலம்-
கலாநிதி எஸ்.டபிள்யூ.பிரேமரத்ன
(டெய்லி நியூஸ்) தமிழில்- ஆனந்த்

**2015** ஆம் ஆண்டில் இடம்பெற்ற அரச தலைவர்தேர்தல் மற்றும் நாடாளு மன்றத் தேர்தல் ஆகியவற்றின் பின்னர் அரசதலைவர் மைத்திரிபால சிறி சேன வின் தலைமையில் இயங்கிய சிறிலங்கா சுதந்திரக் கட்சியும், ரணில் விக்கிரமசிங்க தலைமையில் இயங்கிய ஐக்கிய தேசியக் கட்சியும் இணைந்து கூட்டாட்சி அரசை உருவாக்கின. மகிந்த ராஜபக்சவின் தரப்பை வெற்றிகொண்ட இந்த புதிய கூட்டு அரசின் நிர்வாகத்தில் மக்கள் நிறைய மாற்றங்களை எதிர்பார்த்தனர். நாட்டில் இந்தக் கூட்டு அரசு சனநாயகம், நீதி, நேர்மையுடன் சமத்துவமும் பேணப் படும் வகையில் நிர்வாகத்தை மேற் கொள்ளும் என மக்கள் எதிர்பார்த்தனர். மகிந்த ராஜபக்சவின் எதேச்சாதிகார ஆட் சியில் மக்களின் ஜனநாயக உரிமைகள் நலிவடைந்துபோய் இருந்தன. முடிவில் லாத முரண்பாடுகளைக் கொண்டிருந்த ஐக்கிய தேசியக் கட்சியும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியும் ஒரே திசையில் இணைந்து பயணிக்கக்கூடிய சாத்தியக் கூறுகளை கூட்டு அரசு அடையாளம் காட்டியது.

தேசிய கூட்டு அரசு, நாட்டில் சமாதா னத்தை உருவாக்க சில காத்திரமான நடவடிக்கைகளை மேற்கொண்டது. மகிந்த ராஜபக்சவின் முன்னைய அரசு மக்களின் சில அத்தியாவசிய தேவைக ளைப் பூர்த்தி செய்துள்ளமையை பாராட் டியே ஆக வேண்டும். பாடசாலைகள், மருத்துவமனைகள் போன்றவற்றை புனர்நிர்மாணம் செய்தமை, வீதிகள் புன ரமைப்பு மற்றும் புதிய நெடுந்தெருக்கள், பொருளாதார ரீதியில் விவசாயம் மற்றும் மீன்பிடித் தொழில் போன்றவற்றில் நாட் டில் முன்னேற்றத்தை ஏற்படுத்தியமை மற்றும் புகையிரதப் போக்குவரத்துத் துறையை மகிந்த அரசு மேம்படுத்திய மையையும் ஏற்றுக் கொண்டாகத்தான் வேண்டும். ஆயினும் போருக்குப் பின் னர் சமாதானத்துக்கான நடவடிக்கைகள் மிகமிக மந்த கதியிலேயே இடம்பெற் றன. போரால் பாதிக்கப்பட்ட இரு தரப்பி னர்களதும் இதயங்களின் வேதனைக ளையும் அவர்களுடைய தேவைகளை யும் இனங்காணக் கூட்டு அரசு தவறி விட்டது.

மீளிணைப்பு என்பது ஏற்கனவே பிளவு பட்ட இரண்டு தரப்பினர்களது இதயங் களை, மனங்களை இணைப்பது எனப் பொருள்படும். அரசினதும், இராணுவத் தினரதும் சில நடவடிக்கைகள், சமாதா னத்திற்கு எதிரானவைகளாக மாறிவிட்டி ருந்தன. உதாரணமாக, 2009ஆம் ஆண்டில் தமிழீழ விடுதலைப் புலிக ளைப் போரில் வென்ற பின்னர், அவர்கள் மேற்கொண்ட வெற்றிக் கொண்டாட்டங் கள். சிங்கள இனத்தவர்களை மட்டுமே உள்ளடக்கிய இலங்கையின் சிங்கள இராணுவம் சிங்கள மக்களுக்காகவே தமிழீழ விடுதலைப் புலிகளுக்கெதிராக போர் புரிந்தது என்ற ஒரு சமிக்ஞையைத் தமிழ் மக்கள் மனதில் பதியச் செய்துவிட் டிருந்தது. ஆகவே தற்போதைய அரசு, மேற்கூறப்பட்ட போர் வெற்றி குறித்த எந் தவிதமான நடவடிக்கைகளையும் மேற் கொள்ளாமல், வடக்கிலும் கிழக்கிலும் மட்டுமல்லாமல் இலங்கை முழுவதிலும் போரில் உயிரிழந்த இராணுவ வீரர்க ளுக்கும் மற்றும் சாதாரண பொதுமக்க ளுக்கும் நினைவஞ்சலி மட்டுமே செலுத்தப்படல் வேண்டும் என்ற முறை மையை உருவாக்கி யமை பராட்டப்பட வேண் டியதொரு செயற்பாடா கும். நடந்து முடிந்த போரின்போது போரில் பங்குகொண்ட இராணுவ மும், தமிழீழ விடுதலைப் புலி உறுப்பினர்களும் மட்டும்உயிரிழக்கவில்லை. ஏராளமான பொது மக்கள் வடக்கிலும் கிழக்கிலும் உயிரிழந்துள்ளனர். போரின் தன்மை அது தான். போர் ஒன்றின் போது பொதுமக்கள் உயி ரிழப்பது தவிர்க்கப்படமுடியாத விடயம்.



### முற்போக்கான சட்டத்தை உருவாக்கல்

தேசிய கூட்டு அரசு, சில முற்போக்கான சட்டங்களை நிறைவேற்ற நாடாளுமன் றத்தினூடாக அங்கீகாரம் பெற்றது. உதா ரணமாக அரசதலைவரின் அதிகாரங் களை குறைக்கும் 19ஆவது திருத்தமும் அவற்றினூடாக பொதுச்சேவைகள் ஆணைக்குழு, அரசமைப்பு ஆணைக் குழு, தேசிய பொலிஸ் ஆணைக்குழு மற்றும் இலஞ்ச ஊழல் பற்றி விசாரணை செய்யும் ஆணைக்குழு ஆகியவை உரு வாக்கப்பட்டன.

இப்படியாக உருவாக்கப்பட்ட ஆணைக் குழுக்களின் செயற்பாடுகள் காரணமாக, சுதந்திரமான நீதித்துறை நாட்டில் ஏற்படுத் தப்பட்டதுடன் நாட்டில் நல்லாட்சியும் நிலைநாட்டப்பட்டது. நாடாளுமன்றத்தின் நடவடிக்கைகள் ஊடாக உருவாக்கப்பட்ட காணாமற் போனவர்களுக்கான அலுவ லகம் அமைப்பது, பொருளாதார நிதிசார் மோசமான கையாடல் குற்றச்சாட்டுக்கள் குறித்த விசாரணை, காணாமற்போன வர்களுக்கான சட்டமூலங்களை நடைமு றைப்படுத்தல், தகவல் அறியும் உரிமைச் சட்ட மூலங்களை நடைமுறைப்படுத்தல், தகவல் அறியும் உரிமைச் சட்டம் ஆகி யவை நாட்டின் நல்லாட்சி காரணமா கவே சாத்தியமாகின. இவற்றைப் பெரும் பான்மை வாக்குகளால் நிறைவேற்ற தமிழ் தேசியக் கூட்டமைப்பு, மக்கள் விடுதலை முன்னணி ஆகிய கட்சிகள் அரசுக்கு ஆதரவு வழங்கியமையும், இவற்றிற்கு சாதகமாக அமைந்ததுடன் இந்த நடவடிக்கைகளின் போது எதிர்க்கட் சித் தலைவர் இரா. சம்பந்தனின் பங்க ளிப்பும் பாராட்டப்பட வேண்டிய விடயமாகும்.

தமிழ்த் தேசிய கூட்டமைப்புத்தான் வடக்கு மற்றும் கிழக்கு வாழ் தமிழ் மக்க ளின் பெரும்பான்மையான வாக்குக ளைப் பெற்று அவர்களின் பிரதிநிதிகளாக செயற்படுகின்றது. தமிழர்களை பிரதி நி தித்துவப்ப டுத்தும் எனைய தமிழ்க் கட்சி கள், தமிழர்களின் ஆதரவை பெருமள வில் பெறுவதற்கு குறிப்பிட்டுக் கூறும் அளவிற்கு வாக்குகளைப் பெற்றிருக்க வில்லை.

### தேசிய கூட்டு அரசின் உருவாக்கம்

2015ஆம் ஆண்டில், அரச தலைவர் தேர் தலுக்கு முன்னர் சிறிலங்கா சுதந்திரக்கட்சி இரண்டாக பிரிந்து அதில் ஒரு தரப்பு மைத்திரிபால சிறிசேனவின் தலைமை யில் ஐக்கிய தேசிய கட்சியுடன் இணைந்து, மைத்திரிபால சிறிசேன பொது வேட்பாள ராக களமிறங்கி வெற்றி பெற்றதுடன், பொதுத் தேர்தல் வெற்றிக்குப் பின்னர் நாட்டில் இந்த இரண்டு பிரதான கட்சி களும் இணைந்து தேசிய கூட்டு அர சொன்றை உருவாக்கிக் கொண்டன. சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் மற்றைய தரப்பு முன்னாள் அரசதலைவர் மகிந்த ராஜபக்சவின் தலைமையில் எதிர்க்கட்சி யாக, கூட்டு அரசின் சகல நடவடிக்கைக ளுக்கும் எதிராக நாடாளுமன்றத்தில் செயற்பட்டு புதிதாக பொது முன்னணி என்ற பெயரில் எதிர்க்கட்சியாகிவிட்டது டன், கூட்டு அரசு முன்னெடுக்கும் சகல நடவடிக்கைகளுக்கும் தடையாக, முட்டுக் கட்டை போட்டு செயற்பட்டு வருகின்றது. போரின் பின்னர் சிங்கள, தமிழ் இனங் களுக்கிடையிலான பரஸ்பர சமாதா னத்தை கட்டி எழுப்புவதற்கும் இடையூறு விளைவித்து வருகிறது இந்த புதிய பொது மக்கள் முன்னணி.

### அரசுக்கு எதிரான பொது மக்கள் முன்னணியின் பரப்புரை

சிறிலங்கா பொதுமக்கள் முன்னணி, கூட்டு அரசு மேற்கொள்ளும் சமாதான முயற்சிகளுக்கு தவறான அர்த்தம் கற் பித்து, இந்த அரசு மேற்குலக நாடுகள் சிலவற்றுடன் இணைந்து, தமிழ் ஈழ விடுதலைப்புகளுக்கு புத்துயிர் கொடுத்து, தமிழ் ஈழம் அமைக்க வழிகாட்டுகிறது என்று பரப்புரை செய்கிறது இந்தப் பொது மக்கள் முன்னணி-மேலும் நாடாளுமன் றத்தில் அங்கீகரிக்கப்படவுள்ள புதிய அர சமைப்பு, உருவாக்க முயற்சிக ளுக்குக்கூட தப்பான அர்த்தம் கற்பித்து சிங்கள மக்கள் இந்தப் பொதுமக்கள் முன் னணி மத்தியில் தப்பான பரப்புரைகளை மேற்கொண்டு வருகிறது. இந்த முன்ன ணியின் கூற்றுப்படி, வடக்குக்கும், கிழக் கிற்கும் என தனியான ஒரு மாகாணம் அமைக்கப்படவுள்ளது என்பதுதான் கூட் டாட்சி முறை என்பதன் பொருள்படுகிறது என பரப்புரை மேற்கொள்ளப்படுகின்றது. வடக்கு மக்களின் சொந்த நிலங்களை அவர்களுக்கு திரும்பக் கொடுத்துவிட்டு இராணுவம் வெளியேறியமை, நாட்டின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் எனவும் இந் தப் பொதுமக்கள் முன்னணி சிங்கள மக்களிடையே தெற்கில் பரப்புரை செய்கி றது. கடுமையான குற்றங்கள் புரிந்த இராணுவத்தினருக்கு எதிராக இந்த அரசு நடவடிக்கை எடுக்கும் போது, நாட்டுக்காக போர்புரிந்த இராணுவ வீரர்களை அரசு துன்புறுத்துவதாக இந்தப் பொதுமக்கள் முன்னணி குற்றஞ்சாட்டுகிறது. அரசு மேற்கொள்ளும் நடவடிக்கைகள் இந்த நாட்டின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக அமைந்துள்ளன என்ற மாயையை சிங் கள மக்களின் மனதில் பதிய வைப்பதில் இந்தப் பொதுமக்கள் முன்னணி வெற்றி அடைந்துள்ளது. இனப்பிரச்சினையை முன்வைத்தே அரசியல் செய்வது சகல அரசியல் கட்சிகளுக்கும் கைவந்த கலையாகும்.

### கூட்டு அரசுக்கான அரசியல் ஆதரவு தேய்ந்து நலிவு காணல்

மகிந்த ராஜபக்சவின் தலை மையில் இயங்கும் பொது மக்கள் முன்னணி, கூட்டு அரசுக்கு எதிராக மேற் கொண்ட பரப்புரை நடவடிக் கைகளின் எதிரொலியை நடந்துமுடிந்த உள்ளூராட்சி தேர்தல் முடிவுகள் மூலம் எம்மால் தெளிவான இனம் காணக்கூடியதாக இருந்தது. எரிகிற நெருப்பில் எண்ணெய் ஊற்றுவதைப்போல, மத்திய வங்கியின் பிணைமுறி மோசடியின்போது ஆளுங் கட்சியான ஐக்கிய தேசிய கட்சியின் உறுப்பினர்களும், இந்த மோச டியில் தொடர்பு கொண்டிருந்தமையி னால் அவர்களை உறுப்பினர்களை பதவி நீக்கம் செய்ய வேண்டிய நிர்ப்பந்த த்துக்கும் ஐ.தே.கட்சி உள்ளானது.


### சிறிலங்கா சுதந்திரக் கட்சியினுள் பிளவு

தலைமை அமைச்சருக்கு எதிராக கொண்டுவரப்பட்ட நம்பிக்கை இல்லாப் பிரேரணையின் போது அந்தப் பிரேர ணைக்கு ஆதரவாக வாக்களித்த சிறி லங்கா சுதந்திரக் கட்சியின் 16 உறுப்பி னர்களும் இப்போது நாடாளுமன்றத்தில் தனியானதொரு தரப்பாக, எதிர்க்கட்சி யாக செயல்படுகின்றனர். குறிப்பிட்ட இந்த 16உறுப்பினர்களும் அரசுக்குப் பெரும் சவாலாகவே விளங்குகிறார்கள். ஆகவே, தற்பொழுது அரசதலைவர் மைத்திரிபால வெகுவிரைவாக செயற் பட்டு 2015ஆம் அரசதலைவர் தேர்தல் மற்றும் நாடாளுமன்ற தேர்தல்களின் போது தாம் முன்வைத்த கொள்கை நிலைப்பாட்டை இலக்காகக் கொண்டு நல்லாட்சியை நிலைநாட்ட வேண்டும்.

### வீழ்ச்சிகண்டு வரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் செல்வாக்கு

வடக்கு மக்களிடையே தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் செல்வாக்கு படிப்படியாக குறைந்து கொண்டு வருகிறது. நடந்து முடிந்த உள்ளூராட்சித் தேர்தல் முடிவுகள் இதனைப பறைசாற்றின. இதற்குக் கார ணம் ஏனைய சிறு தமிழ்க் கட்சிகளின் மும்முரமான தேர்தல் பரப்புரைகள் தமிழ் தேசிய கூட்டமைப்பின் மிதவாத அரசியல் போக்கு, அரசுக்குச் சார்பாகவே நடந்து கொள்ளும் கூட்டமைப்பின் நிலைப்பாடு என்பவை தமிழ் தேசிய கூட் டமைப்பின் மக்கள் ஆதரவுத்தளத்தின் சரிவுக்குக் காரணமாகியுள்ளன.

மற்றொருபுறம் வடபகுதியில் இருந்து மீண்டும தமிழ் ஈழ விடுதலைப்புலிகள் உருவாக வேண்டும் என்ற தமிழ்க் கடுங்கோட்பாட்டாளர்கள் தரப்பின் குர லும் ஒலிக்கின்றது. வடக்கிலுள்ள சில தரப்பினர்கள் இன்னும்கூட தமிழ் ஈழ விடுதலைப்புலிகள் இயக்கம் ஒரு பயங்க ரவாத இயக்கம் என்பதை ஏற்காததன் கர்ரணமாகவே பன்னாட்டு சமூகங்கள் ஊடாக மேற்கொள்ளப்பட்ட சமாதான பேச்சுக்கள் கூட தோல்வியடைந்தன. ஆயினும் சமாதானத்தை விரும்பும் வடக்கு மற்றும் கிழக்கு வாழ் மக்கள் நாட் டில் ஒரு சர்வாதிகார அட்சி அங்கு மலர் வதை வரவேற்கமாட்டார்கள். அவர்கள் அடிமைகளாக வாழ விரும்பாமல், சுய கௌரவத்துடனும், தன்மானத்துடன் ஜனநாயக அரசின் கீழ் வாழ்வதைத்தான் விரும்புவார்கள்.



# அலஸ்காவில் நிலநடுக்கம்

அமெரிக்காவின் வடக்கு அலஸ்கா பகுதியில் 6.4 ரிச்டர் அளவில் சக்திவாய்ந்த நிலநடுக்கம் நேற்று ஏற்பட்டது.

இந்த நிலநடுக்கத்தால் பல இடங்களில் வலுவான நில அதிர்வுகள் உணரப்பட்டன என்று அமெரிக்க புவியியல் ஆய்வு மையம் தகவல்கள் தெரிவித்துள்ளது. (ம)

# ட்ரம்ப்-புடின் இ... பேச்சுக்கு வாய்ப்பி...


மொஸ்கோ. ஒக. 14

அமெரிக்க அதிபர் ட்ரம்ப், ரஷ்ய அதிபர் புடின் இடையில் இரண்டாம் கட்டப் பேச்சுக்கு வாய்ப்பில்லை என்று பன்னாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டன.

இந்த இரு அதிபர்களும் பின்லாந்துத் தலைநகர் ஹேல்சின்கியில் அண்மையில் சந்தித்துப் பேச்சு நடத்தினார்கள். சிரிய விவகாரம். உக்ரைன் விவகாரம். ஈரான் விவகாரம். கொரியத் தீபகற்ப விவகாரம், அணுவாயுதப் பரவல்த் தடை ஒப்பந்தம் ஆகியன குறித்து பேச்சு நடத்தப்பட்டது. இதன் தொடச்சியாக ட்ரம்ப் மொஸ்கோவுக்கும். புடின் வொஷிங்டனுக்கும் சென்று பேச்சு நடத்த வாய்ப்பிருந்தது. ஆனால் அமெரிக்காவின் அண்மைய நகர்வுகள் அனைத்தையும் புரட்டிப் போட்டுள்ளன.

பிரிட்டனின் குடிமகனும், ரஷ்யாவின் முன்னாள் உளவாளியுமான ஸ்கிர்போலுக்கு நஞ்சூட்டப்பட்ட விவகாரத்தில் ரஷ்யாவின் மீது அமெரிக்கா ஏகப்பட்ட பொருளாதாரத் தடைகளை விதித்துள்ளது. இதனால் அமெரிக்கா - ரஷ்யா இடையிலான உறவில் தற்போது மிகப்பெரிய விரிசல் ஏற்பட்டுள்ளது. இதனால் இந்த இரண்டு நாடுகளின் அதிபர்களின் பயணங்கள் கைவிடப்படும் நிலை ஏற்பட்டுள்ளது என்கின்றன பன்னாட்டு ஊடகங்கள். (ம)





# காபூல் எங்கும் பலத்த பாதுகாப்பு

காபூல், ஒக. 14

ஆப்கானிஸ்தானின் தலைநகர் காபூல் எங்கும் உச்சக்கட்டப் பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன என்று ஆப்கானிஸ்தான் அரசு அறிவித்தது.

ஆப்கானிஸ்தானில் தலிபான் அமைப்பு மிகப்பெரிய ஆதிக்கம் செலுத்தி வருகிறது. அந்த அமைப்பு அண்மைக்காலமாக ஆப்கானிஸ்தானின் தலைநகர் காபூலில் தொடர்ந்து தாக்குதல் நடத்தி வருகிறது. தலிபான்-ஆப்கான் இடையில் போர் நிறுத்தம் செய்யப்படுவதும் பின்னர் தாக்குதல் நடத்தப்படுவதுமாக ஆப்கானிஸ்தானின் நிலை தொடர்கிறது. அடுத்துவரும் மாதங்களில் காபூல் அதிகளவில் இலக்கு வைக்கப்படும் என்பதால் அங்கு உச்சக்கட்டப் பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. (ம)



ஜேர்மனியில் உள்ள குளம் ஒன்றின் ஒளிப்படமே இது. ஐரோப்பிய நாடுகள் பலவும் அண்மைக்காலமாக கடும் வெப்பத்தால் பாதிக்கப்பட்டுள்ள நிலையில் அங்கு நிலவும் தீவிர வெப்பத்தின் கனதித் தன்மையை வெளிப்படுத்தும் வகையில் இந்த ஒளிப்படம் அமைந்துள்ளது. (ம)

# சிரியாவின் எல்லைகளில் வான் தாக்குதல் உச்சம்

டமஸ்கஸ். ஒக. 14

சிரியாவின் எல்லைப் பகுதிகளில் முகாமிட்டுள்ள ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பினருக்கு எதிராக அங்கு உச்சக்கட்ட வான் தாக்குதல்கள் நடத்தப்படுகின்றன என்று பன்னாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டன.



ஈராக், சிரிய நாடுகளின் சில பகுதிகளைக் கைப்பற்றி அவற்றை ஒரு தனி நாடு என்று அறிவித்திருந்தது ஐ.எஸ்.ஐ.எஸ். (ஈராக் சிரிய இஸ்லாமிக் ஸ்ரேட்) அமைப்பு.

அந்த அமைப்பின் பிடியில் இருந்து ஈராக் முழுவதுமாக விடுபட்டுள்ளது. சிரியாவின் நகர்ப்புறங்களில் தாக்குதல்கள் இடம்பெற்று வருகின்றன. ரஷ்யா இந்தத் தாக்குதல்களை மேற்கொண்டு வருகிறது. கணிசமான அளவு பின்னடைவு ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்புக்குக் கொடுக்கப்பட்டுள்ளது என்கின்றன பன்னாட்டு ஊடகங்கள். (ம)

# சூரியனை நோக்கி பாய்ந்து செ...

வொஷிங்டன், ஒக. 14

நெருப்புக் கோளமான சூரியனை நெருக்கமாகச் சென்று ஆய்வு செய்வதற்காக நாசா தயாரித்த செயற்கைக்கோளை நேற்றுமுன்தினம் விண்ணில் செலுத்தும் திட்டம் கடைசி நிமிடத்தில் ஒத்திவைக்கப்பட்ட நிலையில் நேற்று அந்த செயற்கைக்கோள் விண்ணுக்கு ஏவப்பட்டது.

வெப்ப கிரகமான சூரியன் குறித்த வியத்தகு தகவல்களை திரட்டிவர கடந்த 1974 மற்றும் 1976ஆம் ஆண்டுகளில் 'ஹீலியோஸ் 1' மற்றும் 'ஹீலியோஸ் 2' செயற்கைக் கோள்களை ஜேர்மனியும், அமெரிக்காவும் கூட்டாக விண்ணில் செலுத்தின.

பூமியில் இருந்து சுமார் 3 லட்சம் கிலோமீற்றர் உயரத்துக்கு சென்ற இந்த செயற்கைக்கோள்கள் சூரியனை சுமார் 27 மில்லியன் மைல் தூரத்தில் இருந்துதான் ஆய்வு செய்ய முடிந்தது. இதனால் உலக அழிவை ஏற்படுத்தக்கூடிய சூரியப் புயல் தொடர்பான போதிய தகவல்களை இதுவரை திரட்ட முடியவில்லை. கடந்த 1985ஆம் ஆண்டுவரை சில தகவல்களை அனுப்பிய இந்த செயற்கைக் கோள்கள் பின்னர் செயலிழந்து சூரியனின் சுற்றுவட்ட பாதையில் நிறுத்தப்பட்டுள்ளன.

இதற்கிடையில். நாற்பது லட்சம் மைல்கள் தொலைவில் ஒவ்வொரு நொடியும் பல்லாயிரக்கணக்கான டிகிரி செல்சியஸ் வெப்பத்தைக் கக்கும் சூரியனை மிக அருகில் சென்று ஆய்வு செய்யக்கூடிய 'பார்க்கர் சோலார் புரோப்' எனும்



செயற்கைகோளை 2... டொலர்கள் செலவில் ... விண்வெளி ஆய்வு ...

# டையில்
# பில்லை!



## கஜினி நகரத்தில் தொடர் தாக்குதல்




காபுல், ஓக. 14

கஜினி நகரத்துக்கு ஆப்கானிஸ்தானும் தலிபானும் ஆதரவு கோரியுள்ள நிலையில் அங்கு தொடர்ந்தும் தாக்குதல்கள் இடம்பெற்று வருகின்றன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஏமனில் உள்ள கஜினி நகரத்தைக் கைப்பற்றுவதற்கு ஆப்கானிஸ்தான் அரச படையும், தலிபானும் கடந்த ஒரு வாரத்துக்கு முன்னர் தாக்குதல்களை நடத்தின. அந்த நகரம் தனது கட்டுப்பாட்டில் வந்துள்ளது என்று நேற்றுமுன்தினம் அறிவித்தது தலிபான். தலிபான் அறிவித்த சில மணிகளில் இந்த நகரம் தமது கட்டுப்பாட்டில் தான் உள்ளது என்று ஆப்கானிஸ்தான் அரசு அறிவித்தது. இதையடுத்து ஆப்கானிஸ்தான் அரச படைகளுக்கும் தலிபானுக்கும் இடையில் தாக்குதல்கள் தொடர்ந்த வண்ணம் உள்ளன என்கின்றன பன்னாட்டு ஊடகங்கள். (ம)

## சென்றது செய்மதி



களை 20 லட்சம் செல்வில் அமெரிக்க ஆய்வு மையமான நாசா உருவாக்கியுள்ளது. நேற்று இந்த விண்கலம் விண்ணுக்கு ஏவப்பட்டது. (ம)



# பிடல் காஸ்ட்ரோ
## கோலியாத்தை எதிர்த்த தாவீது

பிடல் அலெஜாண்ட்ரோ காஸ்ட்ரோ ரஸ் ஓகஸ்ட் மாதம் 13ஆம் திகதி 1926ஆம் ஆண்டு கியூபாவில் உள்ள பிரான் எனும் கிராமத்தில் பிறந்தார். ஸ்பெய்ன் நாட்டைச் சேர்ந்த முன்னாள் இராணுவச் சிப்பாயான அவரது தந்தை ஏன்ஜல் மரியா படிஸ்டா காஸ்ட்ரோ ஒய் அர்கிஸ் ஸ்பெய்னில் இருந்து கியூபாவுக்குக் குடிபெயர்ந்த ஒரு பெரு விவசாயி ஆவார்.

பல்லாயிரம் ஏக்கர் நிலங்களில் கரும்பு விவசாயம் செய்து வந்த ஏன்ஜல் மரியாவின் முதல் மனைவி இறந்த பின், தனது வீட்டின் பணியாளாக இருந்த கியூப பெண் லினா ரஸ் கொன்சலஸ் உடன் வாழத் தொடங்கினார்.

இந்தத் தம்பதிக்கு பிறந்த ஏழு குழந்தைகளில் முதல் குழந்தை பிடல். ஏன்ஜல் மரியா மற்றும் லினா ஒரே வீட்டில் வாழ்ந்தபோதும் பிடல் காஸ்ட்ரோ பிறந்த பின்தான் திருமணம் செய்து கொண்டனர். இரண்டாவதாக பிறந்த குழந்தை ரவுல் காஸ்ட்ரோ. அடுத்த ஐவரும் பெண் குழந்தைகள்.

பள்ளிக் காலங்களில் படிப்பைவிட விளையாட்டில் அதிக கவனம் செலுத்திய பிடல் காஸ்ட்ரோ. 1940களில் ஹவானா பல்கலைகழகத்தில் படித்தபோது அரசியலில் ஈடுபடத் தொடங்கியதுடன் தனது பேச்சுத் திறனையும் வளர்த்துக்கொண்டார்.

பல்கலைக்கழக மாணவரான பிடல் காஸ்ட்ரோ 1946ஆம் ஆண்டில் அப்போதைய கியூப அதிபர் ராமோன் கராவ் சான் மார்ட்டின் அரசின் ஊழலுக்கு எதிராக நிகழ்த்திய உரை அப்போது மிகவும் பிரபலமானது.

1947ஆம் ஆண்டில் டோமினிக்க குடியரசின், அமெரிக்க ஆதரவு பெற்ற சர்வாதிகாரி ரபேல் டிரோஜிலோவின் அரசைக் கவிழ்க்கும் முயற்சியில், கியூபாவில் இருந்த டோமினிக்க குடியரசு மாணவர்களுடன் கடல் வழியாகக் கிளம்பினார். இந்த முயற்சி அமெரிக்க ஆதரவுடன் தடுத்து நிறுத்தப்பட்டது.

காஸ்ட்ரோ மிர்தா டையாஸ் பாலார்ட் திருமணம் 1948ஆம் ஆண்டு நடந்தது. இரு குடும்பங்களின் எதிர்ப்பை மீறி நடந்த காதல் திருமணம் இது.

அதிபர் கார்லஸ் ப்ரியோவின் அரசுக்கு எதிராக ராணுவப் புரட்சி மூலம் 1952இல் கியூபா அதிபரானார் ஜெனரல் புல்ஜென்சியோ பாடிஸ்டா. அவரது ராணுவ சர்வாதிகாரத்துக்கு எதிராக ஜூலை 1953இல் மான்கடாவில் இருந்த ஆயுதக் கிடங்கைத் தாக்கும் முயற்சியில் ஈடுபட்ட காஸ்ட்ரோ உள்ளிட்ட ஏராளமானோர் கைதாகினர்.

காஸ்ட்ரோவுக்கு 15 ஆண்டுகள் சிறை தண்டனை விதிக்கப்பட்டாலும், பொது மன்னிப்பு வழங்கப்பட்டு 19 மாதங்களுக்கு பிறகு மே 1955ஆம் ஆண்டில் விடுதலை செய்யப்பட்டார்.

அதே ஆண்டு மெக்சிக்கோ சென்ற காஸ்ட்ரோ, அங்கு தனது வருங்கால சக போராளி மற்றும் நண்பரான எர்னஸ்டோ 'சே' குவேராவை சந்தித்தார்.

நவம்பர் 1956ஆம் ஆண்டில் பிடல், ராவுல், சே உள்ளிட்ட 81 போராளிகள், 12 பேர் மட்டுமே பயணிக்க உகந்த கிரான்மா எனும் சிறிய படகில் புரட்சியில் ஈடுபட மெக்சிகோவில் இருந்து கியூபா திரும்பினர். 1959இல் கியூப புரட்சி வெற்றிபெறும் வரை, மலைப் பகுதிகளில் பதுங்கியிருந்து இந்தக் குழு கொரில்லா போரில் ஈடுபட்டது.



கியூபப் புரட்சி 1959 ஜனவரியில் வெற்றிபெற்றதைத் தொடர்ந்து மனுவேல் உருசியா லியோ கியூப அதிபரானார். அவரது அரசில் ஜோஸ் மிரோ கார்தோனா தலைமை அமைச்சரானார். கருத்து வேறுபாடு காரணமாக அவர் ஆறு வாரங்களில் பதவி விலகியதால், காஸ்ட்ரோ 1959ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் தலைமை அமைச்சராகப் பொறுப்பேற்றார். அதிபர் பதவி தலைமை அமைச்சுப் பதவியை விடவும் அதிகாரம் குறைந்த ஒரு சம்பிரதாய பதவியாகவே இருந்தது. 1976ஆம் ஆண்டு டிசம்பரில் அரசியலமைப்பு மாற்றப்படும் வரை அவர் அதிபர் பதவியில் நீடித்தார்.

அதன் பின் தலைமை அமைச்சராக இருந்த காஸ்ட்ரோ, அதிபராகப் பதவியேற்றார். அந்தப் பதவியில் பிப்ரவரி 2008ஆம் ஆண்டுவரை காஸ்ட்ரோ நீடித்தார். காஸ்ட்ரோ கியூபாவின் தலைமை அமைச்சர் மற்றும் அதிபராக இருந்து ஆட்சி செய்த ஆண்டுகளில் அமெரிக்கா 10 அதிபர்களைக் கண்டது.

- அமெரிக்கா பலமுறை பிடல் காஸ்ட்ரோவைக் கொல்ல முயன்றது. ஆப்ரேஷன் மங்கூஸ் எனும் திட்டம் மூலம் காஸ்ட்ரோவின் சிகரெட்டில் நஞ்சு தடவி கொல்ல முயன்றது. அவரது அடையாளமான தாடியை உதிர வைக்க முயன்றது என காஸ்ட்ரோ மீது அமெரிக்க உளவு அமைப்பான சி.ஐ.ஏ பல தாக்குதல் முயற்சிகளை நடத்தியது.

அமெரிக்கச் சொத்துகளை காஸ்ட்ரோ தலைமையிலான கம்யூனிச அரசு, 1960இல் தேசியமயமாக்கியதைத் தொடர்ந்து அமெரிக்காவால் விதிக்கப்பட்ட பொருளாதார தடைகள் பலவும் இன்றும் நீடிக்கின்றன.

பதவி விலகியபின்பு பொது வாழ்வில் ஒதுங்கி இருந்த காஸ்ட்ரோ இரு ஆண்டுகள் கழித்து ஜூலை 2010இல் தொலைக்காட்சியில் தோன்றினார்.

உலகிலேயே அதிக ஆண்டுகள் ஒரு நாட்டு அரசின் தலைவராக பதவி வகித்தவர்களில் ஒருவரான காஸ்ட்ரோ நவம்பர் 25ஆம் திகதி 2016ஆம் ஆண்டு தனது 90ஆவது வயதில் காலமானார்.

> அமெரிக்கா பலமுறை பிடல் காஸ்ட்ரோவைக் கொல்ல முயன்றது. ஆப்ரேஷன் மங்கூஸ் எனும் திட்டம் மூலம் காஸ்ட்ரோவின் சிகரெட்டில் நஞ்சு தடவி கொல்ல முயன்றது, அவரது அடையாளமான தாடியை உதிர வைக்க முயன்றது என காஸ்ட்ரோ மீது அமெரிக்க உளவு அமைப்பான சி.ஐ.ஏ பல தாக்குதல் முய்ற்சிகளை நடத்தியது.

லட்சக்கணக்காக கியூபா மக்களால் வெறுக்கப்பட்ட காஸ்ட்ரோ, கோடிக்கணக்கான கியூபா மக்களால் நேசிக்கப்பட்டார். அவர்கள் அருகில் உள்ள அமெரிக்கா எனும் கோலியாத்தை எதிர்க்கும் தாவீதாகவே உலக மக்கள் காஸ்ட்ரோவைப் பார்த்தனர்.

## காலையில் எழுந்ததும் பல்ல தேய்க்கிறவனை விட



## உட்கார்ந்து செல்லத்தேய்க்கிறவன் தான் இப்ப அதிகம்...

## இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

**மேஷம்:** மனதில் இனம்புரியாத சஞ்சலம் ஏற்படலாம். மாறுபட்ட கருத்து உள்ளவரிடம் அதிகம் பேச வேண்டாம். தொழில், வியாபார இலக்கு நிறைவேற கூடுதல் அவகாசம் தேவைப்படும்.

**இடபம்:** செயல்களில் தடுமாற்றம் ஏற்படலாம். தொழிலில் திட்டமிட்ட இலக்கு நிறைவேற்ற கூடுதல் அவகாசம் தேவைப்படும் .சிறிதளவு கடன் பெற நேரிடலாம்.

**மிதுனம்:** எதிரியினால் உருவான இடையூறுகளை சமயோசிதமாக சரி செய்வீர்கள். தொழிலில் உற்பத்தி அதிகரிப்பால் இலாபம் உயரும்.

**கடகம்:** நண்பரிடம் குடும்ப விஷயம் பேசுவீர்கள். எதிர்பார்த்த உதவி ஓரளவு கிடைக்கும்.தொழில் வியாபாரத்தில் அனுகூலங்களை கவனமுடன் பாதுகாப்பது நல்லது.

**சிங்கம்:** சந்தோஷ நிகழ்வை நண்பரிடம் சொல்லி மகிழ்வீர்கள். பேச்சு, செயல்களில் உற்சாகம் வெளிப்படும். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சிப் பணி எளிதாக நிறைவேறும்.

**கன்னி:** அவசரப்பணியால் பரபரப்பு ஏற்படலாம். தொழில், வியாபாரத்தில் இடையூறுகளை தாமதமின்றி சரி செய்வதும். பணவரவு சராசரி அளவில் இருக்கும்.

**துலாம்:** திட்டமிட்ட பணி நிறைவேறி நன்மை பெறுவீர்கள். தொழில் வியாபார வளர்ச்சி வியத்தகு அளவில் முன்னேற்றம் பெறும். உபரி வருமானம் கிடைக்கும்.


**விருச்சிகம்:** எதிர்பார்த்த உதவி குறைந்த அளவில் கிடைக்கும். தொழிலில் உற்பத்தி விற்பனை சுமாரான அளவில் இருக்கும். பணவரவை அத்தியாவசிய செலவுக்குப் பயன்படுத்துவீர்கள்.

**தனுசு:** அறிமுகம் இல்லாத எவரிடமும் பொது விஷயம் பேச வேண்டாம். தொழில் வியாபாரம் மந்த கதியில் இயங்கும். பணவரவை விட செலவு அதிகரிக்கும்.

**மகரம்:** திட்டமிட்ட பணிகள் நிறைவேற தாமதம் ஏற்படலாம். தொழில், வியாபாரம் நல்ல வளர்ச்சி பெற கூடுதல் முயற்சி தேவைப்படும்.

**கும்பம்:** உறவினர்களின் அன்பான பேச்சு ஊக்கமளிக்கும். தொழில் வியாபாரம் செழிக்க தேவையான பணிகளை மேற்கொள்வீர்கள். நிலுவைப் பணமும் வசூலாகும்.

**மீனம்:** இனிய அனுபவத்தால் மனம் உற்சாகம் எழும். சிறு செயலையும், நேர்த்தியுடன் செய்வீர்கள். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சி இலக்கு நிறைவேறும்.




முகப்புத்தகம் வந்த பிறகு யார் நிஜ புத்தகத்தை மதிக்கிறார்கள்

வெறும் தண்ணீரை பச்சைத் தண்ணீர் என்றும் பச்சைத் தண்ணீரை கிரீன் டீ என்றும் அழைக்கும் விந்தையான உலகு...

---


சீரியல் பார்க்கும் பெண்களின் அலப்பறைகளுக்கு சற்றும் குறைவில்லாதது ஐ.பி.எல். பார்க்கும் ஆண்களின் அட்டகாசம்

---

பேசப் பயப்படுகிறீர்களா உண்மையில் நீங்கள் கேள்விகளுக்குப் பயப்பிடுகிறீர்கள் என அர்த்தம்..

---

சில்லறை வாங்க வேண்டும் என்றால் 'ரூபா'வை மாற்றினால்தானே முடியும் !!



## நாளை

## 15.08.2018

புதன்கிழமை

**ஆடி 30**

திதி: சதுர்த்தி மு.ப. 08.29 வரை
நட்சத்திரம்: அத்தம் மு.இ. 09.55 வரை
சுபநேரம்: 04.35 – 06.05 வரை
ராகுகாலம்: 12.05 – 01.36 வரை

## சுடோக்கு

எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | 3 | 9 | | 8 | 2 | |
| | 9 | | | 1 | | 6 | | |
| | | | 4 | | 6 | | | |
| 5 | | | | 6 | | | | |
| | 1 | | | 3 | | 2 | | |
| | | 3 | 5 | | 1 | 4 | 6 | 9 |
| | 4 | | 7 | 2 | 8 | | | 6 |
| | | 5 | | 4 | 3 | | 8 | 7 |
| 8 | | | | | | | | |

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 3 | 1 | 7 | 2 | 5 | 8 | 4 | 9 | 6 |
| 9 | 2 | 4 | 6 | 3 | 1 | 5 | 8 | 7 |
| 6 | 5 | 8 | 9 | 4 | 7 | 2 | 3 | 1 |
| 1 | 7 | 2 | 8 | 9 | 6 | 3 | 5 | 4 |
| 5 | 9 | 3 | 4 | 1 | 2 | 7 | 6 | 8 |
| 8 | 4 | 6 | 5 | 7 | 3 | 1 | 2 | 9 |
| 4 | 3 | 5 | 7 | 6 | 9 | 8 | 1 | 2 |
| 2 | 6 | 1 | 3 | 8 | 4 | 9 | 7 | 5 |
| 7 | 8 | 9 | 1 | 2 | 5 | 6 | 4 | 3 |

நேற்றைய விடை



# விராட் கோலியாக நடிக்கிறார் துல்கர்!

மலையாளம் மற்றும் தமிழ் சினிமாவில் பிரபலமானவர் மம்முட்டியின் மகன் துல்கர் சல்மான். இவர் அண்மையில் 'கர்வான்' என்ற ஹிந்தி படத்திலும் நடித்துள்ளார். இந்த நிலையில், இவர் இந்திய கிரிக்கெட் அணியின் தலைவர் விராட் கோக்லியின் வாழ்க்கை வரலாற்று கதையில் நடிக்கவுள்ளார். 'ஸோயா பேக்டர்' என்ற பெயரிடப்பட்டுள்ள இந்தப் படத்தை அபிஷேக் சர்மாஇயக்கவிருக்கிறார்.

திடீரென கடவுள் என்பவர் கண் முன்னால் தோன்றி "உனக்கு என்ன வேணும்" எண்டு கேட்டாக் கூட "நீ மெய்யாலுமே கடவுளா?" ன்னு கேட்கத் தானே தோன்றும்!!!



## நீர் நிலைகளின் வகைகள்

| | |
|---|---|
| அகழி – | கோட்டையின் புறத்தே அகழ்ந்தமைக்கப்பட்ட நீர் அரண். |
| அருவி– | மலை முகட்டில் தேங்கிய நீர் குத்திட்டு விழுவது. |
| ஆழிக்கிணறு– | கடலுக்கு அருகே தோண்டிக் கட்டிய கிணறு. |
| ஆறு – | பெருகி ஓடும் நதி. |
| இலஞ்சி – | பல வகைக்கும் பயன்படும் நீர் தேக்கம். |
| உறைகிணறு – | மணற்பாங்கான இடத்தில் தோண்டி சுடுமண் வலையமிட்ட கிணறு. |
| ஊருணி– | மக்கள் பருகும் நீர் நிலை |
| ஊற்று – | பூமிக்கடியிலிருந்து நீர் ஊறுவது. |
| ஏரி– | வேளாண்மை பாசன நீர் தேக்கம். |
| ஓடை – | அடியிலிருந்து ஊற்று எடுக்கும் நீர் எப்பொழுதும் வாய்க்கால் வழி ஓடும் நீர். |
| கடல் – | சமுத்திரம். |
| கலிங்கு – | ஏரி முதலிய பாசன நீர் தேக்கம் உடைப்பெடுக்காமல் இருப்பதற்கு முன் எச்சரிக்கையாக கற்களால் உறுதியாக்கப்பட்டு பலகைகளால் அடைத்து திறக்கக்கூடியதாய் உள்ள நீர் செல்லும் அமைப்பு. |
| கால் – | நீரோடும் வழி. |
| கால்வாய்– | ஏரி, குளம் ஊருணி இவற்றிக்கு நீர் ஊட்டும் வழி. |
| குட்டை – | மாடு முதலியன குளிப்பாட்டும் நீர் நிலை. |
| குண்டம் – | சிறியதாக அமைந்த குளிக்கும் நீர் நிலை. |
| குண்டு – | குளிப்பதற்கேற்ற ஒரு சிறு குளம். |
| குமிழி – | நிலத்தின் பாறையை குடைந்து அடி ஊற்றை மேலெழுப்பி வரச்செய்த குடை கிணறு. |
| குளம் – | ஊர் அருகே உள்ள மக்கள் குளிக்கப் பயன்படும் நீர் நிலை. |
| கூவம் – | ஒரு ஒழுங்கில் அமையாத கிணறு. |
| கூவல் – | ஆழமற்ற கிணறு போன்ற பள்ளம். |
| கேணி– | அகலமும், ஆழமும் உள்ள ஒரு பெருங்கிணறு. |
| சுனை– | மலையிடத்து இயல்பாயமைந்த நீர் நிலை. |
| நீராவி– | மைய மண்டபத்துடன் கூடிய பெருங்குளம். ஆவி என்றும் கூறப்படும். |
| பொய்கை– | தாமரை முதலியன மண்டிக்கிடக்கும் இயற்கையாய் அமைந்த நீண்டதொரு நீர் நிலை.. |

# போதையின் பாதையில் (உரையாடல்)



விமலா : வணக்கம் வாருங்கள் மாமா. வாருங்கள் என்ன களைத்துப் போனீர்கள் போல் உள்ளது.

மாமா : உண்மைதான் விமலா. வைத்திய சுகாதார அதிகாரி வேலையென்றால் இப்படித்தான். ஓயாத வேலை. நேரம் போவதே தெரிவதில்லை. எங்கே... அம்மா... அண்ணா எல்லோரும் போய்விட்டார்கள்.

விமலா : அம்மா கடைக்குப் போய்விட்டார். அண்ணா ரியூசன் வகுப்புக்குப் போய்விட்டான். இருங்கோ தேநீர் போட்டு எடுத்து வருகிறேன். (விமலா தேநீருடன் வருதல்)

மாமா : இன்று காலையில் இருந்து மாலை 4 மணி வரை எமது அலுவலகத்தில் போதைவஸ்த்து தடுப்பு சம்மந்தமான கருத்தரங்கு ஒன்று நடைபெற்றது.

விமலா : மாமா உங்களிடம் இது பற்றி கேட்க வேண்டும் என்றுதான் இருந்தேன். போதை வஸ்து என்று எதைக் கூறுகிறார்கள்.

மாமா : போதை என்றால் வெறி. மனிதனுக்கு இயல்பாக அல்லாமல் அவனுக்கு வெறியை அதாவது மன வெழுச்சியை ஏற்படுத்தும் இரசாயனப் பொருள்கள் அனைத்தும் போதைவஸ்து (போதைப்பொருள்)எனப்படும்.

விமலா : மதுபான வகைகள் மட்டும் தானா போதை வஸ்தில் அடங்குமா?

மாமா : ஆமாம். மதுபான வகைகளைப் பருகுவோர் வெறிகொள்வர். வெறி கொள்வோரின் புத்தி மயக்கமடையும். இதனால் அவர்கள் தங்களை மறந்து தவறான செயல்களில் ஈடுபடுவர். அவர்களது உடல் நலமும் பாதிப்புறும்.

விமலா : மதுபான வகைகள் மட்டும் தானா போதைவஸ்துக்கள்?

மாமா : இன்னும் இருக்கின்றன. போதையூட்டும். கஞ்சா. அபின் 'மாரிஜூவானா' கொக்கைன் கெரோயின் அம்பெற்றாமைன்ஸ் எனப் பல்வேறு வஸ்த்துக்களும் உண்டு. இவற்றைப் பயன்படுத்துவோர் தங்களை மறந்த நிலையில் பல்வேறு குற்றச் செயல்களில் ஈடுபடுவர். இவர்கள் தங்களையும் அழித்துக்கொண்டு பிறரையும் அழிக்கின்றார்கள். சமுதாயத்தையும் கெடுத்து விடுகிறார்கள். இந்தப் பழக்கத்துக்கு அடிமையானவர்களுக்கு இவை இல்லாமல் இருக்க முடியாத நிலை ஏற்படும்.

விமலா : அப்படியானால் இவர்கள் என்ன செய்வார்கள்?

மாமா : இவற்றுக்கு அடிமையானவர்கள் எப்பாடுபட்டாவது போதை வஸ்தை வாங்கிப் பாவித்தாக வேண்டும். என்ற நிலைக்குத் தள்ளப்படுவர். இதனால் தாங்கள் உடைமைகளை விற்பார்கள். இல்லையேல் திருடியாயினும் அவற்றை வாங்க முற்படுவர். இவர்கள் தங்களைக் கெடுத்துக் கொள்வதோடு தங்களைச் சார்ந்தவர்களையும் தொல்லைப்படுத்துவர் இதனால் சமுதாயச் சீர்கேடுகள் வளரும்.

விமலா : இவர்களால் சமுதாயத்துக்கு எத்தகைய துன்பங்கள் விளையும்.

மாமா : இவர்கள் போதைவஸ்து உண்ட நிலையில் பஞ்சமா பாதகங்களைச் செய்யத் தயங்க மாட்டார்கள். கொலை,கொள்ளை, கற்பழிப்பு என்று எதையும் செய்யத் தயங்கமாட்டார்கள். சமுதாயத்தில் யாரையும் இவர்கள் மதிப்பதில்லை. அண்மையில் எமதுநாட்டில் நடக்கின்ற சிறுமியர் மற்றும் பெண்களின் கொலைகள் கற்பழிப்புச் செயல்களுக்கு இந்த போதை வஸ்துபாவிக்கும் கூட்டத்தவரே முக்கிய காரணங்களாக உள்ளனர்.

விமலா : மாமா இத்தகையவர்களைத் திருத்தவே முடியாதா?

மாமா : ஏன் இல்லை. போதைவஸ்து பாவனையை சட்டங்கள் மூலம் மட்டும் தடுத்துவிட முடியாது. அதன் தீமைகளை மக்கள் நன்கு உணரவேண்டும். இதன் தீமைகள் பற்றி படித்தவர் முதல் பாமரர் வரை அறிந்திருக்க வேண்டும். இந்தப் பொருள்களை விற்கும் வியாபாரி களைக் கண்டு பிடித்து கடும் தண்டனை வழங்க வேண்டும். அதேவேளை மக்கள் மனதில் இதற்கு எதிரான கருத்துகளைப் புகுத்த வேண்டும். நமது அரசு இது தொடர்பாக எடுத்து வரும் நடவடிக்கைகளுக்கு மக்கள் பூரண ஆதரவு வழங்க வேண்டும். நமது நாடு உட்படப் பலநாடுகள் போதை வஸ்து குற்றங்க ளுக்கு கடும் தண்டனைகளை வழங்குகின்றன.

விமலா : உண்மைதான் மாமா மக்கள் நாட்டின் செல்வங்கள். அவர்கள் தீய வழியில் அழிவதை அனுமதிக்க முடியாது.

மாமா : உண்மைதான் விமலா. நாட்டின் வருங்கால செல்வங்களான இளம் சந்ததியினர் உயர்வகுப்பு மாணவர்கள் இதற்குப் பலியாகிறார்கள். நினைக்கவே வேதனையாக இருக்கிறது. சிறுவர்களையே அதிகமாக போதைவஸ்து விற்பனைக்குப் பயன்படுத்துகிறார்கள்.

விமலா : இந்த போதை வஸ்து பாவனையால் அவதியுறுவோருக்கு உதவும் வழி ஏதும் உண்டா மாமா?

மாமா: உண்டு போதைவஸ்த்துப் பாவனையால் அவதியுறுவோருக்கு சிகிச்சையளிக்கும் வசதியை அரசு செய்துள்ளது. அதுமட்டுமன்றி அவர்களுக்கு புனர்வாழ்வளிப்பதற்குரிய நடவடிக்கைகளையும் மேற்கொண்டுவருகிறது. நேரம்போய்விட்டது. இன்னொரு முறை வந்து உன் அண்ணனுக்கும் இதுவிடயம் பற்றி கூற வேண்டும். அதுவும் அவன் உயர்தரம் படிக்கிறான். இதுபற்றி அவன் அறிந்தும் வைத்திருப்பான்.

விமலா : மாமா நன்றி. நீங்கள் கூறியவற்றை நான் மனதில் பதித்துள்ளேன். பாடசாலையிலும் இந்தக் கருத்துகளை வலியுறுத்துவேன் மாமா. நன்றி சென்று வாருங்கள் மாமா.

## வழிகாட்டுவோம்





## அது ஒரு பரம ரகசியம்

ஒருமுறை பெஞ்சமின் டிஸ்ரெலி, ஜெர்மன் நாட்டுத் தலைவர் பிஸ்மார்க்கைச் சந்திக்கச் சென்றிருந்தார். டிஸ்ரெலி பிஸ்மார்க்கைப்பற்றி முன்னதாகவே ஒரு தகவல் கேள்விப்பட்டிருந்தார்.

அதாவது தனக்கு விரும்பத் தகாதவர்கள் யாராவது தன்னைப் பார்க்க வந்தால், பிஸ்மார்க் விரைவிலேயே அவர்களுக்குவிடைகொடுத்து அனுப்பி விடுவாராம். இது எவ்வாறு சாத்தியமாகிறது? இதன் ரகசியம் என்ன? என்று டிஸ்ரெலி பிஸ்மார்க்கைச் சந்தித்த போது கேட்டுவிட்டார். "அது ஒன்றும் பெரிய விடயம்மில்லை. என்னுடன் பேசிக்கொண்டிருக்கிறவர்கள் தேவைக்கு அதிகமாக நேரத்தை என்னிடம் எடுத்துக்கொள்கிறார்கள் என்று என் மனைவி நினைத்தால் என்னை எங்கள் சக்கரவர்த்தி உடனே சந்திக்க விரும்புவதாக சொல்லச் சொல்லி ஒரு பணியாளை என்னிடம் அனுப்பி வைப்பாள். சக்கரவர்த்தியை நான் சந்திக்க வேண்டியிருக்கிறது எனத் தெரிந்தவுடன் வந்தவரும் தானாகவே உடனே எழுந்துபோய் விடுவார்" என்றார் பிஸ்மார்க். அவர் இவ்வாறு விளக்கம் சொல்லிக்கொண்டு இருக்கும்போதே கதவு தட்டப்பட்டு பணியாள் ஒருவன் உள்ளே நுழைந்தான். அவன் பிஸ்மார்க்கைப் பார்த்துச் சொக்க தகவல் "சக்கரவர்த்தி உடனே உங்களை சந்திக்க விரும்புகிறார்" என்பதாகும்.

## செய்தித்தாள்

உலகில் நிமிடத்துக்கு நிமிடம் பல நிகழ்வுகள் சம்பவங்கள் நிகழ்கின்றன. எல்லாவற்றையும் நாம் அறிய முடிவதில்லை. ஆயினும் முக்கிய நிகழ்வுகளை நாம் அறிந்து கொள்ள வேண்டும்.



அவைகளை எப்படி அறிகிறோம்? வானொலியில் கேட்கிறோம். தொலைக்காட்சியில் பார்க்கிறோம். கேட்கிறோம் செய்தித்தாள்களில் வாசிக்கிறோம்.


நாம் தினமும் நடைபெறும் முக்கிய நிகழ்வுகளை அறிந்து கொள்வதற்கு செய்தித்தாள்கள் உதவுகின்றன. செய்தித் தாள்கள் எழுத்து வடிவில் செய்திகளையும், தகவல்களையும் தருகின்றன.

செய்தித்தாளை செய்திப் பத்திரிகை என்றும் கூறுவர். தினமும் வெளிவரும் செய்தித்தாளை தினசரி, நாளிதழ் என்றும் கூறலாம். வாரம் ஒருமுறை வெளிவருவதை வாரப் பத்திரிகை, வார இதழ் என்றும் கூறலாம். செய்தித்தாள்கள், செய்திகளையும், தகவல்களையும் படங்களுடன் தருகின்றன, இவற்றில் செய்திகளைத் தவிர கட்டுரைகளும் வெளிவருகின்றன.

வாரப் பத்திரிகைகளில் செய்திகளோடு கட்டுரைகள், கதைகள், கவிதைகள் போன்றவையும் இடம் பெறுகின்றன. சிறுவர்களுக்கான தனிப் பகுதிகளும் பத்திரிகைகளில் இடம் பெறுகின்றன.

அறிவை வளர்த்துக் கொள்ளச் செய்தித்தாள்கள் உதவுகின்றன. புதிய புதிய விடயங்களை நாம் அதன் மூலம் தெரிந்து கொள்ளலாம். மாணவர்களாகிய நாம் பத்திரிகைகளை வாசித்து பயன் பெறுவோம்.

மகிந்த அரசால் கடந்த 2006 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 14ஆம் நாள் வள்ளிபுனம் செஞ்சோலை சிறுவர் இல்லம் மீது மேற்கொள்ளப்பட்ட வான் தாக்குதலில் 61 மாணவிகள் கொல்லப்பட்ட துயரம் மிக்க நிகழ்வின் 12 ஆண்டுகள் பூர்த்தி இன்றாகும். அதனையொட்டி இந்த ஆக்கம் பிரசுரமாகிறது.



# தமிழ் மக்களின் நினைவுகளில் நிலைத்துவிட்ட மகிந்த அரசின் செஞ்சோலைப் படுகொலைகள்

ஈழத்தமிழ்மணி

செஞ்சோலை என்ற வார்த்தை ஈழத் தமிழர்களின் நெஞ்சங்களில் என்றும் நிலைத்திருக்கும். 2006ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 14ஆம் திகதி அரச வான் படையினர் அதிகாலை வேளையில் வள்ளிபுனத்தில் அமைத்திருந்த அந்த செஞ்சோலை வளாகத்தின் மீது பல அகோரமான குண்டுகளை வீசி அங்கிருந்த 61 மணிகளை ஈவு இரக்கமின்றிக் கொன்று குவித்த நினைவுநாள். ஒவ்வொரு வருடமும் ஓகஸ்ட் 14ஆம் நாள் நினைவு கூரப்படுகின்றது. பெற்றோர்களை இழந்த நிலையில் உள்ள சிறுவர்களை கண்களை இமைகள் காப்பதுபோன்று பாதுகாத்து வாழவைத்துக்கொண்டிருந்த ஒரு அன்புச்சோலையே செஞ்சோலையாகும்.

பொதுவாக ஈழத் தமிழர்கள் மீது போரைத் திணித்த சிங்கள ஆட்சியாளர்கள் 1983 இலிருந்து விடுதலைப்புலிகளை அழிக்கிறோம் என்ற போர்வையில் சிறு வயது மாணவர்கள் தொடக்கம் பல்கலைக்கழக மாணவர்கள்வரை பல நூற்றுக் கணக்கானவர்களைப் படுகொலை செய்த வரலாற்றுச் சம்பவங்கள் என்றுமே மறக்கமுடியாதவை.

2005ஆம் ஆண்டின் வருட இறுதிப் பகுதியில், நாட்டின் புதிய அரசத் தலைவராக பொறுப்பேற்றுக்கொண்ட முன்னைநாள் அரசத் தலைவரான மகிந்தராஜபக்ச ஆட்சிக்கு வந்து மூன்று மாதங்களுக்குள் திருகோணமலை நகரில் 5 உயர்கல்வி மாணவர்களை அரச படைகள் காட்டு மிராண்டித்தனமாகச் சித்திரவதைசெய்து படுகொலை செய்த சம்பவத்துடன் ஆரம்பமான மாணவர்கள் மீதான படுகொலைச் சம்பவங்களில் ஏராளமான மாணவர்களும் அடங்குவர்.

பாடசாலை மாணவர்களை போர் இடம்பெற்ற காலத்தில் படுகொலை செய்த சம்பவங்களில் ஒவ்வொரு அரசத் தலைவர்களுக்கும் பொறுப்புண்டு. இன்றுவரையில் மாணவர்கள் போரின் போது கொல்லப்பட்டதற்கு நியாயமான காரணங்கள் கண்டறியப்படவில்லை. வடமராட்சி கிழக்கு நாகர்கோயில் பகுதியில் உள்ள பாடசாலையில் கல்விகற்றுக்கொண்டிருந்த மாணவர்கள்மீது முன்னைநாள் அரச தலைவரான சந்திரிகா அம்மையாரின் ஆட்சியின்போது வான்படைகள், திட்டமிட்டு குண்டு வீச்சுத் தாக்குதல்களை நடத்தி பல மாணவர்களைப் படுகொலைசெய்திருந்தன. அந்தப்படுகொலைகளுக்கான இழப்பீடு எதுவும் இதுவரை எந்த அரசாலும் வழங்கப்பட்டதில்லை.

**வள்ளிபுனத்தில் அனாதரவுச் சிறுவர்களின் புகலிடமாகத் திகழ்ந்ததே செஞ்சோலை சிறுவர் இல்லம்**

முல்லைத்தீவு மாவட்டம், வள்ளிபுனத்தில் செஞ்சோலைச் சிறுமிகள் இல்லம் அமைந்திருந்தது. நூற்றுக்கணக்கான சிறுமிகளைக் கொண்ட செஞ்சோலை எந்நேரமும் குதூகலமாகவே விளங்கும். விடுதலைப்புலிகளினால் தத்து எடுக்கப்பட்ட பிள்ளைகளாக பொறுப்பெடுக்கப்பட்டு பூஞ்சோலைபோல் மலர்ந்து மணம் வீசிக் கொண்டிருந்த செஞ்சோலை வளாகத்திற்கென தனி வரலாறுண்டு.

இலங்கை அரசால் ஈழத் தமிழினத்தின்மீது மேற்கொள்ளப்பட்ட போரின்போது ஆரம்ப காலத்திலிருந்து தமது பெற்றோரையிழந்த சிறுவர்களுக்கு உரிய பாதுகாப்பு அளித்து அவர்களைத் தங்கவைத்து எந்தவித குறையும் இல்லாமல் நல்ல முறையில் பராமரித்து அடைக்கலமளிக்கின்ற நோக்கில் தமிழீழ விடுதலைப்புலிகளினால் உருவாக்கப்பட்டு, செஞ்சோலை என்ற பெயரிட்டு அவர்களுக்கு வாழ்வளித்து வந்த காப்பகமே செஞ்சோலை ஆகும்.

வண்ணத்துப் பூச்சிகளாக துங்களைமறந்து வட்டமடிக்கின்ற, சுதந்திர வாழ்வுக்குள் சிறகடித்துப் பறக்கின்ற மழலைகள் வாழ்வகம் 1991ஆம் ஆண்டு ஜூலை மாதம் 10ஆம் திகதி 15 மாணவர்களுடன் யாழ்ப்பாணத்தில் விடுதலைப்புலிகளால் முதன்முதலில் ஆரம்பிக்கப்பட்டது. செஞ்சோலை ஆரம்பிக்கப்பட்டது தொடக்கம் நூற்றுக்கணக்கான சிறுவர்கள் அதில் இணைக்கப்பட்டனர். மாணவச் சிறார்களின் அதிகரிப்புக் கமைய மாணவர்களின் பாதுகாப்புக்கருதி 1991ஆம் ஆண்டு அந்த இல்லம் கண்டிலிப்பாய் என்ற இடத்துக்கு மாற்றப்பட்டது. யாழ்குடா மீதான போருக்குப் பின்னர் 1996ஆம் ஆண்டு முல்லைத்தீவு வள்ளிபுனம் என்ற இடத்தில் நிரந்தரமாக அமைக்கப்பட்ட செஞ்சோலை வளாகத்தில் சகல வசதிகளுமுடைய காப்பகத்தில் ஏற்கனவேயிருந்த பிள்ளைகளுடன் இன்னும் பலசிறுவர்கள் இணைக்கப்பட்டு செஞ்சோலை செயற்பட்டுக்கொண்டிருந்தது.

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவரான வே.பிரபாகரனின் நேரடிக் கண்காணிப்பில் இயங்கி வந்த செஞ்சோலை சிறுவர்இல்லத்தில் வாழ்ந்த சிறுவர்கள், ஈழத் தமிழினத்தின் இளம் சந்ததியினரை வளர்த்து உரிய அந்தஸ்துடன் மதிப்பாக ஆளுமையுள்ளவர்களாக உருவாக்க வேண்டும் என்ற எண்ணத்தின் அடிப்படையில் செயற்பட்டுக்கொண்டிருந்தது.

வள்ளிபுனம் செஞ்சோலை வளாகத்தில் வதிவிடப்பயிற்சிப் பட்டறைகள் . நடப்பது வழமையான செயற்பாடொன்றாகும். பெரும் வளாகமானதனாலும், வசதிகள் பல இருந்தமையினாலும், மாணவிகள் தங்கியிருந்து பயிற்சிகளைப் பெற்றுக் கொள்வதற்கு பொருத்தமாக அமைந்திருந்தது. ஐ.நா அமைப்புக்களூடாக பயிற்சிப் பட்டறைக்கான இடமாகவும், இலங்கை அரசில் பதிவு செய்யப்பட்டிருந்தது. பல பயிற்சிப்பட்டறைகள் செஞ்சோலை வளாகத்தில் இடம்பெற்றுள்ளன.

**தலைமைத்துவப் பயிற்சியின் போது அரசுமேற்கொண்ட திட்டமிட்ட வான்தாக்குதல்**

வன்னிப் பிரதேசத்திலுள்ள பல பாடசாலை மாணவர்களின் ஐந்நூறு பேரை இணைத்து தலைமைத்துவப் பயிற்சி நெறியொன்று பாடசாலைச் சமூகத்தினரால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. நூற்றுக்கணக்கான மாணவர்கள் 18 பாடசாலைகளிலிருந்து உள்வாங்கப்பட்டிருந்தனர். இயற்கை இடர்களிலிருந்து பாதுகாப்புத் தேடும் நடவடிக்கைகள், பால் சமத்துவம், குழுவேலை, நேர முகாமைத்துவம், தன்னம்பிக்கையைக் கட்டியெழுப்பும் செயற்பாடுகள், தலைமைத்துவத்துக்கான மேம்பாடு, ஆளுமைவிருத்தி, இணைப்பாட விதானச் செயற்பாடுகள் போன்றவற்றுக்கான பயிற்சிகள் பத்துநாள் வரையில் வழங்கப்படுவதற்கான ஏற்பாடுகள் தயாராகிக் கொண்டிருந்தன.

2006ஆம் ஆண்டு ஒகஸ்ட் 11ஆம் திகதி உள்வாங்கப்பட்டிருந்த மாணவியர்களுக்கான வதிவிடப் பயிற்சி முழுவீச்சில் ஆரம்பமாகியது. தொடர்ந்து நான்காம் நாளான 14.08.2006 திங்கட்கிழமை தீ மற்றும் மின் இடர்களிலிருந்து பாதுகாப்புப் பெறல் குழுவேலை போன்ற பயிற்சிகளை வழங்க துறை சார்ந்த நிபுணத்துவம் பெற்ற ஆசிரியர்கள் ஆயத்தமாகிக் கொண்டிருந்த அந்தக் காலைப் பொழுதுவேளையில் வெண் சிட்டுக்கள்போல் மாணவிகள் வளாகத்தில் ஒன்றுகூடிக் கொண்டிருந்தனர்.

வன்னிப் பரப்பிலிருந்து ஒலிப்பரப்பாகும் புலிகளின் குரல் வானொலிச் செய்தியையும் செவி மடுக்க மாணவிகள் தவறுவதில்லை. இரவு பகலாக வன்னிப் பெருநிலப் பரப்பில் போர் மேகங்களால் சூழப்பட்டிருந்த வேளை, நாளாந்தம் நடக்கின்ற சம்பவங்களை வானொலிச் செய்தி மூலமாக அறிய ஆவல் கொண்டு காலை 7மணிக்கு வாசிக்கப்படுகின்ற செய்திகளை கேட்டுக்கொண்டிருந்த வேளையில் கொடூரமான அந்தத் துயரச் சம்பவம் இடம்பெற்றது.

குதூகலத்துடன் காலைப்பொழுதை வரவேற்றுக்கொண்டு தங்களது பயிற்சி நடவடிக்கைக்கு ஆயத்தமாகும் வேளையில், எதிர்பாராமல் வான்பரப்பில் வட்டமிட்டுக்கொண்டிருந்த கிபீர் குண்டு வீச்சு விமானங்கள் செஞ்சோலை வளாகத்தை நோக்கி மூர்க்கத்தனமாக மாறி மாறி குண்டு வீச்சுத் தாக்குதல்களை நடத்தியதில் அவ்விடத்திலேயே 61மாணவிகள் உடல் சிதறிப் பலியானார்கள். 150இற்குமேற்பட்ட மாணவிகள் படுகாயங்களுக்குள்ளானார்கள். பலமாணவிகள் தங்களது அவயவங்களையும் இழந்திருந்தனர்.

**தாக்குதலை எதிர்பார்க்காததால் ஏற்பட்ட அனர்த்தங்களின் இழப்பு**

அதிகாலை 4மணியிலிருந்து வேவு விமானம் தாழப்பறந்து வள்ளிபுனம், புதுக்குடியிருப்பு பகுதியை வட்டமிட்டுக்கொண்டிருந்ததை அவதானித்த மக்கள், ஏதோ அசம்பாவிதம் நடக்கப் போகின்றது என்பதையும் உணர்ந்து கொண்டு தங்களைச் சுதாகரித்துக் கொண்டவாறு பாதுகாப்புத் தேடுகின்றனர். அச்சநிலை அதிகரித்துக் கொண்டிருக்க செஞ்சோலை வளாகத்திலும் பயப்பீதி ஆட்கொண்டிருந்தது. சிறுவர் இல்லம் என்றபடியினால் அப்படி எதுவும் நடப்பதற்கு வாய்ப்பில்லை என்ற அபிப்பிராயம் ஒரு பகுதியினர் மத்தியில் இருந்தாலும், வான்படைகள் மாணவர்கள் என்றும் பாராது திட்டமிட்டுத் தாக்குதல்களைத் தொடுக்கலாம் என்றும் நம்பவேண்டியிருந்தது.

அரசப் படைகள் மாணவிகளை கொன்றொழிக்க வேண்டுமென்ற எண்ணத்துடனேயே செஞ்சோலையை தேர்ந்தெடுத்து கொடூரமான படுகொலையைத் திட்டமிட்டு செய்து முடித்தன. வளாகமெங்கும் புகை மண்டலம் மூடியிருக்க வளாக மண் செங்குருதியினால் ஆறுபோல் தேங்கியிருக்க, மாணவிகளது உயிரற்ற உடல்கள் குருதி வெள்ளத்தில் மிதந்தன. பல மாணவிகள் குண்டு வீச்சிலிருந்து தவழ்ந்தும், ஊர்ந்தும் வளாகத்திலிருந்து வேலியை ஊடறுத்து தப்பிச் சென்றனர்.

மகிந்த அரசினால் திட்டமிட்டு நடத்தப்பட்டதே செஞ்சோலை வளாக மாணவிகள் மீதான படுகொலையாகும். செஞ்சோலை வளாகம் சிறுவர்களைப் பராமரிக்கின்ற இடமெனத் தெரிந்திருந்தும், தமிழ் மக்களை அழிப்பதில் மாணவிகளையும் தேடி அழிக்க வேண்டும் என்ற ஈவு இரக்கமற்ற எண்ணத்துடனேயே செஞ்சோலை வளாகத்தை அரசு தேர்ந்தெடுத்தது என்றே கூறவேண்டும்.

மகிந்த அரசு 61 மாணவிகளையும் கொன்றொழித்துவிட்டு சில மணிநேரத்தில் பன்னாடுகளுக்கு சிறுவர் போராளிகளையும், அவர்கள் பயிற்சி எடுத்த முகாமையும் குண்டு வீச்சுத் தாக்குதல் மூலம் முற்றாக அழித்துவிட்டோமென பரப்புரை செய்துகொண்டிருந்தனர். அரசு தனது ஊடகங்களில் மும்மொழி களூடாகவும் தீவிரமாக பரப்புரைகளை மேற் கொண்டிருந்தது.

**தாக்குதலுக்கு ஒரு போதுமே பொறுப்பேற்காத சிங்கள ஆட்சித் தலைமைகள்**

செஞ்சோலை வளாகத்தில் மாணவிகளே அரசினால் கொல்லப்பட்டுள்ளனர் என்பதை ஐக்கிய நாடுகள் சபையின் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவும், யுனிசெப் நிறுவனமும் உறுதி செய்தமையினாலும், அவர்களே போதியளவு சாட்சியங்களாக இருந்தமையினாலும், மகிந்த அரசு கூறிவந்த உண்மைக்கு மாறான பரப்புரைகளை உலக நாடுகள் முற்றாக நிராகரித்திருந்தன.

இந்தப்படுகொலையைத் தென்னிலங்கையிலுள்ள சில தரப்பினர்கூடக் கண்டித்திருந்தனர். மாணவர்களையும் விட்டு வைக்கக்கூடாது என்ற எண்ணம் கொண்ட மகிந்த அரசு திட்டமிட்டு, தனது ஈவு இரக்கமற்ற படுகொலையைச் செய்து முடித்திருந்தது என்பது ஒரு மனிதப் பண்பாடற்ற செயலாகக் கொள்ளத்தக்கது.

இன்று, அந்த 61 மாணவர்களது படுகொலையை நினைவு கூர்ந்து வள்ளிபுனத்தில் அஞ்சலி செலுத்துகின்ற அவர்களது குடும்பத்தவர்கள், உறவினர்கள் இதற்கான நீதி விசாரணை எதுவுமே மேற்கொள்ளப்படவில்லை என்பதனை வருடா வருடம் உலகத்துக்குப் பதிவு செய்து வருகின்றனர். ஆயினும், அந்தப் படுகொலைகளுக்கான பொறுப்பை சிங்கள ஆட்சியாளர்கள் எவரும் இதுவரை ஒப்புக்கொண்டதில்லை. ஆட்சிமாற்றம் ஏற்பட்டு பத்து ஆண்டுகள் காலம் கடக்கும் இன்றைய நிலையிலும், தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களாலும் வடக்கு மாகாண சபையினராலும் இந்தப்படுகொலை சம்பந்தமான விசாரணையின் அவசியத்தை வலியுறுத்தி என்றவொரு தீர்மானம் தானும் கொண்டு வரப்படவில்லை. வெறுமனே ஆண்டுதோறும் செஞ்சோலை வளாக மாணவிகள் படுகொலை நினைவு நாள் ஒப்புக்கு நினைவுகூரப்படும் ஒன்றாகவே காணப்படுகின்றது. குறித்த படுகொலை இடம்பெற்று 12 ஆண்டுகளாகியும், அன்றைய படுகொலைச் சம்பவத்தில் காயப்பட்டு உயிர் தப்பிய சில மாணவிகள் உறவினர்கள் இன்றும் அதற்கு சாட்சியாக இருப்பதனால், ஈழப் போராட்டவரலாற்றில் படுகொலை வரிசையில் செஞ்சோலை மாணவர்கள் படுகொலையும் முக்கியமானதாகவும், பெரும் துயரம் கொண்டதாகவும் அமைந்துள்ளது.



World Class UK Degree @ICBT Jaffna Campus

EQAA

Apply now for New Intake 2018

ICBT HND IN BUSINESS MANAGEMENT

Finance/ Marketing/ Human Resource Management

TVEC REGISTERED

Duration
- Full Time: 18 Months (Mon-Fri)
- Part Time: 2 Years (Sat & Sun Evening)

Part Time Entry qualifications: GCE A/L + Work Experience

Cardiff Metropolitan University

BSc (Hons) BUSINESS MANAGEMENT

Offered by Cardiff Metropolitan University, UK

Duration
- 1 year

UGC RECOGNIZED

Entry Qualifications
- Higher National Diploma in Business Management or any other accepted programs.

Why Study ICBT ?
- Qualified Lecturer Panel
- High Quality Learning Experience
- Cafeteria/Library/Computer Laboratory/ Recreation Area/Modern Lecture Halls.
- Easy Payment schemes


Week End Part Time Classes

0770 746 553 | 021 477 7888

ICBT CAMPUS JAFFNA
580, Hospital Rd., Jaffna
Tel: (+94)214 777 888
Fax: (+94)654 777 890
Email : jaffna@icbtcampus.edu.lk

National Business Excellence 2016 | 2015 | 2014 | 2013
Gold Award Winner Education Service Sector
www.icbt.lk





World Class British IT Degree Programme @ ICBT Jaffna Campus

Apply Now For New Intake 2018

EQAA

ICBT DUAL HNDs Software Engineering + Computing

Duration 2 Years

Cardiff Metropolitan University

UGC RECOGNIZED

BSc (Hons) SOFTWARE ENGINEERING

Offered by Cardiff Metropolitan University, UK

Duration 1 year

Entry Qualifications
Higher National Diploma in Computing/ IT/ Networking/ Systems Development or any other accepted programs.

Why Study ICBT ?
- Qualified Lecturer Panel
- High Quality Learning Experience
- Cafeteria/Library/Computer Laboratory/ Recreation Area/Modern Lecture Halls.
- Easy Payment schemes

Week End Part Time Classes

A/L | O/L — HND — BSc    DEGREE COMPLETION IN SRI LANKA

0770 746 553 | 021 477 7888

ICBT CAMPUS JAFFNA
580, Hospital Rd., Jaffna
Tel: (+94)214 777 888
Fax: (+94)654 777 890
Email : jaffna@icbtcampus.edu.lk

National Business Excellence 2016 | 2015 | 2014 | 2013
Gold Award Winner Education Service Sector
www.icbt.lk


## மரண அறிவித்தல்

மலர்வு 11 . 07 . 1989



உதிர்வு 12 . 08 . 2018

### செல்வி ரஜனா செல்வரட்ணம்

(மக்கள் வங்கி புதுக்குடியிருப்பு கிளை உத்தியோகத்தர்)

முல்லைத்தீவு, புதுக்குடியிருப்பைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்வி ரஜனா செல்வரட்ணம் (மக்கள் வங்கி புதுக்குடியிருப்பு கிளை உத்தியோகத்தர்) 12.08.2018 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் செல்வரட்ணம் - யோகலட்சுமி தம்பதிகளின் அன்பு மகளும், ரோசாந்தனின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (14.08.2018) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் புதுக்குடியிருப்பு இந்து மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

(33030)(11.17)

0713525350, 0776567764 (புகையிரத பொறியியலாளர்)

## நீங்கா நினைவலைகள்

24 ஆம் ஆண்டு — 21 ஆம் மாதம்

தோற்றம் 05.01.1968



மறைவு 10.05.1994
திதி - சஷ்டி (14.08.2018)



தோற்றம் 05.03.1950
மறைவு 04.11.2016

அமரர் தம்பிஐயா ரவிச்சந்திரன் (ராசன்) — திருமதி தவமணி ஜெயராஜா

அன்புத் தெய்வங்களே! அழகு ஓவியங்களே
கல்லைக் களஞ்சியமே பாசத்தின் பங்காளிகளே!
எம்குறை சொல்லியழ நீங்கள் இங்கில்லையே

நினைவில்....

நவேந்திரகிரி,
இணுவில் மேற்கு, இணுவில்.

குடும்பத்தினர்.

## 15 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

### அமரர் சின்னத்தம்பி வடிவேலுப்பிள்ளை

(பங்குதாரர் நியூ சோபிதா நகைமாடம்)




தோற்றம் 08.10.1939 — மறைவு 01.08.2003

திதி:- 14.08.2018

அன்புத் தெய்வமே!
ஆண்டுகள் பதினைந்து ஓடி மறைந்தாலும்
ஆறிடுமோ எங்கள் துயர்
இதயத்தை விட்டகலா நினைவுகளுடன்
இறைவனை வேண்டுகின்றோம்
உங்கள் ஆத்ம சாந்திக்காய

மனைவி, பிள்ளைகள்,
மருமகன்மார், பேரப்பிள்ளைகள்.
"திருவேரகம்"
சுதுமலை தெற்கு, மானிப்பாய்
நியூ சோபிதா நகைமாடம்
74/1, (184), கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

# 35ஆவது வருட நினைவஞ்சலி



**மலர்வு**
**17 • 04 • 1958**

**உதிர்வு**
**14 • 08 • 1983**

## குலசேகரம் தேவசேகரம் (ஒபரோய் தேவன்)

எனது அருமை தேவன் அண்ணாவே
உன்னை நினைக்காத நாளில்லை,
நிமிடங்களில்லை..
எம்முடன் நீ இணைந்தாய், வளர்ந்தாய்.
தங்கண்ணாவின் பாசறையில் புடம்
போடப்பட்டவனே..
மக்களின் சுதந்திரத்திற்காக எல்லா வசதிகளையும்
துறந்தவனே...
சுதந்திரத்தை பறித்தவர்களுக்கு பலியானவனே...
நீ மரணிக்கவில்லை... எல்லார் மனதிலும்
வாழ்கிறாய்.
நீ எம்முடன் வாழ்கிறாய், எம்முடனே வாழ்வாய்...



அம்மா,
அக்கா, தம்பி, தங்கைகள்,
குடும்ப உறுப்பினர்கள் மற்றும்
உற்றார் உறவினர்கள்.

## 6ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர்
**நாகலிங்கம் தியாகராசா**



பிறப்பு
04.06.1944

இறப்பு
21.07.2012

திதி:- திருதியை

உயிருக்கு உயிராக இருந்து எமைக்காத்த எமது அப்பாவே!
ஆறு ஆண்டுகள் ஆனாலும்
ஆறவில்லை எங்கள் துயரம் அப்பா...
உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

சைவப்பாடசாலை லேன்,
கோண்டாவில் மேற்கு.
(CS/18999)(11,17)

என்றும் உங்கள் நினைவில்
குடும்பத்தினர்.

## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு

கடந்த 14.07.2018 சனிக்கிழமை
இறைபதமடைந்த எமது அன்புக்குரிய
அமரர்
**வளர்மதி குமாரசாமி**
(ஓய்வுநிலை ஆசிரியை - உரும்பிராய்
சந்திரோதயா வித்தியாசாலை)



அவர்களின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் நாளை (15.08.2018) புதன்கிழமை நண்பகல் 12 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்பசகிதம் வருகை தந்து அன்னாரது ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

**இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.**

50/4, பலாலி வீதி,
உரும்பிராய் கிழக்கு, உரும்பிராய்.
(CS/18899)(11,17)
குடும்பத்தினர்.

## வேலை ஆள்கள் தேவை

யாழ். நகரில் உள்ள புடைவை விற்பனை நிலையத்துக்கு அனுபவமுள்ள, பழகவிரும்பும் ஆண், பெண் விற்பனையாளர் உடன் தேவை.
மேலும் சிட்டை எழுதுனர் பெண்கள் உடன் தேவை.
**தொடர்பு - 077 348 2634, 077 526 9182**

## அற்றோனி தத்துவ பத்திரத்தை இரத்துச் செய்தல்

***இத்தால் சகலருமறிய!***

சாவகச்சேரி வடக்கு, தற்போது கனடாவில் வசிக்கும் செல்லத்தம்பி பாலேந்திரகுமாரும் பாலேந்திரகுமார் சுஜந்தினியும் ஆகிய நாங்கள் எங்களுக்குச் சொந்தமான சாவகச்சேரி வடக்கு, மடத்தடியில் அமைந்துள்ள "கரடிக்குழி" எனும் ஆதனத்தை பராமரிக்கவும் அது தொடர்பிலான சில கருமங்களை ஆற்றுவதற்குமாக மட்டுப்படுத்தப்பட்ட அற்றோனி தத்துவத்தை சாவகச்சேரி வடக்கு, மடத்தடியைச் சேர்ந்த நடராசா இராசேந்திரம் என்பவருக்கு வழங்கியிருந்தோம் என்றும் தற்போது குறித்த அற்றோனி தத்துவப்பத்திரம் என்னால் இரத்துச் செய்யப்படுகின்றதென்றும் அறிவிக்கிறேன்.

குறித்த நடராசா இராசேந்திரம் என்பவர் இனிமேல் அற்றோனி தத்துவக்காரர் அல்ல என்றும் எம் சார்பாக அவரால் செய்யப்படும் எக்கருமங்களுக்கும் நாம் பொறுப்பாளி அல்ல என்றும் வெளிப்படுத்தி அறிவித்தல் விடுக்கின்றோம்.

**செல்லத்தம்பி பாலேந்திரகுமார்,**
**பாலேந்திரகுமார் சுஜந்தினி**

(CS 1901)(15/17)

## ஆதார வைத்தியசாலை - சாவகச்சேரி நோயாளர் நலன்புரி சங்கம்

**இவ் வைத்தியசாலையின் நீரிழிவுச் சிகிச்சை நிலையத்திலும் நோயாளர் நலன்புரி சங்கத்திலும் உதவியாளராகக் கடமை புரிவதற்கு கீழ்வரும் தகைமையுடையவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றது. ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.**

**01) கல்வித் தகைமை -**
- க.பொ.த.சாதாரணதரம் தமிழ், கணிதம், ஆங்கில பாடத்துடன் 06 பாடங்களில் சித்தி
- க.பொ.த. உயர் தரம் சித்தி
- தமிழ், ஆங்கில தட்டச்சுடன் கணினி அறிவு

**02) வயது - 18 - 35 வருடங்கள்.**

தங்களது சுயவிவரத்துடன் விண்ணப்பங்களை **தலைவர் / செயலாளர் நோயாளர் நலன்புரி சங்கம், ஆதார வைத்திய சாலை, சாவகச்சேரி** என்ற முகவரிக்கு 27.08.2018 ஆம் திகதிக்கு முன் நேரடியாகவோ அல்லது பதிவுத் தபால் மூலமோ அனுப்பி வைக்கப்படல் வேண்டும். மாத வேதனம் பேசித் தீர்மானிக்கப்படும்.

**தலைவர்/ செயலாளர்,**
நோயாளர் நலன்புரி சங்கம்,
ஆதார வைத்தியசாலை,
சாவகச்சேரி.
**14.08.2018**
(IN/7521)(11,17)

## கார் விற்பனைக்கு

**4 - XXXX** என்ற இலக்கமுடைய கறுப்புநிற மைனர் கார் விற்பனைக்குண்டு. (CS1992)(11,17)
077 036 6344, 077 036 5762

## உணவகம் ஒன்றிற்கு வேலையாள்கள் தேவை

* **உணவு பரிமாறுபவர்**
* **உணவு பொதி செய்பவர்**
ஆண், பெண் இருபாலாரும் விரும்பத்தக்கது.
**தொடர்பு - 077 4652 860**

## தேவை

- மிக்ஷர் கம்பனிக்கு வேலை தெரிந்த பெண்கள் தேவை.
- வீட்டுக்கு வந்து ஆங்கிலமொழி மூலம் கற்பிக்கக் கூடிய ஆசிரியர் தேவை.

நீர்வேலி தெற்கு (CS/19980)(11,17)
077 005 0344, 077 483 7702

## கடை வாடகைக்கு

யாழ்ப்பாணம், கச்சேரி நல்லூர் பிரதான வீதயிலிருந்து 50m நடை தூரத்தில் உள்ள (நாயன்மார் வீதி) ஒரு வாயில் கொண்ட இரண்டு கடைகள் வாடகைக்கு கொடுக்கப்படும். மற்றும் பலசரக்கு கடையாகவோ, தையல் கடையாகவோ அல்லது பிரத்தியேக வகுப்புக்கள் நடாத்தப்படுவதற்கு உகந்த இடமாக உள்ளது.
**தொடர்பு - 077 805 1655**

## காணி விற்பனைக்கு

பலாலி வீதியில் அமைந்துள்ள விவசாய பண்ணைக்கு அருகில் நில.பர 5 குளி 00.05 விஸ்தீரணமுடைய காணி கட்டடத்துடன் விற்பனைக்கு உண்டு.
தொடர்பு: **076 702 3565**
குறிப்பு: திருமணமண்டபம் மற்றும் வைத்தியசாலைகளுக்கு உகந்த இடம்

உதயன்
**விளம்பர தொடர்புகளுக்கு,**
**advt@uthayan.com,**
**021493 1111**

**SHARP**
போட்டோ கொபி மற்றும் பிரின்டர் பாவனையாளர்களுக்கு

கீழ் குறித்த இலக்கங்களுடன் உங்களது அனைத்து சேவைகள் மற்றும் டோனர் தேவைகளுக்காக தொடர்புகொள்ளவும்

**011 788 7070**
(சேவை)

**011 788 7080**
(விற்பனை)

**011 788 7090**
(டோனர்)

இலங்கையில்
**SHARP**
போட்டோ கொபியர் மற்றும் பிரிண்டர்ஸ்களுக்கான அங்கீகாரமுடைய விநியோகஸ்தர்

fintek
**Fintek Managed Solutions (Pvt)Ltd**
(Fully Owned Subsidiary of Gestetner of Ceylon PLC)
இல 02, சென். பொனிக் மாவத்தை, கொழும்பு 13, இலங்கை

011 788 7000 fintek@gestetnersl.com 0112 431 172



பொன்னாலை

## ஸ்ரீ வரதராஜப் பெருமாள் தேவஸ்தானம்
## ஆவணி மகோற்சவம் - 2018

| | |
|---|---|
| கொடியேற்றம் | - 17.08.2018 வெள்ளிக்கிழமை நண்பகல் 12.10 மணி |
| வரலட்சுமி விரதம் | - 24.08.2018 வெள்ளிக்கிழமை காலை 7.00 மணிமுதல் வரலட்சுமி பூசையும் நூல் வழங்கலும் |
| தேர் உற்சவம் | - 02.09.2018 ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு வசந்தமண்டபப் பூசை |

குறிப்பு :
வரலட்சுமி விரதம் அனுஷ்டிக்கும் பக்தர்களுக்கு விசேட ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.
மகோற்சவ கடைகளுக்கான பதிவுகளை 12.08.2018 இல் இருந்து பரிபாலன சபை விசேட காரியாலயத்தில் மேற்கொள்ளலாம்.

**- தேவஸ்தான பரிபாலனசபை -**

ஜயோதா
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் 1491 | சீட்டிழுப்பு திகதி 13.08.2018
வெற்றி இலக்கங்கள்
02 07 29 30 R
அடுத்த வியாழக்கிழமை ஜக்பொட்
ரூ 32, 722, 648/=
Web: www.dlb.lk

Galaxy Star
வெற்றி வாரம் 264 / திகதி 12.08.2018
வெற்றி இலக்கங்கள்
03 10 20 40 58
அடுத்த ஞாயிற்றுக்கிழமை சுப்பர் பரிசுப் பொதி
ரூ. 3,914,264/-
Web: www.dlb.lk

## மாடி வீடு வாடகைக்குண்டு



உயரப்புலம்,
ஆனைக்கோட்டையில்
பிடாரி அம்மன் கோயில்
அருகில் சகல நவீன
வசதிகள் கொண்ட
மாடி வீடுவாடகைக்கு
உண்டு. அரச, அரச
சார்பற்ற நிறுவனாங்களும்
விரும்பத்தக்கது.

077 136 3047

சனிக்கிழமை அதிர்ஷ்டம்
வெற்றி வாரம்:3069 திகதி: 2018.08.13 திங்கட்கிழமை
நீலம்
09 20 63 64 W 51
37,106,435/-
Web: www.dlb.lk

அத கோடிபதி
சீட்டிழுப்பு வாரம்: 341
வர்ணம் : சிவப்பு
சீட்டிழுப்பு திகதி: 2018.08.13
ரூ. 59,602,230/-
வெற்றி இலக்கங்கள்
07 13 29 63 S
Web: www.dlb.lk

## மரண அறிவித்தல்

### திருமதி தங்கச்சியம்மா இரத்தினம்



பிறப்பு 04.10.1929 | இறப்பு 13.08.2018

வட்டுக்கோட்டையைப் பிறப்பிடமாகவும் நீர்வேலி வடக்கு, காளி கோவிலடியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தங்கச்சியம்மா இரத்தினம் நேற்று (13.08.2018) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற முருகேசு - பொன்னம்மா தம்பதிகளின் அன்பு மகளும் இரத்தினத்தின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற இராஜேஸ்வரி மற்றும் செல்வநாயகம், பாலச்சந்திரன், மனோகரன், ஞானேஸ்வரி, சரோஜினிதேவி ஆகியோரின் அன்புத் தாயாரும் காலஞ்சென்ற இராசரத்தினம் மற்றும் ராஜேஸ்வரி, கிருஷ்ணகுமாரி, மதுரமோகனா, விஸ்வேஸ்வரன், காலஞ்சென்ற பாலபரமேஸ்வரன் ஆகியோரின் பாசமிகு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (14.08.2018) செவ்வாய்க்கிழமை பி.ப. 2.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் சியாக்காடு இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும ஏற்றுக்கொள்ளவும்.

காளி கோயிலடி, நீர்வேலி வடக்கு.
தகவல்: குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### சிவகுமாரி தெய்வேந்திரன்



பிறப்பு 29.05.1974 | இறப்பு 13.08.2018

மாசார் பளையைப் பிறப்பிடமாகக் கொண்ட சிவகுமாரி தெய்வேந்திரன் (கிளிநொச்சி வைத்திய சாலை, ஊழியர்) நேற்று (13.08.2018) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தெய்வேந்திரனின் அன்பு மனைவியும் அஜந்தினியின் அன்புத்தாயும் காலஞ்சென்ற சேனாதிராஜா, தெய்வானைப்பிள்ளை தம்பதியரின் அன்புமகளும் இராசகுமாரி, கிருஷ்ணகுமாரி (ஆசிரியர்), சயிந்தகுமார் (சக்தி அக்றோ பணியாளர்), சுதாசன் (தபால் ஊழியா) ஆகியோரின் அனபுச்சகோதரியும் றஜிதாவின் அன்புச்சித்தியும் சுவேந்திரன், கிருஷ்ணானந்தராசா ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்கம் இன்று (14.08.2018) செவ்வாய்க்கிழமை பி.ப. 2 மணிக்கு நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் :
குடும்பத்தினர்.

# சிறுமிகளை...:

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

படுத்தப்படுகின்றனர். அது தொடர்பில் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று நல்லூர் பிரதேச சபை அமர்வில் சுட்டிக்காட்டப் பட்டது.


நல்லூர் பிரதேச சபை அமர்வு நேற்று நடைபெற்றது. அதில் உறுப்பினர் கு.பிருந்தா சிறுவர்கள் துர்நடத்தைக்கு உட்படுத்துவதைத் த்டுப்பது தொடர்பான பிரேரணை ஒன்றைக் கொண்டுவந்தார். அந்தப் பிரேரணை மீதான விவாதத்தின்போது உறுப்பினர் வாசுகி மேற்கண்டவாறு சுட்டிக்காட்டினார்.

யாழ்ப்பாணத்தில் அண்மைக் காலமாக அதிகளவு சிறுமிகள் துர்நடத்தைக்கு உள்ளாக்கப்படுவதை அறிய முடிகின்றது. அதைப் போன்று சிறுவர்களும் துர்நடத்தைக்கு உள்ளாக்கப்படுகின்றனர். ஆனால் அந்தத் தகவல்கள் வெளியே வருவதில்லை. அவ்வாறு தெரியவந்தாலும் அதை எவரும் பொருட்படுத்துவதில்லை. பாடசாலைச் சிறுவர்கள் ஆள்கள் இல்லாத இடங்களுக்கு அழைத்துச் செல்லப்பட்டு துர்நடத்தைக்கு உள்ளாக்கப்படுகின்றனர் என்று அறிய முடிகின்றது. இவற்றைத் தடுக்க நாம் உடனடியாகச் செயலில் இறங்க வேண்டும். அதற்கான உபாயங்களை வகுக்க வேண்டும் என்று அவர் சுட்டிக்காட்டினார்.

இந்தக் குற்றங்களைக் கட்டுப்படுத்த துறை சார்ந்த அதிகாரிகளையும், எமது உறுப்பினர்களையும் உள்ளடக்கிக் குழு ஒன்றை அமைப் போம் என்று தவிசாளர் குறிப்பிட்டார்.

இந்தக் குழு எமது சபைக்குட்பட்ட அனைத்து இடங்களுக்கும் சென்று விழிப்புணர்வுச் செயற்பாடுகளை மேற்கொள்வார்கள். இந்த விழிப்புணர்வுச் செயற்பாடுகளை நாம் பாடசாலையில் மேற்கொள்வது எந்தளவு சாத்தியம் என்று தற்போது கூறமுடியாது. ஆனால் சமூக அமைப்புக்கள் மற்றும் தனியார் கல்வி நிலையங்களில் மேற்கொள்ள முடியும். அதற்கான ஏற்பாடுள் செய்து தரப்படும் என்றும் தவிசாளர் குறிப்பிட்டார். (ற-8)

## மரண அறிவித்தல்



### தம்பு செல்வராசா (காந்தி)

காங்கேசன்துறையைப் பிறப்பிடமாகவும், தொந்தனை வீதி, மல்லாகத்தை வசிப்பிடமாகவும் கொண்ட தம்பு செல்வராசா (காந்தி) கடந்த (11.08.2018) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பு பூரணம் தம்பதியரின் அன்புப் புதல்வனும் காலஞ்சென்றவர்களான கட்டையர் செல்லம்மா தம்பதியரின் அன்புமருமகனும் பாக்கியத்தின் அன்புக்கணவரும் நடராசா (சீமெந்துக் கூட்டுத்தாபன ஊழியர்), பரமேஸ்வரி, தர்மவதி, (கனடா), காலஞ்சென்ற அழகராசா (அமெரிக்கா) மற்றும் குணவதி (இந்தியா), யேகவதி (கனடா), யேகராசா (கனடா), ஆனந்தராசா (கனடா) ஆகியோரின் அன்புச்சகோதரரும் மோகனரதி (லண்டன்), மோகனராஜ், சுமன்ராஜ் (லண்டன்), சஞ்சீவராஜ் (லண்டன்), சஞ்சீவரதி (லண்டன்) ஆகியோரின் அன்புத்தந்தை யும் ரவி, சுகுனா, பிரயா, சுகந்தன், மைதிலி ஆகியோரின் அன்புமாமனும் சண்முகம் (லண்டன்), நாகேந்திரம் (நோர்வே), கர்ணாநிதி (லண்டன்), காந்திமதி ஆகியோரின் அன்புமைத்துனரும் சுகிர்ராஜ், டிலன்ராஜ், தாட்சாயினி, டேனுயா, ஜன்சிகா, சொனிற்றா, பிரித்திக், லக்சயன், சன்சயன், தாமரன், லட்சஜன், அஜித்தா, பேனிச ஆகியோரின் அன்புப்பேரனும் லஸ்வினின் அன்புப் பூட்டனும் ஆவார்.

அன்னாரின இறுதிக்கிரியைகள் நாளை (15.08.2018) புதன்கிழமை மு.ப.10 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தொந்தனை சம்பட்டியான் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்.

## கண்ணீர்க் காணிக்கை



மண்ணில்: 11.07.1989 | விண்ணில் : 12.08.2018

செல்வி

### றஜனா செல்வரட்ணம்

(மக்கள் வங்கி - புதுக்குடியிருப்பு சேவை நிலையம்)

எமது வங்கியில் கடமையாற்றி எம்மை விட்டுப் பிரிந்த றஜனா அவர்களின் பிரிவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஊழியர் நலன்புரிச் சங்கம்
மக்கள் வங்கி - முல்லைத்தீவு.

## தனிச்...

ஆயுள்வேத மசாஸ் மற்றும் பரிசாரகர் பதவிக்கு அலுவலர்களிடையே விண்ணங்கள் கோரப்பட்டிருந்தன. அவர்களுக்கு அனுப்பப்பட்ட விண்ணப்பப் படிவம் தனிச் சிங்களத்தில் காணப்பட்டால் அவற்றை வாசித்தறிய முடியாது அலுவலர்கள் சிரமப்பட்டனர் என்று தெரிவிக்கப்பட்டது.

இந்த விண்ணங்களுக்கு இறுதித் திகதி நாளை என்பதால் விண்ணப்பப் படிவங்களைப் பூர்த்தி செய்வதற்கு அலுவலர்கள் அந்தரித்துத் திரிந்தனர் என்றும் கூறப்பட்டது.

இந்த விண்ணப்படிவங்கள் வடக்கு மாகாண சபை ஊடாகவே அனுப்பப்பட்டிருந்தன என்றும், ஆனால் அவை மொழிபெயர்க்கப்படாது தனிச் சிங்களத்தில் காணப்பட்டன என்றும் அலுவலர்கள் விசனம் தெரிவித்துள்ளனர். (ந-114)

## வடக்கு...

ரைத் தவிர்த்து மற்றைய அமைச்சர்கள் அனைவரும் தமது பதவிகளைவிட்டு விலக வேண்டும் என்று யோசனை முன்வைத்துள்ளார் வடக்கு மாகாண ஆளுநர் ரெஜினோல்ட் குரே.

வடக்கு மாகாண முதலமைச்சர் தன்னைப் பதவி நீக்கம் செய்தது தவறு என்று தெரிவித்து முன்னாள் அமைச்சர் டெனீஸ்வரன் தாக்கல் செய்த மனுமீது அவரை தொடர்ந்து அமைச்சர் என்று அறிவித்து இடைக்கால உத்தரவு வழங் கியது மேன்முறையீட்டு நீதிமன்றம். அந்தக் கட் ளையை நடைமுறைப்படுத்த எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்படாததை அடுத்து வடக்கு மாகாண சபையில் 6 அமைச்சர்கள் இப்போது இருக்கிறார்கள். சட்டப்படி 5 அமைச்சர்கள் மட்டுமே இருக்க முடியும். இதையடுத்து அமைச்சரவைக் கூட்டங்களைக் கூட்டுவதற்கு ஆளுநர் நடவடிக்கை எடுத்திருந்தார். அதனால் அமைச்சரவை முடங்கிப்போயுள்ளது.

மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் இடைக்காலக் கட்டளையை எதிர்த்து வடமாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்த வழக்கு மீதான விசாரணையும் நீண்ட நாள்களுக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ள நிலையில், பதவிக் காலம் முடிவுக்கு வருகையில் வடக்கு மாகாண சபையின் செயற்பாடுகள் தளர்வடைந்துள்ளன.

இந்த நிலைமையை மாற்றியமைக்கவேண்டுமானால் தற்போது பதவியில் உள்ள அமைச்சர்கள் நால்வரும் தமது பதவிகளைத் துறக்க வேண்டும். அப்படிச் செய்யும்போது புதிய அமைச்சரவை ஒன்றைப் பரிந்துரைக்க வேண்டியவராவார் முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன். அதன் மூலம் இந்தப் பிரச்சினைக்கு ஒரு முடிவு கிட்டும் என்று தெரிவித்திருக்கிறார் ஆளுநர்.

அமைச்சர்களை நியமிக்கும் அதிகாரமும் நீக்கும் அதிகாரமும் முதலமைச்சருக்கே உரியது என்பதால் அதந்த விடயத்தில் முதலமைச்சரின் பரிந்துரையே பிரச்சினைக்குத் தீர்வைத் தரமுடியும் என்பது அவரது கருத்தாக இருக்கிறது. (உ-12)

## எதிர்காலம்...

தெரிவிக்கப்படுகின்றது.

இந்தச் சந்திப்பில் சிங்கப்பூர் சுதந்திர வர்த்தக உடன்படிக்கை தொடர்பாகவும், கூட்டு எதிரணியின் எதிர்காலச் செயற்பாடுகள் தொடர்பாகவும் ஆராயப்படவுள்ளது.

எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 5ஆம் திகதி கூட்டு எதிரணி கொழும்பில் நடந்தவுள்ள அரசுக்கு எதிரான போராட்டம் தொடர்பாகவும் இந்தச் சந்திப்பில் கலந்துரையாடப்படவுள்ளது என்று தெரியவருகின்றது. (ந)

## கிறீஸ்...

நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. இவ்வாறு தென்னிந்தியத் திருச்சபையின் பேராயர் கலாநிதி டேனியல் தியாகராஜா தெரிவித்துள்ளார்.

குள்ள மனிதர்கள் தொடர்பிலான அச்சம் மக்களிடத்தில் ஏற்பட்டுள்ள நிலையில். இணையத்தளச் செய்திச் சேவை ஒன்றுக்கு அவர் வழங்கிய செய்தியிலேயே குறித்த விடையத்தைத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

அண்மையில்; யாழ்ப்பாணக் குடா நாட்டிலே பலவிதமான வன்முறைகள் தாண்டவமாடுவதை நாம் காண்கின்றோம். அதிலே வாள் வெட்டுச் சம்பவங்கள், இப்போது குள்ளமனிதர்கள் என்று சொல்லப்படுகின்ற சில குறியீடுகள். 2012ஆம் ஆண்டியே கிறீஸ் பூதம் என்று சொல்லி மக்கள் பல பயங்கரத்துக்கூடான அனுவங்களைச் சுமந்தார்கள். பலவதமான வேதனைகளை அனுபவித்தார்கள். அந்த வேதனை போன்று இப்போது குள்ள மனிதர்கள் பற்றிய ஒரு அசம்பாவிதம் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. இவர்கள் யார்? எங்கிருந்து வருகிறார்கள். எங்கு செல்கிறார்கள். இதை ஆராய வேண்டும். இவர்களுடைய பின்புலத்தை ஆராய்வதும். அதைத் தடுத்துக் கொள்வதும் சமூகத்தினுடைய ஒட்டுமொத்தமான கடமை. இது தனிநபர் கடமையல்ல. ஆகையால் சமூகமே ஒன்று திரண்டு. இவ்வாறான வன்முறைகளுக்கு வித்திடுபவர்களை கண்டுபிடிக்கவேண்டும். அவர்களைச் சட்டத்தின் முன்னால் கொண்டு வரவேண்டும். அது எவராயினும் சரி தடுக்கப்படவேண்டும். மக்கள் யாவரும் இந்த முயற்சியில் ஒன்றுபடவேண்டும். இது என்னுடைய பிரச்சினை அல்ல, நான் பாதிக்கப்படவில்லை என்று தவிர்த்து விடக்கூடாது. இது சமூகத்தைப் பாதிக்கும் ஒரு காரணியாக உள்ளது என்றார். (21)

## வெடுக்குநாரி...

டுள்ளது. நெடுங்கேணி ஒலுமடுப் பகுதியில் உள்ள வெடுக்குநாரி மலை மீது ஆதி லிங்கேஸ்வரர் ஆலயம் அமைந்துள்ளது. இதனை மக்கள் காலங்காலமாக வழிபட்டு வருகின்ற நிலையில்இ அது தொல்லியல் திணைக்களத்துக்குச் சொந்தமானதென அந்தத் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது. கடந்த 10ஆம் திகதி குறித்த ஆலயத்தைச் சேர்ந்தவர்களை நெடுங்கேணி பொலிஸார் அழைத்து விசாரணைக்கும் உட்படுத்தியிருந்தனர். அதன்போது, ஆலயத:துக்குச் செல்லவேண்டாமென்றும் மீறிச் சென்றால் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் குறிப்பிட்டனர். எனினும், அதற்கு மறுநாள் ஆடி அமாவாசை திதி என்பதால் தொல்லியல் திணைக்களம் மற்றும் பொலிஸாரின் அனுமதியுடன் மக்கள் அங்கு சென்று பூசை வழிபாடுகளை மேற்கொண்டனர். இந்த நிலையில்இ நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக் கிழமை மீண்டும் ஆலய நிர்வாகத்தினரை பொலிஸ் நிலையத்துக்கு அழைத்த பொலிஸார்இ ஆலயத்தில் பூசை வழிபாடுகளை மேற்கொள்ளத்தடையில்லையெனக் குறிப்பிட்டனர்.

ஆனால், ஆலயத்தில் மாற்றங்கள் செய்தல், கட்டடங்களை அமைத்தல் உள்ளிட்ட எந்த நடவடிக்கையும் எடுக்கக் கூடாதென அறிவுறுத்தியுள்ளனர். ஆலயத்தைச் சூழவுள்ள காட்டுப்பகுதி தொல்லியல் திணைக்களத் தின் கட்டுப்பாட்டிற்குள் உள்ளதால். அங்கு செல்லக் கூடாதென்றும் மீறினால் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது. தமிழர்களின் எல்லைக்கிராம பகுதியில் காணப்படும் இந்த ஆலயத்தை காலங்காலமாக தரிசித்து வந்த நிலையில், அதனை அபகரிக்க முயலக் கூடாதென மக்கள் தெரிவிக்கின்றனர். (21)

## நான்கு...

கள் வீட்டாரைத் தாக்கிப் பெருமளவு நகைகளைக் கொள்ளையடித்துச் சென்றனர் என்று தெல்லிப்பழைப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள் ளது.

யாழ்ப்பாணத்தில் அதிகரித்துள்ள வன்முறைச் சம்பவங்களைத் தடுக்கும் நோக்கில் பொலிஸார் ரோந்து நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ள போதிலும், தெல்லிப்பழையில் நடந்த இந்தச் சம்பவம் மக்களை அச்சுறுத்தல்களுக்கு உள்ளாக்கியுள்ளது.

தெல்லிப்பழை வித்தகபுரம் பகுதியில் உள்ள வீடுஒன்றின் கதவுகளை உடைத்துக் கொண்டு 8 பேர் கொண்ட குழுவினர் வீட்டினுள் புகுந்தனர். அவர்கள் கைக்கோடரி, கொட்டன் போன்ற ஆயுதங்களால் வீட்டாரைத் துரத்தித் தாக்கினர். காயமடைந்த அவர்கள் ஓடிச்சென்று வீட்டின் ஒரு அறையைப் பூட்டி அதனுள் பதுங்கினர். அதன் பின்னர் வீட்டின் சாமி அறைக் கதவு கொள்ளையர்களால் தகர்க்கப்பட்டது. அங்கிருந்த 12 பவுண் நகைகள் அபகரிக்கப்பட்டன. அதன் தொடர்ச்சியாக அந்தப் பகுதியிலேயே மேலும் மூன்று வீடுகளில் கொள்ளையர்கள் தமது கைவரிசையைக் காட்டிச் சென்றுள்ளர் என்று தெரிவிக்கப்படுகிறது. எனினும் அது பற்றிய விபரங்கள் வெளிப்படுத்தப்படவில்லை. இந்தச் சம்பவங்கள் தொடர்பில் பாதிக்கப்பட்டவர்கள் தெல்லிப்பழைப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்துள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று முன்தினமும் தெல்லிப்பழையில் கொள்ளையர்கள் புகுந்துள்ளனர். முகத்தை மூடிக்கட்டியவாறு கொள்ளையடிக்கும் நோக்கில் அவர்கள் உலாவியுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது. அளவெடி. பன்னாலை. கொல்லன்கலட்டி போன்ற பகுதிகளில் கொள்ளையர்களின் நடமாட்டம் இருந்தது என்று மக்கள் தெரிவித்தனர். கடந்த சனி. மற்றும் ஞாயிற்றுக் கிழமைகளில் இடம்பெற்ற இந்தச் சம்பவங்கள் தொடர்பில் பொலிஸாரால் நடவடிக்கைகள் எதுவும் மேற்கொள்ளப்படவில்லை என்றும் தெரிவிக்கப்படுகிறது.

யாழ்ப்பாணத்தின் பல பிரதேசங்களிலும் வன்முறைகள் கட்டவிழ்த்து விடப்பட்டுள்ளன. வாள்வெட்டு முதல். திருட்டு. வழிப்பறி வரை அது அதிகரித்தே செல்கிறது. பொலிஸார் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளோம் என்கின்ற போதும். சம்பவங்கள் நிறுத்தப்பட்டதாத் தெரியவேயில்லை. இது மக்கள் மத்தியில் மேலும் அச்சுறுததலை ஏற்படுத்தியுள்ளது. (21,26)

## இந்திய...

வேண்டியுள்ளது என தமிழக நாடாளுமன்ற உறுப்பினர் மருத்துவர் அன்புமணி இராமதாஸ் தெரிவித்துள்ளார்.

இந்திய மீனவர்கள் 27 பேர் இலங்கை நெடுந்தீவுக் கடற்பரப்பில் கடந்த வெள்ளிக்கிழமை இரவு கைது செய்யப்பட்டனர் அவர்கள் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டு விளக்மறியலில் வைக்கப்பட்டுள்ளனர். இந்த விடையம் குறித்து அன்புமணி இராமதாஸ் வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அதில் உள்ளதாவது:

வங்கக் கடலில் மீன்பிடிக்கச் சென்ற இராமநாதபுரம் மற்றும் நாகப்பட்டினம் மாவட்டத்தைச் சேர்ந்த 27 மீனவர்களை சிங்களப் படையினர் கைது செய்துள்ளனர். அவர்களுக்குச் சொந்தமான 4 படகுகளையும் அவர்கள் பறிமுதல் செய்துள்ளனர். சிங்களப்படையினரின் இந்த நடவடிக்கை கண்டிக்கத்தக்கதாகும். இராமநாதபுரம் நம்புதாளையைச் சேர்ந்த 22 மீனவர்கள் அதே பகுதியைச் சேர்ந்த பழனிஇ கிருட்டிணன்இ ஆறுமுகம் ஆகியோருக்கு சொந்தமான 3 நாட்டுப் படகுகளில் வங்கக்கடலில் மீன்பிடிக்கச் சென்றனர். அதேபோல்இ நாகப்பட்டினம் மாவட்டம் வானகரத்தைச் சேர்ந்த 5 மீனவர்கள் ஒரு படகில் மீன் பிடிக்கச் சென்றனர். அவர்கள் நெடுந்தீவு அருகில் இந்திய கடல் எல்லையில் மீன் பிடித்துக் கொண்டிருந்த போது அங்கு வந்த இலங்கைக் கடற்படையினர் அவர்களை கைது செய்துள்ளனர். 27 மீனவர்களும் பாரம்பரியமாக மீன்பிடிக்கும் பகுதிகளில் மீன்பிடித்துக் கொண்டிருந்த போது சிங்களப் படை கைது செய்தது அத்துமீறிய செயலாகும். இதை இந்தியக் கடலோரக் காவல் படை அனுமதித்திருக்கக்கூடாது.

கைது செய்யப்பட்ட மீனவர்கள் 27 பேரும் இலங்கை ஊர்க்காவற்றுறை நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டு சிறைகளில் அடைக்கப்பட்டுள்ளனர். இலங்கை அரசின் புதிய மீன்பிடித் தடைச் சட்டத்தின்படி தமிழக மீனவர்கள் கைது செய்யப்பட்டிருப்பதால் அவர்கள் குறைந்தது 2 ஆண்டுகள் சிறைத் தண்டனை அனுபவிக்க வேண்டும் என்றும்இ அவர்களின் படகுகளை இலங்கை அரசு திருப்பித் தராது என்றும் கூறப்படுகிறது. தவறு செய்யாத மீனவர்களுக்கு வழங்கப்படும் இத்தண்டனை மிகவும் கொடூரமானதாகும்.

27 மீனவர்களும் 2 ஆண்டுகள் சிறைகளில் அடைக்கப்பட்டால் அவர்களின் குடும்பங்கள் வாழ்வாதாரம் இல்லாமல் தவிக்கும் நிலை ஏற்படும். படகுகள் திருப்பித்தரப்படாவிட்டால் அவர்கள் நிரந்தரமாக வாழ்வாதாரத்தை இழக்கும் நிலை ஏற்படும். இதற்கெல்லாம் மேலாகஇ இதுவரை விசைப்படகு மீனவர்களை மட்டுமே கைது செய்து வந்த சிங்களப் படையினர் இப்போது நாட்டுப்படகு மீனவர்களையும் கைதும் செய்திருப்பதன் மூலம் இந்தியாவின் இறையாண்மையை சீண்டிப் பார்க்கின்றனர் என்று தான் கருத வேண்டியுள்ளது. இந்தப் போக்குக்கு மத்திய அரசு உடனடியாகமுற்றுப்புள்ளிவைக்க வேண்டும். இந்தியாவுக்கும், இலங்கைக்கும் இடையிலான கடல்பகுதி மிகவும் குறைவாக உள்ள நிலையில், தமிழக மீனவர்களை சிங்களப் படையினர் அடிக்கடி கைது செய்வதும், அவர்களின் குடும்பங்கள் வறுமையில் வாடுவதுமான சித்திரவதை விளையாட்டு தொடர்வதை மத்திய, மாநில அரசுகள் அனுமதிக்கக் கூடாது. கைது செய்யப்பட்ட 27 மீனவர்களை உடனடியாக விடுதலை செய்யவும், அவர்களின் நாட்டுப் படகுகளை மீட்கவும் மத்திய, மாநில அரசுகள் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். அதுமட்டுமின்றி, தமிழக மீனவர்கள் வங்கக்கடலில் பன்னாட்டு எல்லைப் பகுதியில் பாதுகாப்பான முறையில் மீன்பிடிப்பதை உறுதி செய்ய மத்திய, மாநில அரசுகள் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்று வலியுறுத்துகிறேன் என்றுள்ளது. (21)

## வாடிகள்...

என்று மீனவர் சங்கங்கள் தெரிவித்தன. இதனால் அந்தப் பகுதியில் நேற்று நள்ளிரவில் அங்கு பெரும் பதற்றம் ஏற்பட்டது. பொலிஸ் காவல் போடப்பட்டது. இராணுவமும் துணைக்கு அழைக்கப்பட்டது. நாடாளுமன்ற உறுப்பினர்கள், மாகாண சபை உறுப்பினர் உள்ளிட்ட அரசியல்வாதிகளும் அங்கு குவிந்தனர்.

பருவகாலத்தில் நாயாற்றில் வந்து தங்கியிருந்து மீன்பிடிக்கும் சிங்கள மீனவர்கள் சட்டமீறலான வகையில் தொழில் செய்கிறார்கள் என்று தமிழ் மீனவர்கள் எதிர்ப்புத் தெரிவித்துவரும் நிலையில் தமிழ் மீனவர்களின் வாடிகளும் படகுகளும் எரிக்கப்பட்டுள்ளன. தாம் காட்டிவரும் எதிர்ப்புக்குப் பழிவாங்கும் வகையில்தான் இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டது என்று தமிழ் மீனவர்கள் நம்புகின்றனர். ஆனால், தமிழ் சிங்கள முரண்பாட்டைத் தோற்றுவிப்பதற்காக விசமிகள் இதனைச் செய்திருக்கலாம் என்று பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

9 வாடிகள், 3 படகுகள், 2 இயந்திரங்கள், 21 வலைகள் தீக்கிரையாகின. அவற்றின் பெறுமதி 50 லட்சம் ரூபாய்க்கு மேலாக இருக்கும் என்று உடனடி மதிப்பீடுகள் தெரிவித்தன.

கடற்கரையில் திடீரென தீ ஏற்பட்டுள்ளது என்று கண்ட மீனவர்கள் பதறியடித்தபடி அங்கு ஓடினர். ஆனால் வாடிகள் மீது மண்ணெண்ணெய் ஊற்றி தீ வைத்திருந்ததால் அவை மிக வேகமாக எரிந்து சாம்பராகியது டன் தீ பக்கத்தில் இருந்த படகுகள். அவற்றின் இயந்திரங்கள். வலைகளிலும் பற்றியதில் அவையும் எரிந்து சாம்பராகின.

தமது பொருள்கள் எரிக்கப்பட்டது குறித்த சிங்கள மீனவர்களுக்கு எதிரான தமது முறைப்பாட்டைப் பொலிஸார் பதிவு செய்யவில்லை என்று தமிழ் மீனவர்கள் கொந்தளித்தனர். சம்பவ இடத்திற்கு வந்திருந்த பொலிஸாரே முறைப்பாட்டைப் பதிவு செய்யவேண்டும் என்று அவர்கள் எதிர்பார்த்தனர். ஆனால், முறைப்பாட்டைப் பெறுவதற்காகத் தாம் அந்த இடத்திற்கு வரவில்லை என்றும் இது தமிழ் சிங்கள கலவரமாக மாறக்கூடாது என்றபதற்காகவே தாம் அங்கு வந்தனர் என்றும் பொலிஸார் தெரிவித்ததனால் மீனவர்கள் மேலும் ஆத்திரமடைந்தனர்.

தமிழ் சிங்கள முரண்பாட்டை ஏற்படுத்துவதற்காக திட்டமிட்டு வேறு எவராலும் இந்த தீய செயல்கள் புரியப்பட்டிருக்கலாம் என்று பொலிஸார் சந்தேகம் தெரிவித்தனர். அதனால் உண்மை என்னவென்று தெரியாமல் சிங்கள மீனவர்களுக்கு எதிராகத் தாம் முறைப்பாடு பதிவு செய்யமுடியாது என்றும் அவர்கள் தெரிவித்தனர். இது தமிழ் மீனவர்கள் மேலும் கோபப்படுத்தியது. அவர்கள் சிங்கள மீனவர்களுக்கு ஆதரவாகச் செயற்படுகிறார்கள் என்று அவர்கள் குற்றஞ்சாட்டினர்.

நாயாற்றில் தங்கியிருந்து மீன்பிடிக்கும் சிங்கள மீனவர்கள் சட்டமீறலான வகையில் மீன்பிடிக்கிறார்கள் என்று தெரிவித்து தமிழ் மீனவர்கள் அண்மையில் பெரும் ஆர்ப்பாட்டம் நடத்தினர். இதையடுத்து கொழும்பு மீன்பிடித்துறை அமைச்சர் விஜித முனி சொய்சா ஞாயிற்றுக் கிழமை முல்லைத்தீவுக்கு வந்து மீனவர்களுடன் பேச்சு நடத்தினார். பிரச்சினைக்கு உரிய வகையில் சிங்கள மீனவர்கள் மேற்கொள்ளும் மீன்பிடியை நிறுத்துவதற்கும் இடைக்கால உத்தரவு விடுத்தார். சுருக்கு வலை மீன்பிடி மற்றும் ஒளி பாய்ச்சி மீன்பிடிப்பது ஆகியவற்றுக்கு அவர் இடைக்காலத் தடை விதித்தார்.

இருப்பினும் நேற்று மாலை கடலுக்குப் புறப்பட்ட சிங்கள மீனவர்கள் ஒளிபாய்ச்சி மீன்பிடிப்பதற்கான உபகரணங்களைத் தமது படகுகளில் ஏற்றுவதைக் கண்ட தமிழ் மீனவர்கள் அவர்களுடன் அது குறித்து முரண்பட்டுள்ளனர். அமைச்சர் தடை விதித்த பின்னரும் அந்த முறைகளை ஏன் பயன்படுத்துகிறீர்கள் என்று வாய்த் தர்க்கத்தில் ஈடுபட்டனர். இந்த நிலையிலேயே மீனவர்கள் வாடிகள், படகுகள் தீக்கிரையாக்கப்பட்டன. இதனால் சிங்கள மீனவர்களே அதனைச் செய்தார்கள் என்று தமிழ் மீனவர்கள் சந்தேகப்படுகின்றனர். (உ-21,105)

# விஞ்ஞான பொருண்மைகள்

## ஆய்வு அடிப்படையான வெளிப்பாடுகள்

செ.கயல்

**"குவாக்" சத்தங்கள் எதிரொலிக்காதவை**

எதிரொலி பற்றியதான விளக்கங்கள் கற்பிக்கப்படும்போது, வாத்து எழுப்பும் 'குவாக்' ஒலியானது விதிவிலக்காக எதிரொலிக்காது என்றே அறிவுறுத்தப்பட்டது. ஆனாலும், அவை தவறான விடயங்கள் என தற்போதைய விஞ்ஞான ஆய்வுகள் உறுதிப்படுத்தியுள்ளன.

உண்மையிலே 'குவாக்' ஒலி எதிரொலிக்கிறது. எனினும் எமது செவிப்பறையும், அதனுடன் இணைந்த மூளை நரம்புகளும் அந்த ஒலியின் மீள்திறனுக்கு எதிர்வினையைக் காட்டுவதில்லை. அதன் காரணமாகவே வாத்தின் 'குவாக்' ஒலியானது எங்களுடைய காதுகளுக்கு எதிரொலிக்காதது போன்ற அசைவுகள் தோன்றுகின்றன.

'குவாக்' ஒலிக்கு எதிரொலிப்பு உண்டு என்பது விசேடமாக தயாரிக்கப்பட்ட எதிரொலி அறை மூலமே நிரூபிக்கப்பட்டுள்ளது.

**நாம் அனைவருமே வித்தியாசமானவர்கள்**

பாடசாலைகளிலும், வீடுகளிலும், மன எழுச்சியூட்டும் புத்தகங்களிலும் நாம் ஒவ்வொருவருமே தனித்தனி பண்புடையவர்கள் எனக் கூறப்பட்டுவருகிறது. ஆனாலும் அந்த விடயங்கள் பொய்யானவை என ஆய்வாளர்கள் நிரூபித்துள்ளனர்.

நாம் அனைவரும் வெளித்தோற்றத்தில் பார்ப்பதற்கு மட்டுமே வித்தியாசமாக இருப்பதாகவும், ஒரே சூழ் நிலையின் கீழாக ஏற்படும் நிகழ்வுகளுக்கு அனைவரும் ஒரே விதமான நடத்தைகளையே காட்டுவதாகவும் அவர்கள் கூறியுள்ளார்கள். அதாவது பிறந்ததில் இருந்து ஒரே விதமான சூழ் நிலைகளை எதிர்கொண்டு வாழும் எவரும் ஒரே விதமான மறுமொழிப்பான,பொழிப்பான நடத்தையையே காட்டுகின்றனர்.

பல ஆண்டு காலம் மேற்கொள்ளப்பட்ட ஆய்விலிருந்தே இந்த முடிவுகள் அறிவிக்கப்பட்டுள்ளன.

**தண்ணீர் அருந்துதல்**


எமது பாடத்திட்டத்திலேயே இந்தக் கருத்துக்கள் இருக்கின்றன. எனினும் 8 குவளை தண்ணீரின் அளவு என்பது தவறான ஒன்றாகும்.

நாம் உண்பதான தாவரங்கள், பழங்கள், குடிக்கும் குளிர்பானங்கள் என்பவையும் உடலுக்கு நீரைத் தருவிக்கின்றன.

குடி தண்ணீரை அருந்தாமல் சாதாரணமான முறையில் தாவரங்கள், பழங்கள், இதர பானங்களை உள்ளெடுத்து வந்தாலே ஒரு மாதத்துக்கு மேலாக எந்தவித உடல் கோளாறுகளும் இன்றி வாழமுடியும் என்பது ஆய்வுகள் மூலம் நிரூபிக்கப்பட்டுள்ளது.

**வௌவால்கள் பார்வை அற்றவை**

அறிவியல் பாடத்திட்டத்தில் கூறப்பட்டுவரும் ஒரு தவறான தகவலாக இது விளங்குகிறது. அதில் குறிப்பிடப்படுவது போல, உண்மையில் வௌவால்கள் பறப்பதற்கு எதிரொலித்திறன்கள் பயன்படுகின்ற போதிலும், அவற்றிற்கு சாதாரண விலங்குகளைப்போன்று கண்கள் உண்டு. அக்கண்கள் பொருள்களை பார்வையிட உதவுகின்றன. ஆனால் அவை கண்களின் பார்வைத்திறனை ஒருபோதும் பிரதான ஊடகமாகப் பயன்படுத்துவதில்லை.




அதாவது, நாம் ஒரு பாதையில் செல்வதற்கு கண்களை பிரதான உணர் ஊடகமாகவும், காதுகளை உப உணர் ஊடகமாகவும் பயன்படுத்துவதைப்போன்று வௌவால்கள் காதுகளை பிரதான உணர் ஊடகமாகப் பயன்படுத்துகின்றன என்பது இங்கு கவனத்திற்குரியது.

**நியூட்டனின் விதியும் அப்பிளும்**

பாடத்திட்டத்தில் 'அப்பிள் தலையில் விழுந்த கதை' மூலமாகவே நியூட்டனின் விதி அறிமுகம் பெறுகிறது. எனினும் நியூட்டனின் புவியீர்ப்பு விதி கண்டறியப்பட்டதற்கும் அப்பிளுக்கும் எந்தத் தொடர்புகளும் இல்லை என்கின்றனர் அறிவியலாளர்கள்.

நாம் அனைவரும் கற்றுக்கொண்ட அப்பிள் தலையில் விழுந்த கதையை நியூட்டன் எந்த இடத்திலும் சுயமாக குறிப்பிட்டிருக்கவில்லை என்ற வாதத்தை அவர்கள் முன்வைத்துள்ளனர்.



# அழிவுறும் தனித்துவ படிமங்கள்

**சுறா** (Carcharhinus hemiodon)

இந்திய துணைக்கண்ட கடற்கரைகளிலும்,திட்டுப் பகுதிகளுக்கு அருகிலுமாக வசிக்கக் கூடிய ஒரு கடல் மீன் இனமாக சுறா விளங்குகிறது. மிகவும் அரிய, மிகக் குறைவாக ஆராய்ச்சி செய்யப்பட்ட ஓர் உயிரினம் இந்தியக் கடல் பகுதிகளில் உள்ளது. கடற்கரை பகுதிகளிலும் அது வாழுமிடங்களிலும் முறைப்படுத்தப்படாத மீன்பிடி முறைகளின் பெருக்கம் இவற்றுக்கான மிகப் பெரிய அச்சுறுத்தலாகச் சொல்லப்படுகிறது. வணிகரீதியில் இவற்றுக்கு முக்கியத்துவம் இல்லையென்றாலும், ஏனைய மீன்களுடன் வலையில் சிக்கிக் கொள்வதாலேயே பெருமளவுக்கு அழிவடைந்து போயுள்ளன.

**எட்டுக்கால் பூச்சி** (Poecilotheria metallica).

உலோக எட்டுக்கால் பூச்சி அல்லது மயில் எட்டுக்கால் பூச்சி எனப் பல பெயர்கள் கொண்டு இவை அழைக்கப்படுகின்றன. இந்த எட்டுக்கால் பூச்சியானது இரும்பு நீல நிறத்தில், ஓரேஞ் மஞ்சள், கறுப்பு வெள்ளை திட்டுகளைக் கொண்டது.

இவை முதன்முதலில் உதகமண்டலத்தில் கண்டு பிடிக்கப்பட்டதாலேயே கூட்டி எட்டுக்கால் பூச்சி என்ற பெயர் வந்ததாக கூறப்படுகிறது. இவற்றின் குஞ்சுகள் மிகச் சிறியதாக இருப்பதால் அழியும் ஆபத்துக்குச் சென்றுள்ளது. தென்னிந்திய மலைக் காட்டுப் பகுதிகளில் இவை பெருமளவில் வாழ்கின்றன. இந்தியாவில் மட்டுமே இந்த எட்டுக்கால் பூச்சிகள் இருக்கின்றன. செல்லப்பிராணிகள் விற்பனைக்கான, வளர்ப்பிற்கான கடத்தலில் அதிக விலை கொடுத்து வாங்கப்படும் எட்டுக்கால் பூச்சி இனவகையாக இவை காணப்படுகிறன.

# நீர் மட்டத்தின் உயர்வு

## தலைமுறைக்கான அபாயம்

[illegible] கடல் நீர்மட்டம் உயர்ந்துவருவதாக நாசா விண்வெளி ஆய்வு மையம் அண்மையில் தகவல்களை வெளிப்படுத்தியுள்ளது.

[illegible] வெப்பம் [illegible] வெப்ப நிலைக்கு ஒப்பாக நிலை [illegible] அறி [illegible] கடல் நீர் [illegible] ஆண்டுக்கான உயர்வு வீதம் 1.9 மில்லி மீற்றர்களாக உள்ளது.


இதே நிலைமைகள் தொடர்ந்தால் அடுத்த நூற்றாண்டின் நடுப் பகுதியில் அண்ணளவாக 6.4 மீற்றர்கள் வரை நீர்மட்டம் உயரும்.

தொழிற்சாலைகளின் எண்ணிக்கை அதிகரிப்பதனாலும், அவற்றின் புகைவெளியீடு மீதான கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் இல்லாமையாலும் நீர் மட்ட உயர்வு இன்னும் அதீத வேகத்தில் உயர்வடையும் எனக் கூறப்படுகிறது.

கிறீன்லாந்து, அந்தாட்டிக்கா பகுதியின் பனிமலைகள் வெப்பம் காரணமாக சரிவடைவதே நீர்மட்ட உயர்வுக்குக் காரணம் எனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அங்குள்ளதான முழுப் பனி மலைகளும் உருகுமாயின் புவியின் நீர்மட்டம் என்பது அண்ணளவாக 60 மீற்றர்கள் வரை உயரும். அவ்வாறானதொரு நிலையில் உலக வரைபடத்தில் இருந்து பல நாடுகள் இல்லாமல் போகும்.போகலாம் என்கின்றனர் ஆய்வாளர்கள்.

எங்களுடைய பூட்டக்குழந்தைகள் வாழ்வதற்காக ஒவ்வொருவரும் தங்கள் வாகனங்களின் காபன் வெளியீட்டை சரிபார்த்துக் கொள்ள வேண்டிய தருணங்கள் ஏற்பட்டுள்ளதை உணர்ந்துகொள்ள வேண்டும்.புரிந்துணர்வோடு தெரிந்துகொள்ள வேண்டும்.



# எதிரணியை ஏற்காவிட்டால் சபாநாயகரையும் ஏற்கோம்

## எச்சரிக்கின்றார் கம்மன்பில

கொழும்பு, ஓக.14

சபாநாயகர் கூட்டு எதிரணியை எதிர்க்கட்சியாக ஏற்றுக் கொள்ளத் தயாரில்லை எனில் சபாநாயகரை நாம் ஏற்றுக் கொள்ள முடியாத நிலைமை உருவாகும் என்று தெரிவித்துள்ளார் மகிந்த ஆதரவு அணி நாடாளுமன்ற உறுப்பினரான உதய கம்மன்பில.

கொழும்பில் நேற்று நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் தெரிவித்ததாவது

நாடாளுமன்ற சம்பிரதாயங்களுக்கு அமைய சபாநாயகர் அங்கீகரிக்க வேண்டியது கட்சியை அல்ல அணியை.

2004ஆம் ஆண்டு மக்கள் விடுதலை முன்னணி, ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசில் இருந்து வெளியேறியபோது, அப்போதைய சபாநாயகர் அவர்களை எதிர்க்கட்சியின் தனியான அணியாக அங்கீகரித்தார்.

அதேவேளை, தற்போதைய பொலிஸ் மா அதிபர் அரசியலில் ஈடுபடுகின்றார். முகப்புத்தக வகைப்படுத்தலுக்கு அமைய பொலிஸ் மா அதிபரின் முகப் புத்தகக் கணக்கு அரசியல்வாதிகளின் வகைப்படுத்தலுக்குள் வருகின்றது.

அவர் அதை அறியாமல் செய்கின்றார்கள் என்றால் அதைச் செய்யும் நபர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க வேண்டும்- என்றார். (ற)

### பணியகத்தை...

இலங்கை தொடர்பில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் அடிப்படையில் நாடாளுமன்றத்தில் சட்ட மியற்றப்பட்டு இந்தப் பணியகம் அரசால் உருவாக்கப்பட்டது. எனினும் இந்தப் பணியகத்தின் மீது தமக்கு நம்பிக்கையில்லை என்று காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களில் பெரும்பாலானவர்கள் தெரிவித்து வருகின்றனர். இருப்பினும் பணியகம் தனது செயற்பாடுகளை ஆரம்பித்துள்ளது.

இந்த நிலையில் பணியகத்தின் செயற்பாடுகளைக் கண்காணிப்பதற்கான பன்னாட்டுக் குழு ஒன்று அமைக்கப்படவேண்டும் என்ற கோரிக்கையைப் பொது அமைப்புகள் நேற்று முன்வைத்தன. யாழ்ப்பாண அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையத்தில் நேற்று நடந்த கலந்துரையாடலில் இந்தக் கோரிக்கை வலியுறுத்தப்பட்டது. இணையத்தின் தலைவர் தே. தேவானந்த் தலைமையில் நடந்த இந்தக் கலந்துரையாடலில் அரச சார்பற்ற நிறுவனங்களின் செயற்பாட்டாளர்கள், பொது அமைப்புகளின் பிரதிநிதிகள், காணாமற்போனோர் தொடர்பில் பணியாற்றும் தன்னார்வ நிறுவனங்களின் பிரதிநிதிகள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

காணாமல் ஆக்கப்பட்டோர் விடயத்தில் அதற்கான பணியகம் அமைக்கப்பட்டமை முன்னேற்றகரமானதுதான் என்றபோதும் பாதிக்கப்பட்டவர்களின் எதிர்பார்ப்புக்கு அமைவாக அதன் செயற்பாடுகள் அமையவில்லை.

பணியகம் நடத்தும் அமர்வுகளில் உறவினர்கள் தெரிவிக்கும் கருத்துக்களை பணியகத்தின் ஆணையாளர்கள் செவிமடுப்பதில்லை.

காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பில் உண்மையைக் கண்டறிவதோடு நின்று விடாமல் அதற்கான நீதியையும் வழங்கக்கூடியதாகப் பணியகம் மாற்றியமைக்கப்பட வேண்டும். பணியகத்திற்கு ஒரு சட்ட அதிகாரம் இல்லாமல் இருப்பது உறவுகள் மத்தியில் நம்பிக்கையீனத்தை ஏற்படுத்துகின்றது.

பணியகத்தின் ஆணையாளர்கள் மற்றும் அதிகாரிகளில் பாதிக்கப்பட்டவர்களுக்காகப் பணியாற்றும் அமைப்புகளின் பிரதிநிதிகள் உள்வாங்கப்படவேண்டும்.

பணியகத்தின் பணி இழப்பீடு வழங்குவதோடு நின்றுவிடாமல் காணாமற்போனவர்களுக்கு என்ன நடந்தது என்பதைத் தெளிவுபடுத்துவதாக அமையவேண்டும். குறிப்பாக அவர்கள் உயிருடன் இருக்கிறார்களா இல்லையா? இல்லை என்றால் அவர்களுக்கு எப்போது, யாரால், என்ன நடந்தது? ஆகிய கேள்விகளுக்கு விடை கிடைக்கவேண்டும்.

ஆகிய முக்கிய விடயங்கள் கலந்துரையாடலில் சுட்டிக்காட்டப்பட்டன. இந்தக் கூட்டத்தில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்கள், தீர்மானங்கள் தொடர்பில் அறிக்கை ஒன்றைத் தயாரித்து அதனைப் பணியகத்திற்கும் ஐக்கிய நாடுகள் சபைக்கும் இந்த விடயத்தில் அக்கறையுள்ள தொண்டு அமைப்புகளுக்கும் அனுப்பி வைப்பது என்றும் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது.

"காணாமல் ஆக்கப்பட்டவர்கள் மற்றும் காணாமற்போனோர் தொடர்பான விடயங்களில் இந்தக் கூட்டம் ஒரு தொடக்கம் மட்டுமே! இதில் அக்கறையுள்ள அமைப்புகளையும் பொது அமைப்புக்களையும் அழைத்து மேலும் பல கலந்துரையாடல்களைத் தொடர்ந்து நடத்துவதன் மூலம் இந்த விடயத்தில் நீதியும் நியாயமும் வழங்கப்படுவதை உறுதிப்படுத்தவும் தலையீடுகளற்ற வகையில் உண்மை வெளிக்கொணரப்படவும் தொடர்ச்சியான அழுத்தங்களை வழங்க வேண்டிய தேவை எழுந்துள்ளது" என்று யாழ். மாவட்ட அரசசார்பற்றநிறுவனங்களின் இணையத் தலைவர் தே. தேவானந்த உதயன் பத்திரிகையிடம் தெரிவித்தார்.

(உ-21, 114)

### செஞ்சோலை...

நடத்தியது.

61 மாணவிகள் கொல்லப்பட்டதுடன், 100க்கும் மேற்பட்ட மாணவிகள் படுகாயமடைந்திருந்தனர். அன்று இந்த சம்பவம் தமிழர் தாயகம் - புலம்பெயர் தேசம் எங்கும் பெரும் சோகத்தை ஏற்படுத்தியிருந்தது.

போரால் பெற்றோரை, பாதுகாவலரை இழந்த பெண்பிள்ளைகளின் பாரமரிப்புக்காக தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனின் பணிப்புரையின் பேரில் 1991 ஐப்பசி 23ஆம் திகதி செஞ்சோலை சிறுவர் இல்லம் ஆரம்பித்து வைக்கப்பட்டது. அப்போது தலைவர் பிரபாகரனால் அனுப்பப்பட்ட வாழ்த்துச் செய்தியில் 'வரலாற்றுப் பெருமைமிக்க சுதந்திரப் போராட்டச் சூழலில் இந்தச் செஞ்சோலை வளாகத்தில் நாம் இன்று இளம் விதைகளைப் பயிரிடுகின்றோம். இவை வேர்விட்டு வளர்ந்து விழுதுகள் பரப்பி விருட்சங்களாய் மாறி ஒரு காலம் தமிழீழ தேசத்தின் சிந்தனைச் சோலையாகச் செழிப்புற வேண்டும் என்பதே எனது ஆவல். இந்த புரட்சிகரமான பணி வெற்றிகரமாக முன்னெடுக்கப்பட எனது நல்லாசிகள்' என்று குறிப்பிட்டிருந்தார்.

செஞ்சோலை சிறுவர் இல்ல மாணவிகள், முல்லைத்தீவு வள்ளிபுனத்தில் தற்காப்புப் பயிற்சியில் ஈடுபட்டிருந்ததை அறிந்த இலங்கை அரச படைகள், 2006ஆம் ஆண்டு காலை 6 மணிக்கு இலங்கை அரச வான்படையின் இரண்டு கிபிர் விமானங்களை அனுப்பி மிலேச்சத்தனமாக தாக்குதல் நடத்தின.

இதில் 61 மாணவிகள் கொல்லப்பட்டதுடன் 100க்கும் அதிகமானவர்கள் படுகாயமடைந்தனர். படுகாயமடைந்தவர்களில் பலர் தற்போது சிறப்புத் தேவையுடைய்வர்களாக உள்ளனர். இந்த தாக்குதல் விடுதலைப் புலிகளின் போர்ப் பயிற்சியில் ஈடுபட்டோர் மீதே நடத்தப்பட்டது என இலங்கை அரசு அப்போது உலக நாடுகளுக்குத் தெரிவித்திருந்த்து.

எனினும் மாணவிகள் தற்காப்புப் பயிற்சியில் ஈடுபட்டிருந்த போதே விமானத் தாக்குதல் நடப்பட்டது என பன்னாட்டுக் கண்காணிப்பாளர்களும் தொண்டு நிறுவனங்களின் அதிகாரிகளும் தெரிவித்திருந்தனர்.

மாணவிகள் படுகொலையின் 12ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு இன்று செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் இடம்பெறவுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது. (21)

### எம்மை...

நேற்று தொழிற்சங்கத் தலைவர்களுடன் நடத்திய சந்திப்பின்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் தெரிவித்துள்ளதாவது

அரசு தொழிற்சங்கவாதிகளைத் தாக்கித் தொழிற்சங்கங்களை அடக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளது. நாட்டின் ஜனநாயகத்தைப் பாதுகாக்க தொழிற்சங்கங்கள் எம்முடன் இணைந்து செயற்பட வேண்டும்..

எமது அரசு ஆட்சியிலிருந்தபோது நாம் அனைத்து வரவு செலவுத் திட்டங்களுக்கு முன்னர் அனைத்துத் தொழிற்சங்கங்களுடனும் பேச்சு நடத்தினோம். அப்போது எம்மை நீங்கள் திட்டிய சந்தர்ப்பங்கள் உள்ளன. சத்தமிட்ட சந்தர்ப்பங்கள் உள்ளன. நாம் அவற்றுக்குப் பதில் வழங்கிப் பிரச்சினைகளைத் தீர்த்தோம்.

அன்று கேட்பதற்கு யாராவது இருந்தனர். பிரச்சினைகள் இருந்தால் அவை அரச தலைவரிடமும் வருவதுண்டு. அதனால்தான் எமது ஆட்சிக் காலத்தில் பணிப்புறக்கணிப்புக்கள் நடைபெற்றதில்லை.

எமக்கு எந்தச் சந்தர்ப்பத்திலும் எவருடனும் பிரச்சினைகள் இருந்ததில்லை. அனைத்துச் சந்தர்ப்பங்களிலும் பிரச்சினைகளைப் பேச்சுக்களின்மூலம் தீர்த்துக் கொள்ளக் கூடியதாக இருந்தது- என்றார். (ற)

### ராணுவத்திடமுள்ள...

திடீரெனச் சென்ற அயலுறவுத்துறை அமைச்சர் திலக் மாரப்பன வவுனியா, மன்னார் மாவட்டச் செயலர்களுடனும், அதிகாரிகளுடனும் சந்திப்பை மேற்கொண்டார்.

வவுனியா, மன்னார் மாவட்டங்களில் இராணுத்தின் வசமிருக்கும் அரச, தனியார் காணிகளின் விவரங்கள், இராணுவத்தினரால் விடுவிக்கப்பட்ட காணிகள் என்பவற்றின் தகவல்களை அவர் பெற்றுக் கொண்டார்.

இந்தியாவில் இருந்து நாடு திரும்புவோர் தொடர்பான விவரங்களையும், அவர்களுக்கு இங்கு காணிகள் உள்ளனவா என்பது தொடர்பிலும் அவர் கேட்டறிந்தார்.

அங்கு கருத்துத் தெரிவித்தபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

படையினர் வசமுள்ள காணிகள் விடுவிக்கப்படும் என்று ஐரோப்பிய ஒன்றியத்திடம் அரசு வாக்குறுதி அளித்துள்ளது. இராணுவத்தினரால் விடுவிக்கப்பட்ட காணிகள் உரியவர்களிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கின்றதா இல்லையா என்பதைக் கண்டறிவதே எனது பயணத்தின் நோக்கமாகும்.

தம் வசமுள்ள காணிகளில் 90 சதவீதமானவற்றை கையளித்துவிட்டோம் என்று படையினர் கூறுகின்றனர். இந்தக் காணிகள் மாவட்ட செயலர்களின் பொறுப்பில் கையளிக்கப்பட்டிருக்க வேண்டும். இந்தக் காணிகள் உரிமையாளர்களிடம் கையளிக்கப்பட்டிருக்கின்றதா? என்ன நடந்துள்ளது? போன்ற விடயங்களை அரசு ஐரோப்பிய ஒன்றியத்துக்குத் தெரிவிக்க வேண்டும்.

இடம்பெயர்ந்து இந்தியாவில் தஞ்சமடைந்துள்ளவர்கள் பலர் நாட்டுக்குத்திரும்பியிருக்கின்றார்கள். நாடு திரும்பியுள்ளவர்களுக்கான மன்னாரின் நடைபெற்ற தூதரக மட்டத்திலான ஆவணங்களைப் பெற்றுக் கொள்வதற்குரிய நடமாடும் சேவையையும் சென்று பார்வையிட்டேன்.

இந்தியாவிலிருந்து நாடு திரும்பியுள்ள குடும்பங்களுடைய காணிகளும் படையினர் வசமுள்ளன என்றும், அந்தக் காணிகள் தங்களுக்குக் கிடைக்கவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. உள்நாட்டில் இடம்பெயர்ந்துள்ள குடும்பங்களினதும் காணிகளும் படையினரால் மீளக் கையளிக்கப்படவில்லை என்றும் முறைபாடு கிடைக்கப் பெற்றுள்ளது.

இவை தொடர்பான விசாரணைகளை மேற்கொண்டு அந்தக் காணிகளை பொது மக்களிடம் கையளிப்பதற்கான நடவடிக்கையை முன்னெடுப்போம்- என்றார். (ற)

### மன்னார்...

சனி, ஞாயிற்றுக் கிழமைகள் தவிர்ந்த ஏனைய நாள்களில் முன்னெடுக்கப்பட்டு வந்தது. தற்போது ஒரு வாரமளவில் இடைநிறுத்தப்பட்டுள்ளது. அதற்கான காரணம் தெரிவிக்கப்படவில்லை.

மன்னார் நகர நுழைவாயிலில் அமைந்திருந்த லங்கா சதொச கட்டடம் உடைக்கப்பட்டு புதிய கட்டடம் அமைக்கும் பணிகள் நடைபெற்றன. அந்தக் காணியில் அகழப்படும் மண் விற்பனை செய்யப்படுகின்றது. அங்கு கொள்வனவு செய்யப்பட்டு மன்னார், எமில் நகரில் வீடொன்றில் கொட்டப்பட்ட மண்ணில் மனித எலும்பு எச்சங்கள் காணப்படுகின்றன என்று வீட்டு உரிமையாளரால் முறைப்பாடு செய்யப்பட்டது.

பொலிஸார் அங்கு சென்று மண்ணை ஆராய்ந்ததுடன், மன்னார் நீதிமன்றின் கவனத்துக்கும் கொண்டு வந்திருந்தனர்.

மார்ச் 27 ஆம் திகதி முதல் தொடர்ச்சியாக 3 நாள்கக்ள் மன்னாரில் நீதிபதியாக அப்போது இருந்த ஏ.ஜீ.அலெக்ஸ்ராஜா மற்றும் சட்ட வைத்திய அதிகாரி ஆகியோர் முன்னிலையில் மண் குவியலில் இருந்தும், வீட்டு வளாகத்துக்குள் பரப்பப்பட்ட மண்ணிலிருந்தும் சந்தேகத்துக்கிடமான எலும்புத் துண்டுகள் மீட்கப்பட்டன.

அதையடுத்து லங்கா சதொச கட்டட கட்டுமானம் இடைநிறுத்தப்பட்டது. அதைத் தொடர்ந்த அகழ்வுப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டிருந்தன.

(ற-60)

### மாநில...

துறை அமைச்சு அண்மையில், மாநிலங்களின் தலைமைச் செயலர்களுக்கு சுற்றறிக்கை ஒன்றை அனுப்பியுள்ளது. அதில் எச்சரிக்கையுடன் அணுகப்பட வேண்டிய நாடுகளின் அமைப்புகளுடன் மாநில அரசுகள் நேரடியான தொடர்புகளைப் பேண வேண்டாம் என்றும், மத்திய உள்துறை அமைச்சின் அனுமதியுடனேயே தொடர்புகளைப் பேண வேண்டும் என்றும் அறிவுறுத்தப்பட்டுள்ளது என்று தெரியவருகின்றது. இந்தியாவின் தேசிய பாதுகாப்புக் கருதி இந்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியுள்ளது என்றும் குறிப்படப்பட்டுள்ளது.

எச்சரிக்கையுடன் அணுகப்பட வேண்டிய நாடுகள் என்ற வரையறைக்குட்பட்ட நாடுகளின் அமைப்புகள் உள்துறை அமைச்சின் அனுமதியின்றி மாநில அரசுகள் மற்றும் பொலிஸாருடன். நேரடியாகத் தொடர்பு கொள்கின்றன என்றும், பயிற்சி, ஒத்துழைப்பு, கருத்துப் பரிமாற்றம், கூட்டுப் பயிற்சி, போன்றவற்றுக்கு அழைப்பு விடுக்கின்றன என்றும் தெரிய வந்துள்ளது.

சட்டம் ஒழுங்கு விடயத்தில் அனைத்துலக ஒத்துழைப்பு முக்கியமானதெனினும், நாட்டின் பாதுகாப்பைக் கருத்தில் கொண்டு சில வெளிநாடுகளின் அமைப்புகளை எச்சரிக்கையுடனும், வரையறுக்கப்பட்ட எல்லையுடனும் அணுக வேண்டிய அவசியம் உள்ளது.

எச்சரிக்கையுடன் கையாள வேண்டிய நாடுகளின் அமைப்புகளிடம் இருந்து, மாநிலங்களின் பொலிஸாருக்கு இத்தகைய கோரிக்கைகள் வரும் போது, மத்திய உள்துறை அமைச்சுடன் கலந்தாலோசிக்காமல் முடிவுகளை எடுக்க கூடாது

தடயவியல் பயிற்சி, வெடிபொருள்கள், புலனாய்வு, ஆயுதங்கள் மற்றும் பாதுகாப்பு தளபாடங்கள் தொடர்பான கொள்வனவு என்று வரும் போது, சில நாடுகள் கவனமுடன் கையாளப்பட வேண்டியவை என்று மத்திய புலனாய்வு அமைப்புகளால் கண்டறியப்பட்டுள்ளன.

உள்நாட்டுப் பாதுகாப்பு விடயத்தில், சீனா, ஆப்கானிஸ்தான், பாகிஸ்தான் ஆகியன எச்சரிக்கையுடன் அணுகப்பட வேண்டியவையாகும். இந்த நாடுகளின் அரச மற்றும் தனியார் அமைப்புகளுடன் மாநில அரசுகள் மற்றும் காவல்துறை நேரடியாகத் தொடர்பு கொள்ளும் போது, அது உள்நாட்டுப் பாதுகாப்பு விடயத்தில் விட்டுக்கொடுப்புக்கு இடமளித்ததாகி விடும் என்று அந்தச் சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது என்று தெரியவருகின்றது.

பயங்கரவாதத் தடுப்பு, போலி நாணயத்தாள், போதைப் பொருள், ஆள்கடத்தல் போன்ற விடயங்களில் எச்சரிக்கையுடன் அணுகப்பட வேண்டிய நாடுகளில் இலங்கை, ஈரான், ஈராக், பங்களாதேஷ், சிரியா, ஆப்கானிஸ்தான் ஆகியன இடம்பெற்றுள்ளன.

அத்துடன் வெளிநாட்டு அமைப்புகள் இந்தியாவில் நடத்தும் பாதுகாப்புத் தொடர்பான கருத்தரங்குகளும் ஆய்வுக்குட்படுத்தப்பட வேண்டும் என்றும் இந்திய மத்திய உள்துறை அமைச்சு அறிவுறுத்தியுள்ளது. (ற)

### சீனாவின்...

னர் அல்லைப்பிட்டிக் கடற்பகுதியில் பயணித்த சீனக் கப்பல் ஒன்று விபத்துக்குள்ளாகி மூழ்கியது என்றும், அந்தப் பகுதியில் அதன் எச்சங்கள் உள்ளன என்றும் சீன அரசுக்குத் தகவல் கிடைத்துள்ளது. அந்தத் தகவலுக்கு அமைய சீன அரசின் ஏற்பாட்டில் 1980ஆம் ஆண்டு ஆரம்ப ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

அதன்போது சில சீன நாணயங்களும், கப்பல் ஒன்றின் சில பாகங்களும் மீட்கப்பட்டன என்று கூறப்படுகின்றது. பின்னர் இலங்கையில் ஏற்பட்ட போரால் இந்த ஆய்வுகள் இடைநடுவே நிறுத்தப்பட்டிருந்தன.

தற்போது அந்த ஆய்வுகளைத் தொடர்வதற்குச் சீன அரசு இலங்கை அரசிடம் விண்ணப்பித்திருந்தது. இருநாடுகளின் ஒத்துழைப்புடன் இருநாட்டுத் தொல்பொருள் ஆய்வாளர்கள் இணைந்து இந்த ஆய்வில் ஈடுபடுவது என்று தீர்மானிக்கப்பட்டது என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

தற்போது அந்தப் பகுதியில் ஆய்வுப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று தெரியவருகின்றது. (ற-105)

# இன்றைய மோதல்கள்

யாழ்ப்பாணம் ஒக்14

**ஐக்கியம் வி.கழக கரப்பந்துத் தொடர்**

மல்லாகம் சிறி முருகன் ஐக்கிய விளையாட்டுக் கழகத்தின் 45ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடத்தப்படும் கரப்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் குறித்த விளையாட்டுக் கழக மைதானத்தில் மின்னொளியில் இடம்பெற்று வருகின்றன.

இந்தத் தொடரில் இன்று செவ்வாய்க்கிழமை இரவு 7 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் புத்தூர் சென்றல் ஸ்ரார் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து நீர்வேலி காமாட்சி அம்பாள் விளையாட்டுக் கழக பி அணி மோதவுள்ளது.

இரவு 8 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் நீர்வேலி காமாட்சி அம்பாள் விளையாட்டுக் கழக ஏ அணியை எதிர்த்து சண்டிலிப்பாய் இந்து இளைஞர் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.

**யாழ். மாவட்ட தாச்சித் தொடர்**

யாழ்ப்பாணம் தாச்சிச் சங்கம் பதிவு செய்யப்பட்ட கழகங்களுக்கு இடையில் நடத்தும் தாச்சித் தொடர் சாந்தை விநாயகர் விளையாட்டுக் கழக மைதானத்தில் மின்னொளியில் இடம்பெற்று வருகின்றது.

இந்தத் தொடரில் இன்று செவ்வாய்க்கிழமை மாலை 6.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் மயிலிட்டிவள்ளுவர் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து உடுவில் ஆலடி சிந்து விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.

இரவு7.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் தாவடி காளியம்பாள் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து கோண்டாவில் மறுமலர்ச்சிவிளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. (ம-23)

# றேஞ்சர்ஸ் வி.க. காலிறுதிக்குள்

யாழ்ப்பாணம் ஒக்14

கொற்றாவத்தை றேஞ்சர்ஸ் விளையாட்டுக் கழகம் நடத்தும் 20 வயதுப் பிரிவினருக்கான காற்பந்தாட்டத் தொடரில் காலிறுதிக்குத் தகுதி பெற்றது றேஞ்சர்ஸ் விளையாட்டுக் கழக அணி.

றேஞ்சர்ஸ் விளையாட்டுக் கழக மைதானத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் கொற்றாவத்தை றேஞ்சர்ஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து யங்லயன்ஸ் விளையாட்டுக் கழக அணி மோதியது. 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று காலிறுதிக்குத் தகுதி பெற்றது றேஞ்சர்ஸ். (ம-23)

# தேசிய ரீதியிலான பளுதூக்கல் தொடரில் யாழ்ப்பாணம் பளுதூக்கும் கழகம் மகுடம்



யாழ்ப்பாணம், ஒக. 14

இலங்கை பளுதூக்கும் சம்மேளனம் நடத்திய இலங்கை இன்ரமீடியா பளுதூக்கல் சம்பியன்சிப் தொடரில் ஆண்கள் பிரிவில் யாழ்ப்பாணம் பளுதூக்கும் கழகம் சம்பியனானது.

இலங்கை பளுதூக்கும் கழகங்களுக்கு இடையிலான இருபாலாருக்குமான பளுதூக்கல் தொடர் கொழும்பு டொறிங்டன் உள்ளக விளையாட்டரங்கில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

இதில் யாழ் பளுதூக்கும் கழகத்தை பிரதிநிதித்துவம் செய்த எஸ்.விஸ்ணுகாந் 77 கிலோ எடைப் பிரிவில் சினெச் முறையில் 108 கிலோ கிளின் அன் ஜக் முறையில் 137 கிலோவுமாக ஒட்டுமொத்தமாக 245 கிலோ பளுவைத் தூக்கி தங்கப்பதக்கத்தையும். வி.விஜயசங்கர் 105 கிலோ எடைப் பிரிவில் சினெச் முறையில் 105 கிலோவும் கிளின் அன் ஜக் முறையில் 140 கிலோவும் என்று ஒட்டுமொத்தமாக 245 கிலோ பளுவை தூக்கி தங்கப்பதக்கத்தையும். என். டிலக்ஸ்குமார் 105 கிலோவிற்கு மேற்பட்ட பிரிவில் சினெச் முறையில் 90 கிலோவும் கிளின் அன் ஜக் முறையில் 111 கிலோவும் என்று ஒட்டுமொத்தமாக 201 கிலோ பளுவைத் தூக்கி தங்கப் பதக்கத்தையும், எஸ்.சிவப்பிரியன் 69 கிலோ எடைப் பிரிவில் சினெச் முறையில் 90 கிலோவும் கிளின் அன் ஜக் முறையில் 109 கிலோவும் என்று ஒட்டுமொத்தமாக 199 கிலோ பளுவைத் தூக்கி வெள்ளிப் பதக்கத்தையும் கைப்பற்றினர். (ம-23-422)

# பன்னாட்டு ஆட்டங்களில் விரைவில் லசித் மலிங்க

## சில ஆலோசனைகளுடன் ஹத்துருசிங்க வெளிப்படை



பன்னாட்டு கிரிக்கெட் அரங்குக்கு விரைவில் மலிங்க வருவார் என்று நம்பிக்கை தெரிவித்தார் இலங்கை அணியின் தலைமைப் பயிற்சியாளர் ஹத்துருசிங்க.

அண்மைக்காலமாக இலங்கை அணியில் இருந்து புறக்கணிக்கப்பட்டு வரும் மலிங்க. தென்னாபிரிக்காவுக்கு எதிரான ரி20 ஆட்டத்துக்கான இலங்கை அணியிலும் இடம்பெறவில்லை.

இதனால் மலிங்கவின் சகாப்தம் முடிவுக்கு வருகிறதா என்று எதிர்பார்க்கப்படும் நிலையில் இவ்வாறு தெரிவித்தார் ஹத்துருசிங்க.

"மலிங்க எங்களுடைய திட்டத்தை முழுமையான நிறைவேற்ற வேண்டும் என்று தேர்வுக்குழு விரும்புகிறது. அவர் உள்ளூர் ஆட்டங்களில் விளையாட வேண்டும். இதில் நாங்கள் யாருக்கும் விதிவிலக்கு அளிக்கமாட்டோம்.

அணியில் உள்ள கிரிக்கெட் கலாசாரம் பாதுகாக்கப்பட வேண்டும். அவரை மாறுபட்ட கோணத்தில் அணுக இயலாது. மலிங்க தரம் வாய்ந்த வீரர். முந்தைய காலத்தில் பந்துவீசிய மாதிரி தன்னால் தற்போதும் பந்து வீச இயலும் என அவர் நிரூபிக்க வேண்டும்.

பன்னாட்டு அரங்கில் அவர் விளையாடுவதற்கு விரும்பினால். உள்ளூர் தொடரில் விளையாட வேண்டும். அதுவே மலிங்கவை மீண்டும் அணியில் இணைப்பதற்கான படிநிலையாக அமையும். இதைப் புரிந்துகொண்டு செயற்பட்டு மலிங்க விரைவில் வருவார் என்று நம்புகிறேன்" என்று ஹத்துருசிங்க மேலும் தெரிவித்தார். (ம)

# அண்ணா சிலையடி அணி காலிறுதிக்கு தகுதிபெற்றது

யாழ்ப்பாணம், ஒக் 14

கொற்றாவத்தை றேஞ்சர்ஸ் விளையாட்டுக் கழகம் நடத்தும் 20 வயதுப் பிரிவினருக்கான கால்பந்தாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் அண்ணா சிலையடி அணி காலிறுதிக்குத் தகுதி பெற்றது.

றேஞ்சர்ஸ் விளையாட்டுக் கழக மைதானத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் அண்ணா சிலையடி விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து கரவைச் சுடர் விளையாட்டுக் கழக அணி மோதியது. 4:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று காலிறுதிக்குத் தகுதி பெற்றது அண்ணா சிலையடி அணி. (ம-23)

# சரஸ்வதி வென்றது

யாழ்ப்பாணம், ஒக. 14

யாழ்ப்பாணம் தாச்சிச் சங்கம் பதிவு செய்யப்பட்ட கழகங்களுக்கு இடையில் நடத்தும் தாச்சித் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் நாவற்குழி சரஸ்வதி விளையாட்டுக் கழக அணி வெற்றி பெற்றது.

சண்டிலிப்பாய் சாந்தை விநாயகர் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் நாவற்குழி சரஸ்வதி விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து சுதுமலை யுவசக்தி விளையாட்டுக்கழக அணி மோதியது.

8:4 என்ற புள்ளிகளின் அடிப்படையில் சரஸ்வதி அணி வெற்றிபெற்றது. (ம-23)

# பாரதி வெற்றி

யாழ்ப்பாணம்,ஒக்14

யாழ்ப்பாணம் தாச்சிச் சங்கம் பதிவு செய்யப்பட்ட கழகங்களுக்கு இடையில் நடத்தும் தாச்சித் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் அளவெட்டி பாரதி அணி வெற்றி பெற்றது.

சாந்தை விநாயகர் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் அளவெட்டி பாரதி விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து புதுமடம் வைகறை விளையாட்டுக் கழக அணி மோதியது. 11:05 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றிபெற்றது பாரதி அணி. (ம-23)

# கனவு மெய்ப்பட்டது வோக்ஸ் உருக்கம்

"லோட்ஸில் சதமடிக்க வேண்டும் என்ற எனது கனவு மெய்ப்பட்டது" என்று தெரிவித்தார் இங்கிலாந்து அணியின் சகலதுறை வீரர் கிறிஸ் வோக்ஸ்.

இந்தியாவுக்கு எதிராக நேற்றுமுன்தினம் முடிவுக்கு வந்த டெஸ்ட் ஆட்டத்தில் வோக்ஸ் அதிரடியாக விளையாடி சதம் கண்டார். இந்திய அணியின் அனைத்து வீரர்களும் ஒட்டுமொத்தமாக இணைந்து பெறமுடியாத ஓட்டங்களை தனிநபராகக் கடந்தார் வோக்ஸ். இதையடுத்தே தனது கனவு நிறைவேறியது என்று தெரிவித்துள்ளார் அவர்.

"லோர்ட்ஸ் மைதானத்தில் சதமடிக்க வேண்டும் என்று நான் சிறு வயது முதலே கனவு கண்டு வந்தேன். அந்தக் கனவு இப்போது தான் நிறைவேறியுள்ளது. லோட்ஸ் மைதானத்தில் சதமடித்த பின்னர் எனக்கு ரசிகர்கள் அனைவரும் எழுந்து நின்று வரவேற்பு கொடுத்தனர். இதை எந்த நாளிலும் மறக்க முடியாது. அது ஒரு நம்ப முடியாத உணர்வாக இருந்தது.

நான் சமீபத்தில்தான் ஒரு குழந்தைக்குத் தந்தையாகி இருந்தேன். அந்த மகிழ்ச்சியை எப்படி கொண்டாடப் போகிறேன் என்று சக வீரர்கள் என்னைக் கேட்டுக்கொண்டே இருந்தனர். குழந்தை பிறந்த மகிழ்ச்சியை, சதமடித்ததுடன் இணைந்து கொண்டாடலாமா என்று மைதானத்தில் நினைத்தேன். ர்ட்ஸ் மைதானத்தில் சத மடித்த நிகழ்வை எப்போதும் மறக்க முடியாது.

சதத்தை நெருங்கும்போது நான் சிறிது நேரம் பதற்றமாக இருந்தேன். ஆனால் எதிர்முனையில் விளையாடிய பரிஸ்ரௌவ் என்னிடம் வந்து நிதானமாக விளையாடு என்று என்னை அமைதிப்படுத்தினார். அது எனக்கு உதவியது. அவரது அறிவுரையைக் கேட்டு பொறுமையாக விளையாடி சதமடித்தேன்.

முதல் இன்னிங்ஸில் விராட் கோலியை குறைந்த ரன்களில் ஆட்டமிழக்கச் செய்தது திருப்தியளிக்கிறது. அவர் ஒரு உலகத் தரம் வாய்ந்த வீரர். டெஸ்ட் தரவரிசையில் முதலிடத்தில் இருக்கிறார்.

அவர்தான் இந்திய துடுப்பாட்ட வரிசைக்கு தூண் போல இருப்பவர். அவரை வீழ்த்தினால் எவருக்கும் திருப்திதானே" என்று மேலும் தெரிவித்தார் வோக்ஸ். (ம)





# ரபேல் நடால் சம்பியனானார்

பன்னாட்டு ரென்னிஸ் சம்மேளனத்தின் தொடர்களில் ஒன்றான றொயேர்ஸ் கிண்ணத் தொடரில் சம்பியனானார் ரபேல் நடால்.

பகிரங்கத் தொடர்களுக்கு அடுத்தபடியான முக்கியத்துவம் மிக்க தொடர்கள் என்று கருதப்படும் தொடர்களில் றொயேர்ஸ் கிண்ணத் தொடரும் ஒன்று. பன்னாட்டுத் தரப்படுத்தலில் முதலிடத்தில் உள்ளவரும் ஸ்பெய்ன் வீரருமான நடாலை எதிர்த்து கிரீஸ் நாட்டைச் சேர்ந்த இளம் வீரர் சிட்சிபாஸ் மோதினார்.

மூன்று செற்களைக் கொண்டதாக ஆட்டம் அமைந்தது. ஆரம்பம் முதல் நடாலின் ஆதிக்கமே ஆட்டத்தில் நிறைந்திருந்தது. முதலாவது செற்றை 6:2 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றினார் நடால். அவர் இரண்டாவது செற்றையும் 7:6 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றியதை அடுத்து 2:0 என்ற நேர் செற் கணக்கில் வெற்றிபெற்றார். இந்த வெற்றியைப்பெறுவதற்கு வெறும் 46 நிமிடங்கள்தான் நடாலுக்குத் தேவைப்பட்டன. (ம)





# பிக்காய் ஓய்வு!

ஸ்பெய்னின் நட்சத்திர வீரர் ஜெராட் பிக்காய் பன்னாட்டு அரங்கில் இருந்து விடைபெற்றுச் சென்றார்.

ரஷ்யாவில் அண்மையில் நடைபெற்ற உலகக்கிண்ணத் தொடரில் ஸ்பெய்ன் முதல் சுற்றுடன் வெளியேறியது. ஸ்பெய்னின் இந்த மோசமான பெறுபேறுக்கு பிக்காயும் முக்கிய காரணம். ரஷ்யாவுக்கு எதிரான ஆட்டத்தில் மூலை உதையொன்றை தடுப்பதற்கு எத்தனிக்கையில் பிக்காயின் கையில் பந்துபட்டது. இதையடுத்து பெனால்டி வாய்ப்பு வழங்கப்பட்டது. அந்த வாய்ப்பை ரஷ்யா பயன்படுத்தியது. ஆக, பிக்காயால் தோற்றது ஸ்பெய்ன். இதனால் அவர் மீது பெரியளவிலான மோசமான விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டன. இதையடுத்து தனது ஓய்வு குறித்துப் பரிசீலித்து வந்த அவர் நேற்றுமுன்தினம் தனது ஓய்வு முடிவை அறிவித்தார். கழகத்தைப் பொறுத்தவரையில் ஸ்பெய்னின் பார்சிலோனா கழகத்துக்காக பிக்காய் விளையாடி வருகிறார். இதனால் அவர் தனது எஞ்சியுள்ள காலத்தை பார்சிலோனாவில் செலவிட இருப்பதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

ஸ்பெய்னுக்காக இதுவரை மூன்று உலகக்கிண்ணத் தொடர்களில் பிக்காய் விளையாடியுள்ளார். மொத்தமாக 102 ஆட்டங்களில் களமிறங்கியுள்ளார். (ம)



# பி.சி.சி.ஐ. தலைவராகிறார் 'கப்டன் ஹொட்' கங்குலி

இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையின் தலைவராக இந்திய அணியின் முன்னாள் தலைவர் கங்குலி நியமிக்கப்பட வாய்ப்புக்கள் உள்ளன என்று இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.


இந்திய கிரிக்கெட் கட்டுப்பாடுச் சபையின் தலைவராக இருந்த அனுராக் தாகூரை பதவியில் இருந்து நீக்கிய இந்திய உச்ச நீதிமன்றம், அதற்கென தனிக் குழுவை நியமித்தது. நீதிபதி லோதா குழு பரிந்துரைத்த நிர்வாகிகளின் கீழ் இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை தற்போது இயங்கிக் கொண்டிருக்கின்றது. இந்த நிலையில் இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையின் அடுத்த தலைவராக இந்திய அணியின் முன்னாள் தலைவர் கங்குலியை நியமிக்கப் பரிந்துரைக்கப்பட்டுள்ளது. தலைவராக இருப்பவர்களுக்கு என சில தகுதிகளை நீதிபதி லோதா குழு பரிந்துரைத்தது. இந்தத் தகுதிகள் கங்குலிக்கு இருப்பதால் அவர் நியமிக்கப்பட வாய்ப்பு அதிகமாக உள்ளது. தற்போது, மேற்கு வங்க கிரிக்கெட் சங்கத்தின் தலைவராக இருக்கும் கங்குலி, இந்திய கிரிக்கெட் தொழில்நுட்ப பிரிவு, ஐபிஎல் ஒழுங்கமர்வுகுழு உறுப்பினர், கிரிக்கெட் ஆலோசகர் குழு என பலவற்றில் இடம்பிடித்துள்ளார். கங்குலிக்கு மூத்த வீரர்கள் பலரின் ஆதரவும் இருப்பதால் அவர் தலைவராவதில் சிக்கல் இருக்காது என்றும் கருதப்படுகிறது. (ம)

# டினேஸ் கார்த்திக் மீது கங்குலி கடும் கோபம்

இங்கிலாந்துக்கு எதிரான இரண்டாவது டெஸ்ட் ஆட்டத்தில் துடுப்பாட்டத்தில் தடுமாறிய டினேஸ் கார்த்திக் மீது இந்திய அணியின் முன்னாள் தலைவர் கங்குலி கடும் அதிருப்தி தெரிவித்தார்.

"இந்திய வீரர்கள் ஆட்டமிழந்த விதம் புரிந்துகொள்ள முடியாமல் இருந்தது. இன்னும் மோசம் என்னவெனில் இன்னும் 3 டெஸ்ட் ஆட்டங்கள் உள்ளன.

இந்திய வீரர்கள் எப்படி தங்கள் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணப்போகிறார்கள் என்று தெரியவில்லை. வேண்டுமானால் ரஹானேவை மீண்டும் அணியில் சேர்ப்பார்கள். புஜாரா மட்டுமே 70 பந்துகள் நின்றார். ஆனால் அணிக்குத் தேவை ஓட்டங்கள். அழுத்தத்தையும் சுமையையும் குறைக்க வேண்டுமெனில் வெறும நேரத்தில் நிற்பது மட்டும் போதாது. ஓட்டங்களும் தேவை. அடித்து ஆடினால்தான் எதிர்முனையில் இருக்கும் வீரருக்கும் தன்னம்பிக்கை வரும். ஆட்டம் ஆரம்பமாகும் அணிக்கு வர வேண்டும். கார்த்திக் மிக மோசமான திறனில் (போர்ம்) இருக்கிறார். ஆட்டம் ஆரம்பமாகும் அன்றைய தினம் காலையில் நான் வலைப்பயிற்சியில் கார்த்திக் துடுப்பெடுத்தாடியதைப் பார்த்தேன். வலையில் கூட அவரால் பந்துடன் மட்டையை தொடர்புபடுத்த முடியவில்லை. மேலும் ஒரு இடது கை வீரர் அணிக்குத் தேவை. அந்த வகையில் பன்ட் ஆட்டத்தின் போக்கை மாற்றக் கூடியவர்" என்று கங்குலி மேலும் தெரிவித்தார். (ம)



# அணித் தெரிவில் தவறு செய்தேன்

## விராட் கோக்லி ஒப்புதல்

“இங்கிலாந்துக்கு எதிரான இரண்டாவது டெஸ்ட் ஆட்டத்துக்கான அணித் தெரிவில் தவறு செய்தேன்” என்று ஏற்றுக்கொண்டுள்ளார் இந்திய அணியின் தலைவர் கோக்லி.

இங்கிலாந்துக்கு எதிராக லோட்ஸில் நடைபெற்ற இரண்டாவது டெஸ்ட் ஆட்டத்தில் இந்திய அணி இன்னிங்ஸால் தோல்வியடைந்தது. அந்த அணியின் இந்த மோசமான தோல்விக்கு அணித் தெரிவு முக்கிய காரணம் என்றும் அதற்குரிய பொறுப்பை கோக்லி ஏற்க வேண்டும் என்றும் அழுத்தங்கள் குவிந்தன.

குறிப்பாக, இலக்குக் காப்பாளர் டினேஸ் கார்த்திக்குக்குப் பதிலாக பண்ட், ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் முரளி விஜய்க்குப் பதிலாக தவான், சுழல்பந்து வீச்சாளர் குல்தீப் யாதவுக்குப் பதிலாக வேகப்பந்து வீச்சாளர் உமேஸ் யாதவ் அணிக்குள் இடம்பிடித்திருக்க வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டது. அதாவது இந்திய அணி துடுப்பாட்ட வரிசையின்படி தவான், லோகேஸ் ராகுல், புஜாரா, கோக்லி, ரகானே, பாண்டியா, அஸ்வின், பண்ட், உமேஸ் யாதவ், இசாந் சர்மா, சமி என்றவாறாக அமைந்திருக்க வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டது. இதை கோக்லியும் ஏற்றுள்ளார்.

கோக்லி மேலும் தெரிவித்ததாவது:

நாங்கள் விளையாடிய ஆட்டத்தை நினைத்து எந்த வகையிலும் பெருமை கொள்ள முடியாது. கடைசியாக விளையாடிய 5 டெஸ்ட் ஆட்டங்களுடன் ஒப்பிடுகையில் இந்த ஆட்டத்தில் நாங்கள் முழுமையாக வீழ்த்தப்பட்டு விட்டோம்.

நாங்கள் விளையாடிய விதத்தை பார்க்கும் போது தோல்விக்குத்தான் நாங்கள் தகுதியான அணி என்று எண்ணத் தோன்றுகிறது. நாம் விளையாடி கொண்டிருக்கும் போது வானிலை பற்றி சிந்தித்து கொண்டிருக்க முடியாது. வானிலையை எம்மால் கட்டுப்படுத்த முடியாது. இங்கிலாந்து பந்து வீச்சாளர்கள் ஆடுகளத்தையும், வானிலையையும் நன்கு பயன்படுத்திக் கொண்டனர். அவர்கள் எங்களை ஓட்டங்களை எடுக்க விடாமல் சிறப்பாக செயல்பட்டனர்.

வீரர்கள் தெரிவிலும் தவறு செய்துவிட்டோம். வேகப்பந்து வீச்சுக்கு சாதகமான இந்த ஆடுகளத்தில் இரண்டு சுழற்பந்து வீச்சாளர்களுடன் களமிறங்கியிருக்கக்கூடாது.

குல்தீப் யாதவுக்கு பதிலாக இன்னும் ஒரு வேகப் பந்து வீச்சாளருடன் களம் இறங்கி இருக்கலாம். இந்த ஆட்டத்தில் குல்தீப் வெறும் ஒரு பந்துப்பரிமாற்றம் மட்டுமே வீசினார்.

முதல் டெஸ்ட்டில் இந்தியா போராடியே தோற்றது. ஆனால் இரண்டாவது டெஸ்டில் இந்திய வீரர்கள் அனைத்து துறையிலும் தோல்வி அடைந்துவிட்டனர் என்றார்.

மூன்றாவது டெஸ்ட் ஆட்டம் எதிர்வரும் 18ஆம் திகதி ஆரம்பமாகிறது.

(ம)




### வேலையாள்கள் தேவை

சுன்னாகத்தில் அமைந்திருக்கும் **பெற்றிக்கா பெஷன்** புடைவை நிலையத்திற்கு காசாளர் மற்றும் விற்பனையாளர் பணிகளுக்கான பெண்பணியாளர்கள்தேவைப்படுகின்றனர். கணினிகையாளுகின்ற ஆளுமைகொண்டவர்களும் விற்பனை அனுபவம் கொண்டவர்களுக்கும் முன்னுரிமை வழங்கப்படும். வேலை பழகிக்கொள்ள விரும்புபவர்களுக்கும் முன்னுரிமை வழங்கப்படுவதோடு கவர்ச்சியான சம்பளம் வழங்கப்படும்.

**தொடர்பு - 0710520946, 0212244000**

### பதவி வெற்றிடம்

**01) முகாமைத்துவ உதவியாளர் (பெண்)**

**தகைமை :- A/L** பூர்த்தி, ஆங்கில அறிவு, கணினி அறிவு மற்றும் கீழ்க்காணும் முகவரிக்கு அண்மையில் உள்ளவர்கள் விரும்பத்தக்கது.

தகுதியானவர்கள் தமது சுயவிவரக் கோவையை **24.08.2018** ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடிய வகையில் கீழ்வரும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

**Mary Construction,**
**Koolavady East, Anaikodai, Jaffna.**
**E-mail:- maryconstruction1965@gmail.com**
**T.P:- 021 222 9198, 077 744 8076**


### மரண அறிவித்தல்



| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 20.12.1964 | 13.08.2018 |

**கனகசபை ஜெகநாதன் (பாலு)**

கோப்பாய் இராதம்புலை பிறப்பிடமாகவும், லண்டன் குறோலியை வசிப்பிடமாகவும் தற்போது கோப்பாயில் வசித்தவருமான கனகசபை ஜெகநாதன் நேற்று (13.08.2018) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கனகசபை - பரமேஸ்வரி தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்ற இரத்தினம் - தங்கரத்தினம் (தங்கமணி) தம்பதிகளின் மருமகனும் சுபத்திராவின் (குஞ்சு) அன்புக் கணவரும் ரஜிதா, மதுரா, சுடமிலா ஆகியோரின் பாசமிகு தந்தையும் கங்காசுதனின் அன்பு மாமனாரும் மகாலிங்கம், மகாதேவன், காலஞ்சென்ற மங்கையற்கரசி ஆகியோரின் பாசமிகு சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (14.08.2018) செவ்வாய்க்கிழமை அவரது இல்லத்தில் (கோப்பாய், இராதம்பு) நடைபெற்று பூதவுடல் முற்பகல் 10 மணியளவில் கோப்பாய் கந்தன்காடு இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்.

**077 8590418**



## பார்சிலோனா சம்பியனானது

ஸ்பெய்னின் சுப்பர் கோப்பா தொடரில் கிண்ணம் வென்றது பார்சிலோனா அணி. இதன் மூலம் பார்சிலோனா அணிக்கு அதிக கிண்ணங்களை வாங்கிக் கொடுத்த வீரர் என்கிற அடைவையும் நிலைநாட்டினார் மெஸ்ஸி.

ஸ்பெய்னில் உள்ள பிரபலமான அணி பார்சிலோனா. அந்த அணி சுப்பர் கோப்பா தொடரில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற இறுதியாட்டத்தில் செவில்லாவைத் தோற்கடித்து கிண்ணம் வென்றது.

தனிநபர் பெறுபேறின் அடிப்படையில் பார்சிலோனாவுக்காக மெஸ்ஸி வென்று கொடுத்த 33ஆவது கிண்ணம் இதுவாகும். இதன் மூலம் அந்த அணிக்கு அதிக கிண்ணங்களை வென்று கொடுத்தவராக அவர் மாறியுள்ளார்.

முன்னாள் தலைவர் இனிஸ்டா 32 கிண்ணங்களுடன் முதலிடத்தில் இருந்தார். அவரை தற்போது பின் தள்ளியுள்ளார் மெஸ்ஸி.

(ம)


**விரைவு பொதிகள் சேவை**

விசேட விலை குறைப்பு


UK- 550 /-Kg
கனடா-900 /-Kg
ஜேர்மனி-700 /-Kg
நெதர்லாந்து-700 /-Kg

0768226240

V2 TRAVELS


# அதிரடி தொடரும்

## ராமோஸ் நம்பிக்கை



ரியல் மட்ரிட் அணி ரொனால்டோ இல்லாத நிலையில் தடுமாற்றம் காட்டும் என்று விமர்சிக்கப்படும் நிலையில், ‘ரியல்மட்ரிட் அணிக்கே உரித்தான அதிரடி ஆட்டம் தொடரும்’ என்று நம்பிக்கை தெரிவித்தார் அணித் தலைவர் ராமோஸ்.

ஐரோப்பிய சம்பியன்ஸ் லீக், லாலிகா பருவகாலம் ஆரம்பிக்கப்படவுள்ள நிலையில் இவ்வாறாக நம்பிக்கை தெரிவித்துள்ளார் அவர்.

‘கடந்த பருவ காலங்களைப் போன்றுதான் இந்தப் பருவகாலத்தையும் மிகுந்த புத்துணர்ச்சியுடன் ஆரம்பித்துள்ளோம். ரொனால்டோவின் விலகல் அணிக்கு மிகப் பெரிய பின்னடைவு என்று சொல்லுவதற்கில்லை. ஆனால் ரொனால்டோ சிறந்த வீரர் என்பதிலும் மாற்றுக் கருத்துக்கு இடமில்லை. வீரர்களுக்குள் தற்போது நல்ல நட்புறவு உள்ளது. வீரர்களின் ஓய்வறை ஆரோக்கிறமாக உள்ளது. தொடர்ந்து சிறந்த ஆட்டத்தை வெளிப்படுத்தி அணியை வெற்றிப் பாதையில் பயணிக்க வைப்போம்’ என்று ராமோஸ் மேலும் தெரிவித்தார்.

(ம)

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேஷன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 14.08.2018 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.